பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com

மார்ச் 2021



## கருமலைத் தமிழாழன்

நேர்காணல்

அறிமுகம்

**பி.ஆரோக்கிய செல்வி**

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை
# தமிழ்நெஞ்சம் ®

தோற்றம் 1972 | மார்ச் 2021

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸ்ரி ரஹ்மான்
கவிஞர் பாலமுனை பாறூக்
கவிஞர் நெல்லை உலகம்மாள்
பாவலர்மணி இராம வேல்முருகன்
கவிஞர் தென்றல் கவி
வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்
கவிஞர் அ. முத்துசாமி
கவிஞர் ஈழபாரதி

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்
கவிதாயினி சக்தி ஜோதி

எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...

Amine Mohamed
TAMILNENJAM
59, rue des Entrechats,
95800 Cergy - France.
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com




புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின் கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்



அன்புத் தமிழ்நெஞ்சங்களுக்கு இனிய வணக்கம்!

இப்பூவுலகில் பெண்களின்றி இயக்கமே இல்லை எனச் சொல்லுமளவு, அவர்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேறி வருகின்றனர் என்பது பெருமிதம் கொள்ளக்கூடிய ஒரு விடயமாகும். எங்கு திரும்பினாலும் பெண்கள் சிங்கப் பெண்களாக சாதனை படைத்து வருவதைக் காணலாம்.

தாய்மைப்பேற்றை அடையும் பெண்ணவள், பத்து மாதங்கள் படும் பாடு கொஞ்சமல்ல. அத்தனையும் கடந்து வருமவள் பிரசவ வலியின் உச்சபட்ச வேதனையைத் தாங்கி, இன்னொரு உயிரை உலகுக்கு கொண்டு வருபவள். அதனாலேயே அவர்கள் மனதளவில் மட்டுமன்றி, உடலளவிலும் வலு மிக்கவர்களாகக் கணிக்கப் படுகிறார்கள்.

தாயாக, சகோதரியாக, மனைவியாக, மகளாக, நண்பியாக, காதலியாக, தாதியாக அவர்கள் தாங்கும் பொறுப்புகளில், தம்மைப் பொருத்திக் கொண்டு,ஆற்றும் சேவை மகத்தானது. பொறுமையில் பூமாதேவியையே மிஞ்சக்கூடிய பெண்ணவள் இப்பூமிக்குக் கிடைத்த பெரும் வரமன்றோ?

பண்பாளர்கள் பெண்களின் சேவையைப் போற்றிக் கொண்டிருக்க, தரம் தாழ்ந்த ஒரு சாரார் அவர்களைப் பழித்தே வாழும் அவலமும் அரங்கேறி வருவதை அன்றாடம் காண்கிறோம். அவர்களைத் தலையில் தாங்கிக் கொண்டாடாமற் போனாலும் பரவாயில்லை. அவர்களை மானபங்கம், கற்பழிப்பு, துஷ்பிரயோகம் போன்றவற்றில் ஈடுபடுத்தாமல் இருந்தால், அதுவே அவர்களுக்கு நாமளிக்கும் கௌரவமாக இருக்கும். இதை ஒவ்வொரு ஆணும் புரிந்து கொண்டாலே போதும். பெண் மனதில் அவன் பூஜிக்கப் பட்டு போற்றவும் படுவான்.

மகளிர் இக்காலத்துக்கேற்ற விதமாக பல உருவெடுக்க வேண்டியவ ளாகிறார்கள். சாந்த சொரூபியாக, பத்ரகாளியாக, பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக மகுடம் சூடி பெருமை சேர்க்கிறாள். மென்மையான பெண் இம்மண்ணில் மேன்மையாகப் போற்றப் படுகிறாள்.

எவ்வளவுதான் பெண் சுதந்திரம் பெற்றவளாக சம உரிமையுடன் வலம் வந்தாலும், உலகின் ஏதோ ஒரு மூலையில் அவர்களை அடக்கியாளும் அக்கிரமங்களும் நடக்கத்தான் செய்கின்றன. அது நாகரீக வளர்ச்சி காணாத கிராமப்புறங்களில் மட்டுமல்ல, முன்னேமடைந்த நகர்ப்புறங்களிலும் உண்டு. இது சமுகப் பிரச்சினையாக இருந்தாலும், தனிமனிதனுக்கு பெரும் பங்குள்ளது.

பெண்களைச் சார்ந்தே ஆண்களின் வாழ்க்கையும் இயங்குகிற தென்பதை மறுப்பவர் எவருமிலர். எவனொருவன் தாய்மையைப் போற்றி கண்ணியப் படுத்துவதில் முன்னணியில் இருக்கிறானோ, அவன் என்றும் தரம் தாழ்ந்து விடுவதில்லை. மாறாக, பெண்கள் மனதில் அவன் உயர்ந்திருப்பான். ஆகவே பெண்மையைப் போற்றுவதைச் செயல்களில் நிரூபித்து, பூவையருக்கு கண்ணியமெனும் பூச்சூடி மகிழ்வோம்.

நன்றி!

தமிழ்நெஞ்சம் அமின்

50 ம் ஆண்டில்

# தமிழ்நெஞ்சம்

புகழாரம்

## நூலுக்கோர் புகழாரம்

ஒரு புத்தகத்தின் மீதான வாழ்த்தையே ஒரு புத்தகமாக்க முடியுமா என்று நான் வியந்ததுண்டு முடியும் என்று சொல்லி அதனைச் செய்துகாட்டியிருக்கின்றார் புலவர் ஏ.டி வரதராசன்.

அதுவும் புலவருக்குப் புலி என்று அறியப்பட்ட. வெண்பாவில் நிகழ்த்தியிருக்கின்றார் என்பதுதான் கவனிக்கத் தக்கது..

அதில் கலையழகும், கவினொழுகும் ஆற்றல்மிக்க சொல்லழகும் பூட்டிக் கற்பனைத் தேரில் கம்பீரமாக வலம்வருகின்றார்.. அந்தக் கம்பீரத்தின் பேரழகைப் படிக்கும் போதே தமிழ்நெஞ்சம் என்னும் இதழைப் படிக்க வேண்டும் என்னும் ஆவலைத் தூண்டுமாறு தேனில் பிசைந்த தினைமாவைப் போல் அள்ளித் தருகின்றார்

சொற்கடலோ போர்க்களத்தில் சொல்லி அடிக்கின்ற
விற்கடலோ..! தோண்ட விளைபூமிப் - பொற்கடலோ
சிந்துகின்ற பாற்கடலாய்ச் சேரும் தமிழ்நெஞ்சம்
எந்த கடல்நீ இயம்பு

இந்த ஒரு வெண்பா போதும் உள்ளூற ஆய்ந்து நோக்கினால் அவர் ஒரு வெண் பாக்கடல் என்பதை விளங்கிக் கொள்ளலாம். இப்படி ஒவ்வொரு வெண்பாவும் தமிழ்நெஞ்சம் என்னும் இதழைத் தேயாத வெண்ணிலவாய் வானில் உயர்த்தி எல்லோரும் கண்டு மகிழ வழித்துணை செய்கிறார்.

கற்பனையே தீயாய்க் கவிதையெல்லாம் வான்முகிலாய்ச்
சொற்பதமே காற்றாய்ச் சுடரணியே - நற்புவியாய்ச்
செய்யுள் நதியாய்ச் செழித்த தமிழ்நெஞ்சம்
ஐம்பூதக் கூட்டென்று அறி...

அடடடடா..! ஐம்பூதத்தையும் உருவக அணியால் அழகுசெய்து தமிழ்நெஞ்சம் இதழைத் தரணிபோற்றும் செய்யுளால் அலங்காரம் செய்து ஊர்வலம் நடத்திக் காட்டுகிறார்.

ஒவ்வொரு வெண்பாவும் ஒவ்வொரு சுவையால் தித்திப்பைக் கூட்டுகிறது. இருபத்தோராம் நூற்றாண்டில் இப்படியொரு புலவரா என வியக்க வைக்கிறது. முன்னழகை மோனையாகவும் பின்னழகை எதுகையாவும் காட்டும் கவிஞரின் கற்பனைத்திறன் களிகொள்ள வைக்கிறது..

நல்ல வெண்பாவிற்குத் தலையாய அழகே ஈற்றடிதான், அந்த ஈற்றடியை நுட்பமாகவும் பேரழகாகவும் படைத்துக் காட்டித் தலைநிமிர்ந்து நிற்கின்றார் புலவர்.

சொல்லில் அடங்குமோ சொல்
வளர்ப்பதுகாண் செந்தமிழை வார்த்து
கடன்பட்டே சிந்துதையா கண்
அகந்தன்னில் பூக்கும் அறிவு
என்ன வரம்வேண்டும் எனக்கு

இப்படி ஈற்றடியால் இதயத்தில் சிம்மாசனமிட்டு அமர்கின்றார். தமிழ்நெஞ்சம் இதழாசிரியர் அமின் அவர்களைத் தனியாக இருபது வெண்பாக்களில், அவரின் இதழ்பணியை இலக்கியப் பணியை இடையறாது செய்யும் பதிப்பகப் பணியைப், பல்திறத்துத் தமிழ்ப்பணியை, ஆழ்ந்தாய்ந்து அவருக்குரிய தகுதியைத் திறமையைத் தனித்தமிழில் பாராட்டிச் சீராட்டி அழகு செய்திருக்கின்றார்.

முத்துத் தமிழ்மொழியை முன்வந்து காப்பாற்றும்
சொத்தாய் விளங்கும் சுடர்விளக்கே..! - இத்தனைக்கும்
மெய்யாய் உழைக்கும் மிகையுள்ளச் சேவைக்குக்
கைமாறும் உண்டோ கணக்கு.

அப்பப்பா எத்தனை ஆழம் செறிவு ஆற்றல். அத்தனையும் கலந்து தகுதியுள்ளவரைத் தகுதியான வெண்பாவில் தகுதியானவர் பாராட்டியிருக்கும் பாங்கு அழகு இனிமை வளம்.

இப்படி ஒவ்வொரு வெண்பாவும் தரத்தால் நிரந்தரமாய்ச் சிம்மாசனமிட்டுக் கோலோச்சுகிறது என்பதை படித்து உணர்ந்து மகிழுங்கள்.

பைம்புதற் பூவோடு பால்நிலவோ தேன்தானோ
ஐம்பது வெண்பாவும் ஆழ்கடலோ - பெய்மழை
வேர்நனைக்க பொன்பொலிந்து வீற்றிருக்கும் காடானேன்
யார்தருவார் இந்த. இதம்..!






வள்ளி முத்து




தீட்டிய வெண்பா வெல்லாம்
திகைக்கவே வைத்த திங்கே
கூட்டிய கற்ப னைகள்
குளிரவே சிலிர்த்து சீரில்
ஊட்டிய அணிகள் நெஞ்சை
உலுக்கியே போக உள்ளம்
நாட்டிய வார்த்தை ஆஹா
நர்த்தனம் ஆடு திங்கே

மூச்சென இருந்தால் தானே
முத்தமிழ் கூடும்; வெண்பா
பேச்சென இருந்தா லன்றோ
பெருவசை சேரும்; கோலை
ஓச்சிய பொருள்கள் உங்கள்
ஒண்டமிழ் திறனை காட்ட
வீச்சரி வாளோ என்று
விரலெலாம் நடுங்கிப் போனேன்

இன்னுமே தமிழை காக்க
இனியதோர் மதுவுந் தோற்க
எண்ணுடன் எழுத்துஞ் சேர
எழிற்கவி நாளும் பூக்க
கண்ணிமை யாக என்றும்
கவின்தொடை யோடு பாடும்
உன்னுடன் வெண்பா நாளும்
உடன்வர வாழ்த்து கின்றேன்

தமிழ்நெஞ்சம் அமின்

# நாளும் சொல்ல
# நாளை வெல்ல..!



கூடு விட்டு கூடு பாய
ஓடி வா கள்வனே..!

விண்ணில் மீன் கோர்க்கவா
வீதி கொண்டு சேர்க்கவா
வெள்ளையாய் இரவுகள்
வந்து நித்தம் பூக்க வா

பிள்ளையாய் தேடினேன்
அள்ளியென்னை ஆற்ற வா
கிள்ளையாய் சொல்லியுன்
பெயரை வேதமாக்க வா

வேடன் நீ அம்பிட
வெட்கமின்றி நிக்க வா
கூடம் விட்டு அலைகிறேன்
கொள்ளை கொண்டு போகவா..!

கோதையை மெல்ல மெல்லக்
கூடியின்பம் தீர்க்க வா..!

கூடு விட்டுக் கூடு தாவும்
கோடி வித்தை காட்ட வா

கொல்வதாக் கள்வனே
ஊடல் விட்டுக் கொள் எனை

கரை ஓடம் , ஓடித் தாண்டுமா
ஒத்திசைய ஓட்ட வா..!

நீ நீயாகு நான் நானாவேன்
நாமிருந்த நாட்கள் மட்டும்
நாளும் சொல்ல
நாளை வெல்ல..!

-ச. ஜெயலட்சுமி

# தமிழ்நெஞ்சம்
## பிப்ரவரி 2021 இதழாய்வு

**தமிழ்ச் செம்மல் ஓசூர் மணிமேகலை**

உலகளாவிய தமிழர் நெஞ்சங்களில் இடம்பெற்றுள்ள, பிரான்சிலிருந்து வெளிவரும் பல்சுவை தமிழ்நெஞ்சம், பிப்ரவரி 2021 மின்னிதழ் வழக்கம் போல் மிகச் சிறப்பான வடிவமைப்புடன் சீரிய உள்ளடக்கத்துடன் வெளியாகியுள்ளது. தமிழைத் தன்மூச்சாகக் கொண்டு இயங்கி வரும் இதழாசிரியர் சிறந்த ஆளுமைகளை ஆசிரியர் குழுவிலும் ஆலோசகர்களாகவும் இணைத்து அளப்பரிய சாதனை புரிந்து வருகிறார்.

தலையங்கத்தில் மனித நேயம், மனித உறவுகளை மதித்தாலே போதும் உலகம் நெறிப்படும் என்ற, இன்றைய தேவைக்கான உன்னதக் கருத்தை ஆசிரியர் வெளியிட்டுள்ளது மிகச் சிறப்பு. பூபாளம் பாடும் பரணி என்று உலக சாதனையாளர் கவிஞர் பரணி சுப சேகர் அவர்களை, தமிழ்ச் செம்மல் பாவலர் மணி இராம.வேல்முருகன் அவர்கள் சிறப்பான முறையில் நேர்காணல் கண்டு, எண்ணற்ற விருது பெற்றுள்ள கவிஞர் அவர்களின் முயற்சி , கடின உழைப்பு, ஊக்கம், வெற்றி என்பதை இன்றைய இளங்கவிஞர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டென விளக்கியிருப்பது பாராட்டிற்குரியது.

கவிஞர் பழநி பாரதியின் 'காற்றின் கையெழுத்து' நூல் விமர்சனம் அருமை. கோ.லீலா அவர்கள் கவிஞரின் கருத்துகள்,சமூக அவலங்கள், சமூக நெறிகள், இன்றைய தாக்கங்கள் பற்றித் தெளிவாக விளக்கியுள்ளார். Dr. ஃபஜிலா ஆசாத் அவர்களின் 'பிரியமானவர்கள்' கட்டுரை உறவு நிலைக்க, மகிழ்ச்சி மலர உளவியல் உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாக இருக்கிறது.

தன்னம்பிக்கைச் சிகரம் மாற்றுத் திறனாளி கவித்துளி குமார் கூறும் தன் வாழ்வின் சவால்கள் மனதை கனக்கச் செய்தாலும், அவரது சாதனைகள் கனவுகள் கண்டு நமக்கு பிரமிப்பு ஏற்படுகிறது. அவரது கனவுகள் பலிக்கட்டும். மற்றவர்களுக்கு அவர் Role model ஆக விளங்குகிறார். 'திருக்குறளின் உயர் சிந்தனை அறிந்தால் ஒழியும் துயர் சிந்தனை' என்ற முனைவர் சு. மாதவன் அவர்களின் கட்டுரை அனைவரும் படித்துப் பயன் பெறக்கூடியது.' பாரதியார் போற்றிய முப்பெருங்கவிஞர்கள்' பற்றி பாவலர் பாவை சாவித்திரி கிருஷ்ணமூர்த்தி எளிய நடையில் சிறப்பாக எழுதியுள்ளார்.

சிறுகதைகள் அனைத்தும் காலத்தைக் காட்டும் கண்ணாடியாகத் தெளிந்த நீரோட்டமாக அமைந்துள்ளன. கவிதை பக்கங்களில் கவிஞர்கள் புத்துணர்வுடன் அசத்தியிருக்கிறார்கள். கவிதைகள் பல்வேறு கருத்துக்களில் பல்வேறு கோணங்களில் பரிணமித்துக் கொண்டிருக்கின்றன. ஆசிரியர் தமிழ்நெஞ்சம் எழுதிய 'மல்லிகை (டொமினிக்) ஜீவா ' என்ற அஞ்சலிக் கவிதை கண் கலங்க வைத்தது.

அனைத்துப் படைப்புகளும் படைப்பாளர்களின் புகைப்படங்களுடன் பல வண்ணங்களில் மிக நேர்த்தியாக அமைப்பதில் தமிழ்நெஞ்சம் இதழை மிஞ்ச முடியாது என்று நிரூபித்துக் கொண்டிருக்கிற அழகிய மின்னிதழ் நம் உள்ளங்களைக் கொள்ளை கொண்டுள்ளது என்பதில் ஐயமில்லை. தொடரட்டும் தமிழ்நெஞ்சத்தின் வெற்றிப் பயணம் .

வாழ்த்துகள்!



# மண் பயனுற வேண்டும்

உழவு என்பது
தொழில்மட்டுமல்ல
உயிரின் ஆதாரம்
வாழ்வின் நீட்சி....
வரம்பும்
வாய்க்கால் வழி
வழிந்தோடும் நீரும்
விதை நெல்லும்
கதிரும்
ஆயிரம் கதை சொல்லும்..

ஆனாலும்
வயிற்றுக்கு உணவிட்டவன்
வயிற்றில் அடிக்கிறது அரசு

அரசு மானியத்திற்காக
அடமானம்வைக்கப்படுகிறது
உயிர் !

நீர்பாசனம்
வறண்ட நிலத்தில்
உயிர்ப்பாசன மருந்தாகிறது
பூச்சிக்கொல்லி.

புதிய வேளாண்கொள்கைகள்
மரபணு மாற்று விதைகள்
விவசாயி தற்கொலைகள்
வீதிக்கு வந்து நிர்வாணமானவன்
இப்போது
தலைநகர வீதியே
விதியென்று போராடுகிறான்.

விதைத்தவன்
தீர்மானிக்கமுடியாத விலையை
அதானியும்
அம்பானியும் தீர்மானிக்கின்றார்கள்

வாகன உற்பத்தியிலும்
கணினி உற்பத்தியிலும் காசு பார்த்த
கார்ப்பரேட் நிறுவனங்கள்
இப்போது
உரத்திலும் உணவிலும்
கைவைத்துவிட்டார்கள்
இனி நீ எதைச்சாப்பிடவேண்டும்
என்பதை,
அவன்தான்
தீர்மானிக்கப்போகிறான்!

– ஏ.ழபாரதி

# ஹைக்கூ



1.
நெல் மூட்டைகள்
தின்று கொழுக்கும்
பதுக்கிய பெருச்சாளிகள்!

2.
காடழித்து கோவில்
கொண்டாட்டம்
மழை பொய்த்த வானம்!

3.
படத்தில் குழந்தை
வெற்றிடத்தை நிரப்புகிறது
குழந்தையில்லா வீடு!

4.
வானமே எல்லை
தயார் செய்கிறேன்
எனக்கான சிறகுகள்!

56.
வீட்டின் அழைப்பு மணி
சற்றே ஆறுதல்
தொலைந்த குருவியின் சத்தம்!

67.
.கடலில் தீப்பந்தம்
வீசியது யாரங்கே
உதிக்கும் சூரியன்!

78.
வீட்டில் காலி பாத்திரம்
பேசத் தொடங்கியது
மழைத் துளிகள்!

8.
.அமைதியாக இருங்கள்
கடவுளோடு பேசுகிறது
வேண்டியபடி குழந்தை!

90.
புத்த துறவி
தூக்கிச் சுமக்கிறார்
மோட்சத்துக்கான ஆசை!

10
புதிய தார்ச்சாலை
பல்லிளித்துக் காட்டியது
ஊழல் முகங்கள்..!

11
ஊமைப் பெண்
சிரித்தபடி
கை வளையல்கள்!

12.
குளிக்க மனமில்லை
திரும்பி விட்டேன்
தாமரையில் துயிலும் நீர்துளிகள்!

13.
இருந்தும் ஊனம்
நீளாத
உதவிக் கரங்கள்!

14.
அதிகரிக்கும் தொல்லை
விதவையாக துணிகிறாள்
குடிகாரனின் மனைவி!

15.
மிதித்து விடாதீர்
வலிக்கக் கூடும்
குழந்தையின் நிழல்!

- சு. கேசவன்

# தன்முனைக் கவிதைகள்

உன் பேராசைகளை
என்னில் திணிக்காதே,
எதிர்காலத்தின் பக்கங்கள்
கசங்கிப் போகின்றன.

ஆடை அணிகலன்கள் வாங்கி,
அழகு பார்க்கிறேன்.
வாங்க முடியவில்லை,
மணமகனை.

கண் ஜாடையால்,
கவிதை மொழிகிறாய்.
எட்டாவது வானத்தில்
மிதக்கிறது என் மனது.

தேசியக் கொடிக்கு
மரியாதை செய்வதோடு,
முடிந்து விடுகிறது
பலரின் தேசப்பற்று.

அத்துமீறும் உன்விழிகளை
அடக்கிவைத்துக் கொள்.
எல்லை கடந்து
என்னை மேய்ந்து விடுகின்றன.

இனவாடை வீசும்
அரசியல் நகர்வுகள்.
நீதி தேவதையின்
கண்களில் கறுப்புத்துணி.

பூத்திருக்கும் மனங்களில்,
அமர்ந்து கொள்கின்றன,
பட்டாம்பூச்சிகளாய்,
சிறகடிக்கும் கவிதைகள்.

அவளைக் கண்டதும்
கண்கள் கசிகிறது
இளம் வயதினில்
விதவைக் கோலம்.

சின்னங்களை அழிப்பதால்
எண்ணங்கள் சிதைந்திடுமா,
இறப்புகளும் இனவாதமாகும்
சு-தந்திர தேசம்.

என் பாடல்களில்,
பிழைகள் இருப்பினும்,
தந்துவிட்டுச் செல்லுங்கள்,
சில்லறைகளை.



**அய்ஷத் அப்சத்**
பாலமுனை - இலங்கை



# ஆரோக்கியம்

ஒருவர் காலை உணவை சாப்பிடாமல் தவிர்த்தால் உடலில் எத்தகைய பாதிப்புகள் ஏற்படும் என்பதை பற்றி தெரிந்துக்கொள்வோம்.

காலை உணவை தவிர்ப்பதால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் :

காலை உணவை தவிர்ப்பதால் சர்க்கரை நோய் உண்டாவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும்.

காலையில் உணவு உண்ணாமல் இருப்பவர்களுக்கு ரத்தத்தில் குறைவான அளவே சர்க்கரை இருக்கும். இது மூளைக்கு தேவையான சக்தியையும், ஊட்டச் சத்துக்களையும் கொடுக்காமல் மூளையின் செயல் பாட்டை குறைத்து விடுகிறது.

காலையிலிருந்து மதியம் வரை எதுவுமே சாப்பிடாமல் இருக்கும் டைப் 2 சர்க்கரை நோயாளிகளுக்கு ரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகமாகி விடுகிறது. மதிய உணவிலும், இரவு உணவிலும் பெறப்படும் மாவுச்சத்தின் அளவு குறைந்திருந்தால் பிரச்சனை இருக்காது. ஆனால் காலை உணவை தவிர்ப்பதால் நிச்சயம் சிக்கல்தான்.

காலை உணவை தவிர்ப்பவர்களுக்கு இதயம் சார்ந்த நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

காலையில் சாப்பிடாமல் இருக்கும் போது சர்க்கரை அளவு குறைந்து, ரத்த அழுத்தம் அதிகரிக்கும். இதனால் ஒற்றை தலைவலி உண்டாகும்.

காலை உணவை தவிர்த்தால் உயர் ரத்த அழுத்த நோய்கள் ஏற்படும். மேலும், உடலில் ரத்த ஓட்டத்தை பாதித்து, செயல்பாட்டை குறைத்து விடுகிறது.

காலை உணவை தவிர்த்தாலோ அல்லது சரியாக சாப்பிடாமல் இருந்தாலோ பசியின்மை ஏற்படும். இதனால் உடல் எடை கூடுவதற்கான வாய்ப்புகள் அதிகம். காலையில் ஏதேனும் ஒரு உணவை சாப்பிடுபவர்களை விட, காலை உணவை முற்றிலுமாக தவிர்ப்பவர்களுக்கு மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

காலை நேரத்தில் பணிக்கு செல்லும் அவசரத்தில், சாப்பிடாமல் செல்வோர், இனி சற்று நேரம் ஒதுக்கி காலை உணவை சாப்பிட்டுவிட்டு செல்வதால் உடல் ஆரோக்கியம் மேம்படும்.....!

ச. இராஜ்குமார்

# அதிகாரம்

வித்யாசாகர்

ஒரு காட்டில் வாழ்நாள் முழுக்க வேட்டையாடி அலுத்துப்போன புலி ஒன்னு விவசாயிகளுக்கு நன்மை செய்ய நினைத்து வேளாண்மை துறை ஒன்றை ஆரம்பிச்சுது.

அங்கே BSc.(Agri) படித்த ஒரு எறும்பு வேலை செஞ்சுது. அதுபாட்டுக்கு வரும் சுறுசுறுப்பா எல்லா வேலைகளையும் செஞ்சு முடிச்சிட்டு சாயந்திரம் ஆனா வீட்டுக்கு போயிடும்.

புலியாருக்கு ஏக சந்தோசம், நல்ல பலனும் கண்முன்னே கிடைத்தது. நல்லாத்தான் போய்கிட்டிருந்தது,

நம்ம ஆட்சியாளர்களுக்கு தோனுற மாதிரி நடு ராத்திரியில் திடீர்னு புலியாருக்கு ஒரு ஐடியா தோனுச்சு. எறும்பு தனியாவே வேலை செய்யுதே, BSc (Agri) படித்த அதை கண்காணிக்கற அளவுக்கு நமக்கும் போதுமான அறிவு இல்லை,

நாம எறும்பை கண்காணிக்கவும் ஆலோசனை சொல்லவும் ஒரு மேலாளரை (manager) நியமித்தால் பலன் அதிக மாகும்னு ஒரு தேனியை கொண்டு வந்தது.

அந்த தேனியும் வேலையில் ஒரு புலிதான். பல துறைகளில் வேலை செய்த பழுத்த அனுபவசாலி (இப்போ அந்த துறை எல்லாம் இருக்குதான்னு கேக்காதிங்க).

அந்த தேனி சொல்லுச்சு, “பாஸ் எறும்பை அதன் போக்குல விட முடியாது, அதுக்கு முறையான ஒர்க் ஷெட்யூல் போட்டுக் கொடுத்தால் இன்னும் கூடுதலா வேலை வாங்கலாம். அதுக்கு நிறைய வேலை இருக்கு எனக்கு ஒரு செக்ரட்ரி வேணும்” னுது.

புலிக்கு ஏக சந்தோஷம் இந்த தேனி என்னமா யோசிக்குது நமக்கு இவ்வளவு நாளா இது தோனலையேன்னு ஒரு முயலை செக்ரட்டரியாக்குச்சு.

அத்தோட புலியார் நமக்கும் கொஞ்சம் தெரியும்னு காட்டிக்க, “ஆள் போட்டாச்சு இனிமே எனக்கு தினமும் வேலை முன்னேற்றம் குறித்து ரிப்போர்ட் வரைபடமாவும் அட்டவணை யாவும் கொடுக்கனும்” னுது.

“ஓகே பாஸ் அதுக்கென்ன, பிரமாதமா செஞ்சிடலாம் அதுக்கு ஒரு கம்ப்யூட்டர், பிரிண்டர், புரொஜக்டர் எல்லாம் வேணுமே”ன்னது,

அப்படியே வாங்கிகிச்சு

ஒரு கம்ப்யூட்டர் டிபார்ட்மெண்டும் பூனை ஒன்றின் தலைமையில் அமைச்சாச்சு.

இப்போ ஏகப்பட்ட கெடுபிடி நெருக்கடிகளால் விரக்தியடைந்த அந்த எறும்போட வேலையில் ஒரு தொய்வு வந்துச்சு. பலன் குறைந்தது. புலி நினைச்சுது, எல்லாம் சரியா இருந்தும் ஏனிப்படி?

தேனியோட ஐடியாக்களை எறும் புக்கு விளக்கமா எடுத்துச்சொல்ல ஒரு தொழில்நுட்ப ஆலோசகரை போடுவோம்னு ஒரு குரங்குக்கு அந்த வேலையை கொடுத்தது. ஏற்கனவே டல்லான எறும்பை இப்போது குரங்கும் அதன் பங்குக்கு குழப்ப அன்றைய தினத்துக்காக திட்டமிடப்பட்ட வேலைகளை அன்றைக்கே முடிக்காமல் போனது எறும்பு.

மேலும் எந்த வேலையும் ஒழுங்கா நடைபெறவில்லை.

‘எதைத்தான் தின்னா பித்தம் தெளியும்’ என்ற மனநிலைக்கு ஆளான புலியார் நஷ்டத்தை சரி செய்ய என்ன செய்யலாம்னு ஆராய ஆந்தையை நியமிச்சது. ஆந்தை மூன்று மாத ஆராய்ச்சிக்கு பின் கடைசியா இப்படி சொன்னது.

“துறையில் தேவைக்கு அதிகமா ஆள் இருப்பதே காரணம் யாரையாவது வேலையை விட்டு எடுத்துட்டா நிலைமை ஓரளவு சீராகும்”

“யாரை எடுக்கலாம் அதையும் நீயே சொல்லிடு” என்றது புலி. “அதிலென்ன சந்தேகம் சரியாக வேலை செய்யாத அந்த எறும்பைதான்” அதிரடியாக சொன்னது ஆந்தை.

■

# வாழ்வு தேடும் நெஞ்சங்கள்



ஊணுக்கும் வழியில்லை
உறங்கவோர் இடமில்லை
வீணுக்கேன் பிறந்தோமென
வீதிகளில் அலைந்து நிதம்
வாழ்வு தேடும் நெஞ்சங்கள்.

பஞ்சத்தில் பரிதவித்து
நெஞ்சத்தில் தவிப்புடனே
ஏழையின் குடிசைகளில்
ஏங்கியழும் சிறுவர்களின்
வாட்டத்தைப் போக்கிடவே
காடு மலை கழனிகளில் - நிதம்
கூலி தேடும் நெஞ்சங்கள்.

வீடுகளில் உறவுகளின்
வறுமைதனைப் போக்க எண்ணி
மனைவி மக்கள் தனை இழந்து
நாடு விட்டு நாடு சென்று
வாழ்வுதனைத் தேடுகின்ற
வாட்டமுற்ற நெஞ்சங்கள்.

இல்லறத்தை இன்பமுடன்
ஏற்றிடவே மறந்திங்கு
நல்ல பல செல்வங்களை
நட்டாற்றில் நழுவ விட்டு
குடியும் கூத்தியரும்
கொண்டதே வாழ்க்கையெனத்
தேடித் தினம் அலைகின்ற
திக்கற்ற நெஞ்சங்கள்.

தேடிய செல்வங்களை
மூடிப் பதுக்கி வைத்து
கோடிகளாய்க் குவிந்திடினும்
மாடி மனை அமைந்திடினும்
மனதினிலே அமைதியின்றி
ஓடியோடி உழைத்திங்கு
வாழ்வு தேடும் நெஞ்சங்கள்.

விண்ணதிரும் குண்டுகள்
துப்பாக்கி வேட்டுகள் முன்
மண்டியிட்டு அழுகின்ற
மானிடரின் மரண ஓலம்
பதுங்கு குழி பற்றைக்காடு
பள்ளங்களில் படுத்துறங்கும்
பச்சிளங் குழந்தைகள்தம்
வாழ்வுதனைத் தேடியிங்கு
பரிதவிக்கும் நெஞ்சங்கள்.

நஸீரா எஸ். ஆப்தீன்

# நீருக்கு நீர்தான் எதிரி...

பாரியன்பன் நாகராஜன்

1.
மெலிந்த மேனியில்
இருட்டைக்கிழிக்க
ஒளிகூட்டிடும் தீபம்.
காற்று தென்றலாய்த்
தவழாத கணங்களிலும்
நாசியில் வந்தமரும் வாசம்.
கடுங்கோடையிலும்
செடிகள் தோறும்
முத்தமிடும் பனித்துளி.
வேர்களுடனான
அந்தரங்கக்காதலை
வெளிக்காட்டாதது மண்.
எட்டும் தொலைவில்
இருப்பதாய்த் தெரியும்
ஆகாயம் மாயை.
நீ வெறுத்தாலும்,மறுத்தாலும்
உன்னையே வட்டமிடும்
என் பளிங்குமனசு...!



2.
மனத்தின் விளிம்பு வரை
தளும்புகிற நிலையில்
அலுப்பின்றி
கொடுத்துக்கொண்டிருக்கிறாய்
உன் நினைவிழைகளை.
இதயக்கரைகளை உடைத்து
வற்றாத ஜீவநதியாய்ப்
பிரவாகமெடுத்துப் பாய்கிறது
என்னில்.
என்னுயிரிழைகளைக்
கூர்த்தீட்டி கூர்த்தீட்டி
அவை யாகமும் நிகழ்த்துகின்றன.
நெருப்புக்கு எதிரி நீராகலாம்
நீருக்கு நீர்தான் எதிரி.
உயிரிருத்தல் மட்டும் போதாது
நினைவிழைகளை மீட்டிட
சாகாவரம் வாங்கிடவேண்டும்
ஆன்மா!

3.
எனக்கான வானத்தை
சிறுவட்டத்திற்குள்
முடக்கிவிட,
உனக்கான வானத்தை
வலைபின்னிய
சதுரசன்னலுக்குள்
சிறைப்பிடித்திட,
பெயர்த்தெரியா
பறவையொன்று-
மொத்த வானத்தையும்
தனதாக்கியபடி,
வலம் வருகிறது
சுதந்திரமாய்...!



## சந்திப்பு தமிழ்ச்செம்மல் இராம வேல்முருகன்

# கருமலைத் தமிழாழன்

### நேர்காணல்

இவரில்லாமல் தமிழக மரபுக்கவிதை வரலாற்றை எழுத இயலாது. கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக இலக்கிய உலகில் கவிஞராக வலம்வருபவர். இவருடைய கவிதைகள் பள்ளி கல்லூரி மாணவர்களின் பாடங்களில் வைக்கப் பட்டுள்ளன. மலேசியப் பள்ளிக் கூடங்களிலும் இவரது பாடல் பாடமாக உள்ளது. தமிழாசான் தலைமை ஆசானாகப் பணி செய்து ஓய்வு பெற்ற தமிழ்ச்செம்மல். எண்ணற்ற நூல்களை எழுதியவர். நரேந்திரன் என்ற தனது இயற்பெயரை கருமலைத்தமிழாழன் என்று மாற்றிக் கொண்ட ஐயா கருமலைத் தமிழாழன் அவர்களுடனான நேர்காணலை இப்போது காணலாம்.

வணக்கம்

ஐயா ஐம்பது வருடங்களுக்கு மேலாக இலக்கியப்பயணத்தில் உள்ள தங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்வு ஐயா தமிழ்நெஞ்சம் மின்னிதழ் சார்பாகத் தங்களுக்கு எனது இனிய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்

கருமலைத் தமிழாழன் என்ற பெயரோடு வலம்வரும் தங்கள்

- இயற்பெயர் என்ன?

என்னுடைய இயற்பெயர் கி.நரேந்திரன். உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் தமிழாழன் என்ற பெயரைச் சூட்டினார்.

- தங்கள் பிறந்த ஊர் எது?

நான் பிறந்த ஊர் கிருட்டினகிரி. கிருட்டினகிரி என்பது வடமொழிப் பெயராக இருப்பதால் அதனைக் கருமலை எனத் தமிழ்ப் படுத்தினேன். அதனால் ஊர் பெயரைச் சேர்த்து கருமலைத்தமிழாழன் என்ற புனைப்பெயரில் எழுதலானேன்.

- தங்கள் பெற்றோர் பற்றி.

தந்தை பெயர் மு.கிருட்டினன், தாய் பெயர் ச.இராசம்மாள். தந்தை பொறியாளராகப் பணியாற்றியவர். தாய் இல்லத்தரசி.

- தங்கள் பள்ளி மற்றும் கல்லூரிக்

கல்வி குறித்து ..

பள்ளிக் கல்வி கிருட்டினகிரி அரசு உயர்நிலைப் பள்ளியில் படித்தேன். புகுமுக வகுப்பு கிருட்டினகிரி அரசு கலைக் கல்லூரியில் படித்தேன். சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் வித்வான் (புலவர்) படித்தேன். குமாரபாளையம் பி,எட் கல்லூரியில் பி.எட் பட்டம் பெற்றேன். எம்.ஏ., எம்ஃபில் பட்டங்களை மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்திலும் எம்.எட் பட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் பெற்றேன்.

கவிக்கோ அப்துல் ரகுமான் கவிதைகளில் தொன்மம் என்ற தலைப்பில் ஆய்வு செய்து எம்ஃபில் பட்டம் பெற்றேன்.

● பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி தலைமைஆசிரியராக உயர்ந்து ஓய்வு பெற்றுள்ளீர்கள் எந்தெந்த ஊர்களில் பணியாற்றி உள்ளீர்கள்?

தமிழாசிரியராக தருமபுரி, கிருட்டினாபுரம், ஒசூர் ஆகிய ஊர்களிலும், உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராக மத்தகிரி, காமன்தொட்டி, சூளகிரி, பேரண்டபள்ளி ஆகிய ஊர்களிலும் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியராக இராயக்கோட்டையிலும் மொத்தம் 36 ஆண்டுகள் பணியாற்றினேன்.

● தங்களிடம் கல்வி பயின்ற மாணவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் இரண்டு பேர் மட்டும் குறிப்பிட வேண்டுமென்றால் யாரைக் குறிப்பிடுவீர்கள்? ஏன்?

திரு. மாதேசுவரன் என்ற மாணவன் படிக்கும் காலத்திலேயே கவிதைகள் எழுதுவான். இலக்கிய மன்றக் கூட்டங்களில் அதிகம் பங்கு பெறுவான். பிற்காலத்தில் பொதுத்தொண்டில் ஈடுபாடு கொண்டு ஒசூர் நகராட்சித் தலைவராகத் தேர்வு பெற்று சிறந்த முறையில் நிர்வாகம் செய்தான்.

திரு. பாலாசி என்ற மாணவன் அறிவுக் கூர்மை உடையவன் . படிக்கின்ற

தமிழக அரசு வழங்கிய தமிழ்ச்செம்மல் விருது பெறும் தருணம்



காலத்திலேயே சிறந்த பேச்சாளனாகத் திகழ்ந்தான். கவிதைகளை எழுதுவான். தற்பொழுது கணிதப் பட்டதாரி ஆசிரி யராகப் பணியாற்றி வருகிறான். சிறந்த கவிஞனாகத் திகழ்கிறான். முகநூல் குழுக்கள் பலவற்றில் சிறப்பாகக் கவிதை கள் எழுதிவருகிறான்.

● கவிதைஎழுதும் ஆர்வம் எவ்வாறு வந்தது? அதற்கான தூண்டுகோல் எதுவாக இருந்தது?

பள்ளியில் படிக்கின்ற பொழுதே கவிதைகள் எழுதி வந்தேன். அதற்குக் காரணம் என்னுடைய ஆசிரியர்கள் திரு. பெருமாள்ராசு அவர்களும், திரு.இராமானுசம் அவர்களும் ஆவார்கள். அவர்கள் கற்றுக் கொடுத்த பாடங்கள், செய்யுள் நடத்திய விதம் என்னைக் கவிதை எழுதத் தூண்டியது.

● முதல் கவிதை எப்போது பிரசுர மானது எந்த இதழில் பிரசுரமானது?

நான் புகுமுக வகுப்பு படிக்கின்ற காலத்தில் 1969 இல் முதல் கவிதை வெண்பா வாக முதலில் அச்சில் வந்தது. பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் நடத்திய குயில் இதழை அவருக்குப் பின்னால் திண்டிவனத்திலிருந்து கவிஞர் வஃகாப் அவர்கள் நடத்தி வந்தார். அந்தக் குயில் இதழில் தான் முதல் கவிதை வெளிவந்தது.

● தாங்கள் மரபுக் கவிதைகளைத் தேர்ந்தெடுத்ததன் காரணம் என்ன?

என்னுடைய ஆசிரியர்கள் திரு. பெருமாள்ராசு, திரு.இராமானுசம் ஆகி யோர் நான் தொடக்கக்காலத்தில் எழுதிய கவிதைகளைத் திருத்தி யாப்பில் எழுதினால் தான் சிறப்பாக இருக்கும் எனச் சொல்லிச் சொல்லி எழுதவைத்ததால் மரபில் எழுதும் பழக்கம் ஏற்பட்டது. அதுவும் அப்பொழு தெல்லாம் பல இதழ்களில் வெண்பா ஈற்றடி கொடுத்து எழுதச் சொல்வார்கள் அதனால் வெண்பாக்கள் எழுதி எழுதி பழகியதால் மரபின் மீது பிடிப்பும் பற்றும் ஏற்பட்டு அதுவே பழக்கமாகிவிட்டது.

● நிறைய இதழில் தங்கள் வாசகர் கடிதங்களைக் காணமுடிகிறது? எவ்வாறு தங்களுக்கு நேரமுள்ளது?

படைப்பாளனுக்கு அவனுடைய படைப்பைப் பற்றிய பாராட்டு தான் மேலும் மேலும் எழுதத் தூண்டும். அதனால் எந்த இதழைப் படித்தாலும் இரண்டு வரி அதைப்பற்றி எழுதிவிடுவேன். இந்தப் பழக்கம் இதழ்கள் படிக்கத் தொடங்கிய ஆரம்ப காலத்திலிருந்தே இருக்கிறது.

● புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் குயில் பத்திரிகையில் தங்கள் கவிதை வெளிவந்துள்ளது. அவரை நேரில் சந்தித்துள்ளீர்களா? அந்த அனுபவம் பற்றி.

பாவேந்தர் பாரதிதாசன் அவர் களை நேரில் சந்தித்ததில்லை. அவர் இறந்த போது நான் ஏழாம் வகுப்பு படித்து வந்தேன். நான் புகுமுக வகுப்பில் படிக்கும் பொழுது எனக்கிருந்த பேராசிரியர் திரு. கண்ணன் அவர்கள் தான் குயில் ஏட்டை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர்தான் என் கவிதையைக் குயில் ஏட்டிற்கு அனுப்பியும் வைத்தார். அதற்குப் பின் பாரதிதாசனாரின் மகன் மன்னர் மன்னனுடன் தொடர்பு ஏற்பட்டது. அவர் அப்பொழுது பாண்டிச்சேரி வானொலியில் பணியாற்றி வந்தார். பாண்டிச்சேரி வானொலி நிலையத்தில் கவிதை வாசிக்கும் வாய்ப்பை எனக்களித்தார். பல முறை என்னுடைய கவிதைகள் ஒலிபரப்பாயின.

● உவமைக் கவிஞர் சுரதா அவர் களுடன் நட்பு கொண்டவர் தாங்கள். அவருடனான நட்பு பற்றிக் குறிப் பிடுங்களேன்.

1970 ஆம் ஆண்டில் சென்னையில் ஒரு இலக்கிய நிகழ்வில் ஐயா சுரதா அவர்களைச் சந்தித்தேன். அவருடனே அவர் வீட்டிற்குச் சென்று அதுவரை நான்




50 ஆண்டு கால இலக்கியப் பணியைப் பாராட்டி இந்திய அரசு வெளியிட்ட ரூ.5 மதிப்பிலான சிறப்பு அஞ்சல் தலை

எழுதிய கவிதைகளைக் காட்டினேன்.

கவிதைகளைப் படித்துப் பார்த்து நல்ல ஓட்டம் இருக்கிறது, தொடர்ந்து பாவேந்தரின் கவிதைகளை ஊன்றிப் படி, சங்க இலக்கியங்களைப் படி என்று அறிவுறுத்தினார். தமிழை நீ ஆழமாகப் படிக்க வேண்டும் தமிழாழ என்று கூறினார். அவர்கூறியஅந்ததமிழாழஎன்றபெயரையே நான் புனைப்பெயராக வைத்துக் கொண்டேன். தமிழை ஆழமாகப் படிக்க வேண்டும் என்று கூறியதற் கேற்ப நான் தமிழைப் படிக்கப் புலவர் பட்டப்படிப்பில் சேர்ந்து படித்துத் தமிழாசிரியராகப் பணிபுரிந்தேன். என்னுடைய திருமணமும் அவரின் தலைமையில் தான் ஐயரை வைத்து மந்திரங்கள் ஓதாமல் சீர்திருத்த முறையில் நடந்தது. ஓசூரில் இயங்கிவரும் தமிழ் வளர்ச்சி மன்றத்தின் ஆண்டு விழாவில் ஒவ்வொரு ஆண்டும் அவரை அழைத்து நிகழ்ச்சிகளை நடத்துவோம். அப்பொழுதெல்லாம் எங்கள் வீட்டிலேயே தங்குவார். இரவெல்லாம் அவருடன் நண்பர்களோடு கவிதைப் பற்றியும், இலக்கியம் பற்றியும் உரையாடுவோம். நான் சென்னை செல்கின்ற போதெல்லாம் அவருடைய வீட்டிற்குச் சென்று உரையாடி மகிழ்வேன். அவரின் இறுதிக் காலம் வரை தொடர்புடன் இருந்தார்.

● தாங்கள் கவிஞர் கம்பதாசன் அவர்களுடன் பழகிய அனுபவம் உண்டா?

கவிஞர்கம்பதாசனாருடன்பழகுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை.

● மரபுக்கவிதை புதுக்கவிதை இரண்டுக்கும் உள்ள வித்தியாசமாக நீங்கள் எதைக் கருதுகிறீர்கள்?

மரபுக் கவிதையை ஒரு கட்டமைப்புடன் தான் எழுத வேண்டும். புதுக்கவிதைஅப்படிஇல்லை. எப்படிவேண்டுமானாலும் எழுதலாம். அசை, சீர், அடிகள் கட்டுப்பாடு இல்லை. எதுகை, மோனை, சந்தம் அமையவேண்டிய அவசியமில்லை.

அது உரைநடையின் மற்றொரு நிலை. மரபுக் கவிதை என்பது யாப்பமைதியோடு அமைவது. மரபுக் கவிதையைப் படிக்கின்ற போதே அதன் கட்டமைப்பு மிகுந்த இன்பத்தை அளிக்கும். மரபைக் கற்றுக் கொண்டால் புதுக்கவிதையை விடச் சிறப்பாக மரபுக் கவிதையை எழுதலாம்.

● முகநூலில்எழுதிவரும்கவிஞர்களைப் பற்றி தங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

முகநூலில் எழுதுபவர்கள் தாங்



ஆம்பூரில் நடைபெற்ற ஊலழளா கவியரங்கில் சக கவிஞர்களுடன் கருமலைத் தமிழாழன்

கள் எழுதுவதெல்லாம் கவிதை என்று நினைத்துக் கொள்கிறார்கள். கவிதை எழுத வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது. ஆனால் முறைப்படித் தமிழைக் கற்றுக் கொள்ளும் ஆர்வம் இல்லை. குறைந்தது பாரதியார், பாவேந்தர் பாடல்களையாவது படிக்க வேண்டும். சங்க இலக்கியங்களைத் தொட்டாவது பார்க்க வேண்டும். அப் பொழுது தான் எழுத நினைக்கும் கருத்திற்கு வடிவம் கிடைக்கும். ஒரு கருத்தை எப்படி சொல்ல வேண்டும் என்ற ஆழம் கிடைக்கும். எழுதுகின்றவை இன்று எழுதி நாளை மறைவதாக இருக்கக் கூடாது. நம்முடைய பெயரைச் சொல்வதாக இருக்க வேண்டும். கணியன் பூங்குன்றனாரின் ஒரு கவிதையே அவரை உலகமெல்லாம் அறியவைத்தது. அது போன்று முத்திரைக் கவிதைகளைப் படைக்க முயலவேண்டும். புதுக்கவிதை எழுதுபவர்கள் யாப்பை அறிந்து எழுதினால் மேலும் மெருகேறும்.

● முகநூல் குழுக்கள் தமிழ்ப் பணியை உண்மையிலேயே செய்து வருகின்றனவா?

முகநூல் குழுக்கள் ஓரளவு தமிழை வளர்த்து வருகிறது என்றே சொல்லலாம். தமிழைப் படிக்காதவர்கள் கூட கவிதை எழுதுகிறார்கள்.

அது கவிதையா இல்லையா என்பது வேறு. ஆனால் எழுதுகின்ற ஆர்வத்தைத் தூண்டுகிறது.

வாரி வாரி வழங்குகின்ற பட்டங்கள், விருதுகளால் ஒரு கவிதை எழுதியவரெல்லாம் கவிச்சக்ரவர்த்தி, கவிக்கோமான் ஆகிவிடுகிறார்கள். தகுதியே இல்லையென்றாலும் முகநூல் குழுக்கள் தங்களை விளம்பரப்படுத்துக் கொள்வதற்கும், உறுப்பினர்களை அதிகமாகச் சேர்ப்பதற்கும் இவ்வாறு தகுதியே இல்லாதவர்களுக்கெல்லாம் விருதுகளை வாரி வழங்குகிறார்கள். ஒட்டக்கூத்தரும், பிள்ளைப் பாண்டியனும் இருந்திருந்தால் முகநூல் குழுக்களை நடத்துபவர்களின் தலைகளை அறுத்தே போட்டி ருப்பார்கள். இன்னொன்றையும் சொல்லியே ஆக வேண்டும். முகநூல் குழுக்கள் நடத்தும் கவியரங்குகளெல்லாம் கேலிக் கூத்தாகவே உள்ளன. நூறு, இருநூறு என்று கவிஞர்களை வைத்து கவியரங்கை நடத்துவது மிகவும் வேதனை அளிக்கிறது. ஒருவர் படிப்பதை யாருமே கேட்பதில்லை.

சந்தைக் கடையைப் போலத்தான் நடக்கிறது.

● முகநூல் வழியாக மரபுக்கவிதை பயிற்சி அளிப்பது பற்றிய தங்களுடைய கருத்து என்ன?

வரவேற்கக் கூடிய முயற்சியாகும். யாப்பே அறியாதவர்கள் இன்று இப் பயிற்சியின் மூலம் இலக்கணம் கற்று எழுதுவதைப் பாராட்ட வேண்டும். வெண் பாப் போட்டி, விருத்தப்பா போட்டி என்று விதிமுறைகளைக் கூறி நடத்துவதால் அறியாதவர்களும் விதிமுறைகளை அறிந்து எழுதுவது உண்மையிலேயே மகிழ்ச்சியை அளிக்கிறது.

● தாங்கள் பெற்ற விருதுகளில் சிறந்த தாக தாங்கள் எதை கருதுகிறீர்கள்?

கவிதை எழுதத் துவங்கி 50 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. இது வரை நூற்றுக்கும் மேற்பட்ட விருதுகள், பட்டங்கள் பெற்றுள்ளேன். தமிழக அரசு வழங்கிய தமிழ்ச்செம்மல் விருது,

கம்போடியா அரசு வழங்கிய ஏழாம் செயவர்மன் விருது, என்னுடைய 50 ஆண்டு கால இலக்கியப் பணியைப் பாராட்டி இந்திய அரசு வெளியிட்ட ரூ.5 மதிப்பிலான சிறப்பு அஞ்சல் தலையைச் சிறந்ததாகக் கருதுகிறேன்.

● தங்கள் சென்று வந்த வெளிநாடுகள் பற்றி..

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, கம்போடியா, வியட்நாம், தாய்லாந்து, நேபாளம் ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்துள்ளேன். மலேசியாவிலும், சிங்கப்பூரி லும், இலங்கையிலும் கலப்பில்லாத தமிழில் பேசுகிறார்கள். நாம் இதைக் கற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும். கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் மிக உயர்வாக மதிக்கிறார்கள். நம்முடைய நூல்களை இலவசமாகக் கொடுத்தாலும் வாங்க மறுத்து விலை கொடுத்தே பெற்றுக் கொள்கிறார்கள். இந்தப் பழக்கம் நம்மிடத்தில் வர வேண்டும். அப்பொழுது தான் படைப்பாளர்களுக்கு உரிய மரியாதை கிடைக்கும்.

● தாங்கள் எழுதியுள்ள நூல்கள் பற்றி

இது வரை 25 நூல்கள் வெளிவந் துள்ளன. மரபின் வேர்கள் என்ற சொல் லாக்கக் கவிதை நூலை இந்திய அரசின் இந்திய மொழிகள் நிறுவனம் தேர்ந் தெடுத்து இந்தியாவில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் கொடுத்துள்ளது. அதுமட்டுமன்றி அந்த நூலை இந்தியாவின் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கவும் தேர்ந்தெடுத்துள்ளது. செப்பேடு என்ற கவிதை நூல் மலேசியாவில் நடைப்பெற்ற உலகக் கவிஞர்கள் மாநாட்டை ஒட்டி நடத்தப்பட்ட உலக அளவிலான மரபுக் கவிதை நூல் போட்டியில் முதல் பரிசு பெற்றது. வீணை மத்தளமாகிறது என்ற கவிதை நூலைப் படித்து விட்டு மறைந்த குடியரசுத் தலைவர் சிறந்த நூல் என்று சான்றிதழ் வழங்கியுள்ளார். வீணை மத்தளமாகிறது,

மரபின் வேர்கள் ஆகிய நூல்களை

மனைவி, மகன், மருமகள், பேரக்குழந்தையுடன் கருமலையார்.



ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா சிறந்த நூல்களாகத் தேர்ந்தெடுத்து விருதும் பொற்கிழியும் வழங்கியது. வேரின் விழுதுகள் என்ற நூலை உலகத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் சிறந்த நூலாகத் தேர்ந்தெடுத்து விருதும் பொற்கிழியும் வழங்கியது. கல்லெழுத்து என்று நூலைக் கவிதை உறவு என்ற மைப்பும், கரூர் திருக்குறள் பேரவையும் சிறந்த நூலாகத் தேர்ந்தெடுத்து விருதும் பொற்கிழியும் வழங்கின. செப்பேடு, அகமுகம், கால்முளைத்த கனவுகள் ஆகிய நூல்களை சென்னை உரத்த சிந்தனை அமைப்பு சிறந்த நூல்களாகத் தேர்ந்தெடுத்து விருதும் பொற்கிழியும் வழங்கியது. சிகரம் இலக்கிய இதழ் 2019 ஆம் ஆண்டின் சிறந்த கவிதை நூலாகப் பசிவயிற்றுப் பாச்சோறு நூலைத் தேர்ந்தெடுத்து விருதும் பொற்கிழியும் வழங்கியுள்ளது. மறைந்த தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்கள் மலர்விழி என்ற காவிய நூலைப் படித்து மிகச் சிறந்த சீர்திருத்த நூல் என்று பாராட்டி அணிந்துரை வழங்கியுள்ளார். என்னுடைய அனைத்து நூல்களும் தமிழக அரசின் நூலகத் துறையால் தேர்வு செய்யப்பட்டு அனைத்து அரசு நூலகங்களிலும் இடம் பெற்றுள்ளன.

● தங்களின் வாழ்க்கைத்துணைவர் மற்றும் குழந்தைகள் பற்றி ஒரு சில வார்த்தைகள்.

என்னுடைய வாழ்க்கைத் துணைவியாரின் பெயர் வசந்த குமாரி. அவர் கருநாடக மாநிலத்தைச் சேர்ந்தவர். திருமணத்தின் போது அவருக்குத் தமிழ் தெரியாது, எனக்குக் கன்னடம் தெரியாது. திருமணத்திற்குப் பின்பு அவருக்கு நான் தமிழ் கற்றுக் கொடுத்தேன். அவரிடமிருந்து நான் கன்னட மொழியைக் கற்றுக் கொண்டேன். என்னுடைய இலக்கியப் பணி சிறப்பாக நடைபெறுவதற்கு அவர் தான் மூலம். இரு பெண் குழந்தைகள் தென்றல், முல்லை.

இருவரும் கணினித் துறையில் பட்டம் பெற்று பணியாற்றுகிறார்கள். ஒரு ஆண் குழந்தை பிரதீப். நிர்வாகத் துறையில் பட்டம் பெற்று தொழிற்சாலையில் மனித வள மேம்பாட்டு அதிகாரியாகப் பணியாற்றுகிறார். மூவருக்கும் திருமணம் முடிந்து மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள்.

● தமிழ்நெஞ்சம் இதழ் மற்றும் அதன் ஆசிரியர் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகள்...

பழகுதற்கு இனிய நண்பர். தமிழ் மீது மிகுந்த ஆர்வம் கொண்டவர். அயல் நாட்டில் தமிழை வளர்த்து வருபவர். தமிழ்நெஞ்சம் மின்னிதழ் வாயிலாகப் பல கவிஞர்களை உலகறியச் செய்தவர். தளராமல் தமிழ்த் தொண்டாற்றி வருபவர். அவர் பணி சிறக்க வாழ்த்துகிறேன். ■



## கருமலைத்தமிழாழன்

எண்சீர் விருத்தத்தால் நமைக்கவரும் ஆழன்
எந்நாளும் தமிழ்மணக்கும் கவிசுரக்கும் தோழன்
வண்ணத் தமிழ்த்தாய்க்கு வளம்சேர்க்கும் பிள்ளை
வாய்க்கின்ற இதழிலெலாம் முத்தமிடும் கிள்ளை
எண்ணம் செயல்யாவும் கவிதையென்றே வாழும்
இவரன்றோ தமிழ்ச்செம்மல் கருமலையின் கீதம்
பண்ணில் தமிழெடுத்துப் பாடிடுவோம் வாழி
பார்புகழும் கருமலையார் தமிழாழன் வாழி!

**இராம.வேல்முருகன் வலங்கைமான்**



# தொடக்கமும் முடிவும்

எங்கிருந்து தொடங்கி
எங்கு வந்து முடித்திருக்கிறேன்
என்பதை நிதானமாக
யோசித்து ரசித்திருக்கிறேன்..

இத்தனை அழகாக
பிரதிபலித்திருக்கும்
காலம் தின்று தீர்த்த
உன் புகைப்படங்களில்
மறைந்திருக்கும் அழகு
தானே மறையும்
வினோதம் கொண்டவை..

எவ்வித உரசலுமின்றி
புகையத் தொடங்கியிருக்கு
உன்னை பற்றின நெருப்பொன்று
என் உள்ளேயும்
பற்றத் தொடங்கியிருப்பது
மறுப்பதற்கில்லை..

அனைத்திற்கும் மேலாக
நிசப்தமாய் உயிர்த்திருந்து
அடையாளமற்று
காலக் கடிகாரத்துக்குள்
மெல்ல மெல்ல  உன் நிழலுடன்
தொலையத்தான் போகிறேன்...!!

- வனிதாமனோ





# நகர்வு

## அ. முத்துவிஜயன்

அன்று அவருக்குப் பணிஓய்வு நாள் சந்தன மாலை பூங்கொத்து பழக்கூடை உடன் பணிக்கொடை லட்சங்கள்... கண்ணீர் விடைகொடுத்தல்... இத்யாதி....

சம்பிரதாயங்கள் முடிந்து வீடுவரும் போது, ஆரத்திஎடுத்து உள்ளே அழைத்தார் கள். மகனும் மருமகளும் வந்திருந்தார்கள். கட்டி அணைத்துக் கொண்டார் மகனை.

''எப்படியோ நல்லபடியா ஓய்வு பெற்று விட்டேன். சோதனைகள் பல நடுவில் ஒருவழியாக பிழைத்தாச்சு ;''

மகன் கேட்டான் "அப்பா ரிட்டயர் மெண்ட் பணம் எவ்வளவு தேறுச்சு" என்று...

''55 லட்சம்'' என்றார் பெருமையாக...

''என்ன செய்யப் போகின்றீர்கள்'' என்றான் .

''பேங்கில போட்டுவைச்சிட்டு வட்டிய வாங்கி நிம்மதியா குடித்தனம் நடத்தவேண்டியதுதான்'' என்றார்.

''லூசாப்பா நீ அவன் 7 சதவீதம் வட்டிதான் கொடுப்பான். இவ்வளவுநாள் கவர்ன்மெண்ட் வீட்டுல சிரமக்குடித்தனம் பண்ணீட்டீங்க. பேசாம நல்ல மூணு பெட்ரூம் இருக்குற வீட வாங்கி வசதியா மிச்சகாலத்துக்கு இருக்கலாம்'' என்றான்.

அவருக்கு உடன்பாடில்லை. .மனைவியும் மகனுடன் சேர்ந்துகொண்டாள் ''அவன்நல்லதுதானேசொல்றான்பேங்குல இப்பல்லாம் நம்பமுடியல ஆன்லைன்ல எவனாவது எடுத்திருவானாம்''

ஆச்சு பிரமாதமான வீடு புதுமனை புகுவிழா வீடுமனைவி பெயரில்.

மனைவிக்கு வாயெல்லாம் பல்.

''அழகா இருக்குங்க வீடு வசதியா வும் என்று பெருமை.

ஒருவருடம்போனது.

மகன் வந்தான்.

'அப்பா ஒருயோசனை நீங்கரெண்டு பேரும் தனியா என்ன பண்ணப் போறீங்க பேசாம எங்ககூட வந்திருங்க'' என்று கரிசனமாக அழைத்தான்...

இது ஏதோ இவருக்குச் சரியாகப் படவில்லை.

அப்பவும் மனைவி ஒத்து ஊதினாள். ''அவன் சொல்றதும் சரிதான், நமக்கு ம்பொழுதுபோகலை. பேரனை கொஞ்சி கிட்டு பொழுதப் போக்கிடலாம். வீட்ட வாடகைக்கு விட்டுடலாம். வாடகை

உங்கபேருல, அக்கவுண்டுல போடச் சொல்றேன் செலவுக்காகும். நல்லதுதானே'' என்றாள் மனைவி.

ஆச்சு குடிபெயர்ந்தாச்சு .

ஆறுமாசமாச்சு .

மகன் இப்போ கோபமாச் சொன்னான் ''வந்த இடத்தில் வாயவைச்சிக்கிட்டு சும்மா இருக்கமாட்டீங்களா ?''

''அவரொம்ப ஃபீல் பண்றா. எதுக்கு கண்டதுல எல்லாம் கொறை கண்டு பிடிக்கிறீங்க குற்றம் சொல்லிட்டே இருக்கீங்க வாய மூடிட்டு போட்டதை சாப்பிட்டு சும்மா இருக்கக்கூடாதோ'' ன்னான்.

தப்பு பண்ணீட்டமோன்னு தோணிச்சு அவருக்கு.

''உங்களுக்கு நல்ல இடம் பாத்துருக்கேன் சாப்பாடெல்லாம் அவங்களே போட்டு நல்லாபாத்துக்கு வாங்கலாம். வாடகைப் பணம் வாங்கி நானே கட்டிட்டேன் நீங்க சந்தோசமா இருக்கலாம் பிக்கல் பிடுங்கல் இருக்காது...'' மருத்துவ வசதி கூட உண்டுன்னான்

புரிந்தது இவருக்கு கிளம்புடி உடனே சொந்த வீடு இருக்கு அங்கபோகலாம். எதுவும் எடுத்துக்காத'' என்றார்.

''பேரனோட போட்டோ மட்டும் எடுத்துக்கிறேன்'' என்று வீதியில் இறங்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

மனைவியால்தாங்க முடியல;வழியில் கோவிலில், நிற்கச்சொல்லி வேண்டி னாள். அப்ப சொன்னாள் ''ஆண்டவனே அவன மன்னிச்சிடு தண்டிச்சிடாதே'' என்று...

''ஏங்க நீங்களும் என்னை மன்னிச் சிடுங்க. வீட்ட எப்பவோ அவன் பெயருக்கு மாத்திக்கொடுத்துட்டேன்'' என்று ...

கைகளை கண்ணீரால் நனைத்தபடி ''என்னடி சொல்றேன்னு'' கலங்கி கண்ணில் நீர் வரக்கேட்டார் அவர்.

அவளிடம் பதில் இல்லை கேவல் தான் வெளிப்பட்டது....

# ஹைக்கூ

1.
பசி மறந்து
மகிழ்வாய் சிறுமி
காதில் வேர்கடலை சிமிக்கி.

2.
தொடையில்
தட்டி தாளம் போடுகிறேன்
பாடும் கொசு.

3.
கோவில் கோபுரத்தில்
ஏறிய குரங்குக்குட்டி
சுரண்டும் புத்தர் சிற்பம்.

4.
கரையில் ஒதுங்கிய
திறந்த மீன் வாய்க்குள்
நுழைகிறது கடல்.

5.
தீப்பந்தம்
அனல் பரவிய அறை
உள்ளங்கையில் தேன்.

**- சாயிராம்.**
**தஞ்சாவூர்.**

# தர்மம்



## கவிதைச் சிறுவன்

பரபரப்பான காலை வேளை மெல்ல முடிந்து பத்து மணியை நோக்கி கடிகாரம் தன் பயணத்தை ஒன்பது நாற்பத்தி ஐந்தில் நடந்து கொண்டிருக்கும் தருணத்திலும் அந்த அம்மன் கோவிலின் பிராகாரத்தை கைகளைக் கூப்பி பக்தி மயமாய் சுற்றிக்கொண்டு வந்தார் நாக லிங்கம் .. ஊர் பெரிய புள்ளி என்பதற்கே உண்டான ஆறடிக்கும் குறைவில்லாத உயரத்தோடு பட்டு வேட்டியும் சட்டையும் கட்டையாக முறுக்கிய மீசையும் சற்று நேரத்திற்கு முன்னரே செய்திருந்த சவரமும் கழுத்தில் தொங்கிய புலிப்பல் சங்கிலியும் சொல்லாமல் சொன்னது

அவர் நடந்து செல்லும் பாதையில் இருப்பவர்கள் எல்லோரும் அவருக்கு உண்டான மரியாதையை சற்று கடவுளை விடவும் அதிகமாகவே கொடுத்தனர்

அப்படி கும்பிடு போட்டவர்கள் யாவரையும் கடந்து சென்ற அந்த ஊரின் அதிக வசதியான குடும்பமான மிராசுதாரர் என்றே அழைக்கப்படுவார் நாகலிங்கம் ...

பிரகாரத்தை சுற்றி வந்தவர் மறுபடியும் முன்னால் வந்து கோவில் கருவறை நோக்கி இரு கரங்களையும் உயர்த்தி மாரியாத்தா நீதான்மா காப்பாத்தனும்னு வாய்க்குள் முணுமுணுத்தபடி கோவிலுக்கு வெளியே வந்தார்.. ரேஷன் கடைகளிலும் எம்லோய்மென்ட் ஆபிஸ் வாயிலில் வரிசைபோல... மிராசு வரவுக்காக காத்திருந்த பிச்சைகாரர்கள் தட்டேந்த ஆரம்பித்தார்கள் உரக்க சொல்லி... ஐயா ராசா தர்மபிரபு என்று பல குரல்கள்.

வாரத்தின் சனிக்கிழமை நாட்களில் இது பழக்கமானதால் மிராசுதாரர் நடந்து சென்று கொண்டே தன் சட்டைப்பையில் வைத்திருந்த சலவை செய்யப்பட்ட பத்துரூபாய் நோட்டுகளை சற்று வீசிய முறையில் ஒவ்வொரு பிச்சைக்காரரின் தட்டிலும் போட்டார் அது விழுந்தாலும் விழாவிட்டாலும் ஓடிப்போய் அதை எடுத்துக்கொள்ள தயாராய் இருந்த யாசகர்கள் மத்தியில் இவற்றை பார்த்துக் கொண்டிருந்த ஒரு பிச்சைகாரன் மட்டும் தன் தட்டை உயர்த்தலை குறைத்தான் அதை சட்டை செய்யாத மிராசு வீசிவிட அவன் அதை கண்டு கொள்ளாதவனாய் இருந்தான் சலனமில்லாது இருந்தவனை ஒருகணம் பார்த்த மிராசு பெரிதாய் அவனைப்பற்றியோசிக்காது அவருக்கென காத்திருந்த காரில் ஏறிப்புறப்பட்டார்.

இருந்தாலும் மிராசு மனதில் ஒரு சலனம் ஒரு பிச்சைகாரனாய் இருந்தும் ஏன்

நான் இட்ட தர்மத்தை அவன் ஏற்கவில்லை என்ற கேள்வி உடனே டேய் வேலா வண்டியத்திருப்பு என்று கோவிலுக்கு சென்றார் அங்கே அந்த பிச்சைக்காரன் இல்லை சுற்றும்முற்றிப்பார்த்தார் தூரமாய் ஒரு மர நிழலில் அமர்ந்தஅவனிடம் சென்று ஏன் என் தானத்தை வாங்கவில்லை உனக்கு போதாதா என்று கேட்டார்... அதற்கு அந்த யாசகன் ஏன்சாமீ எதற்கு எங்களுக்கு தானம் பண்றீங்கனு கேட்டான்

உடனே நாகலிங்கம் தானம் தர்மம் பண்ணினா அது நம் தலைமுறை செழிக்க உதவும் இல்லாதவர்க்கு தானம் செய்யுறது சாமிக்கு அர்ச்சனை செய்வதைப் போல என்றார் .. நீங்க சொன்னது ரொம்ப சரிங்க சாமி தட்டேந்தி வர்ர பூசாரி தட்டத்தை தொட்டு கும்பிட்டு காசு போடுறீங்க

ஆனால் தட்டேந்தி நிக்குற எங்க தட்டத்துக்கு நிமிந்தமாதிரி நின்னு காச வீசுறீங்க ஏன் சாமி இதே மாதிரி சாமிக்கும் காச கருவறைக்குள்ள வீசுவீங்களா என்று கேட்டவனை சற்று கூனிக்குறுகித்தான் பார்த்தார் நாகலிங்கம்.. சிலையான கடவுளுக்கு கொடுக்குற மரியாதைய கொஞ்சம் மனுசனுக்கும் கொடுங்க சாமி என்ற அவன் பேசி முடித்ததை கூட கேட்காது வேகமாய் நடந்தவர் அவன் அமர்ந்திருந்த இடத்தை விட்டு சற்றே காற்றுக்கு நகர்ந்து இடமாறி இருந்த பத்துரூபாய் நோட்டை எடுத்துவந்து அவன் முன்னே நின்றார் உடனே அவன் புரிந்தாற்போல் தட்டேந்த சற்று கொஞ்சம் குனிந்தவாறே அவனுக்கு அந்த நோட்டை தானமிட்டார் ...

ரொம்ப சந்தோசமுங்க சாமி என்று கையெடுத்து கும்பிட்ட அவனைப் பார்த்து மறுமொழியாய் கும்பிட்டுவிட்டு காரை நோக்கி நடந்தவர்... ஆலமரமாய் இருந்த நாம் இதுவரை தானம் செய்ததை உணரவில்லை ஆனால் சற்றே நாணல்போல முதுகு வளைந்து தானம் செய்ததால் மனிதாபிமானம் மற்றும் தானத்தை உணர்ந்துவிட்டதை எண்ணி மனதிற்குள் பூரித்துப்போனவராய் மார்நிமிர்த்தி காரில் ஏறிப்பயணிக்க தயாரானார் நல்லதொரு வாழ்க்கைப் பயணத்திலும்... ■

# தவுண்

பனை மரத்தில் இருந்து கிடைக்கக் கூடிய மருத்துவம் குணம் கொண்ட ஒரு இயற்கையான, மிகவும் ருசியான பதார்த்தம் இது.

நொங்கு பழுத்து கனிந்தால் பனம் பழம் கிடைக்கும். பழத்தை உண்டு விட்டு போடும் கொட்டை முளைவிட்டு வளரும். கொட்டைக்குள் உருவாகும் சீப்பை (தவுண்) குழந்தைகள் உண்பதற்கு சுவையாகவும், சத்தானதாகவும் இருக்கும். கொஞ்சநாள் விட்டால், பனங்கிழங்கு கிடைக்கும் சத்து மிகுதியான இந்த கிழங்கு மனிதனின் வயிற்றுப் புண்ணுக்கு மிகச்சிறந்த மருந்தாகும்.

பனங்கொட்டையிலிருந்து கிடைக்கும் தவுண் பெரும்பாலும் விற்பனைக்கு வருவதில்லை. குறிப்பிட்ட பருவத்துக்கு (60 நாள்கள்) கொட்டைகளை மண்ணில் புதைத்து, பின்னர் அவற்றை வெட்டி எடுத்து பெறப்படும் தவுணை, 25 ஆண்டுகளுக்கு முன்புவரை பலரும் ருசித்து சாப்பிட்டிருப்பார்கள்.

பனம்பழங்களிலிருந்து எடுக்கப்படும் கொட்டை என்று அழைக்கப்படும் பனம்விதைகளை சுமார் நான்கு மாதங்களுக்கும் மேலாக கொட்டைக்குழி என்றழைக்கப்படும் மண் குவியலில் இட்டு வைப்பார்கள் இது பொங்கல் நேரங்களில் பனங்கிழங்குக்காக வெட்டி எடுக்கப்படும்..

அந்த நேரங்களில் அரிவாள் வைத்து பனங்கொட்டைகளை பிளந்து அதன் உள்ளிருக்கும் தவுணைப் பெறலாம் இதை வெட்டுவது சற்று கடினம்தான் வெட்டினால் கிடைப்பது தின்ன தின்ன திகட்டாத சுவையுடைய தவுண் எங்கள் ஊரில் பனை மரங்கள் அதிகம் காணப்படுவதால் எங்களுக்கு இதை சாப்பிட அதிகம் வாய்ப்பு கிடைக்கும்.

கிராமத்தில் ஆண்டுதோறும் ஜனவரி, பிப்ரவரி, ஜூன், ஜூலை மாதங்களில் தவுண் விற்பனை செய்யப் படுகிறது.

உடல் சூட்டை தணிக்கவும், வயிற்று கோளாறுகளுக்கும் தீர்வாக இது இருக்கிறது. நுங்கு விற்பனை செய்யும்போது தவுணையும் கூடவே விற்பனை செய்கிறார்கள்.

# விழிப்புணர்ச்சி



## Dr. ஃபஜிலா ஆசாத்
(International Life Coach – Mentor – Facilitator)



**வா**ட் நெக்ஸ்ட்? இந்தக் கேள்வி தான் சிலருக்கு சாதனையாகவும் பலருக்கு வேதனையாகவும் மாறுகிறது.

உங்கள் வாழ்க்கையில் அத்தனைக்கும் ஆசைப்படுவது தவறில்லை. ஆனால் ஒன்று கிடைத்த வுடன் அதை அனுபவிக்கக் கூட நேரம் கொடுக்காமல் மனம் தன் அடுத்த விருப்பத்திற்குத் தாவுவதை நீங்கள் அறிந்தீர்களா.

ஒன்றைத் தேடி அலைகின்றவரை அதை மதிப்பு மிக்கதாக எடுத்துக் கொண்டு பரபரவென இயங்கும் மனம், அது கிடைத்தவுடனே அதில் இருந்த த்ரில் வடிய உற்சாகமிழந்து, «வாட் நெக்ஸ்ட்» என வேறொன்றை அவசர கதியில் தேடி அடைய முயல்கிறது.

நீங்கள் என்றாவது ஒரு நாள் ஆசுவாசமாக பரபரப்பு இல்லாமல் உங்கள் அலுவகத்திற்கு செல்லும் போது எத்தனை விஷயங்களை அலசிக் கொண்டே செல்வீர்கள் என்று சிந்தித்துப் பாருங்கள்.. இதுவே பரபரப்போடு அலுவலகத்திற்கு செல்லும்போது, நேரத்திற்கு போய்விட முடியுமா எனும் உங்கள் இலக்கைத் தவிர வேறு ஒன்றும் உங்கள் மனதில் எழாது அல்லவா?!

அது போல இந்த அவசர உலகம், பல நேரங்களில், ஓடும் இரயிலில் மாட்டிக் கொண்டு இழுத்து செல்லப்படும் ஒரு பொருளாக உங்கள் மனதை எங்கெங்கோ இழுத்து செல்லுகிறது, அதனால் என்ன நிகழ்கிறது தெரியுமா?

ஒன்றை ரசித்து அனுபவிக்கும் மனநிலைக்கு பதிலாக பறித்து விழுங்கும் அவசரத்தில், தான் என்ன செய்கிறோம், தான் செய்வது சரிதானா என்ற கேள்விக்கு இடமில்லாமல் பதிலை மட்டும் பலவாறு கிறுக்கி செல்கிறது.

தான் மகிழ்ச்சி என்று கணிக்கும் ஒன்று கிடைக்கும் வரை போர்க்கால அவசர மனநிலையோடு பரபரக்கும் மனம் அது கிடைத்தவுடன் அதே அவசர கதியில் அடுத்த இலக்கைக் குறித்துக் கொள்கிறது.

ான்எதைதேடிஓடுகிறோம்என்பதில் எதை இழக்கிறோம் என்பதையே மனம் மழுங்கடித்து விடுகிறது. மகிழ்ச்சிக்கான தன் இலக்கு மட்டுமே கண்களில் இருக்க இந்த இலக்கு சரியானதா.. தவறானதா.. என்பதையே அலசாமல் அதற்கான அசுர ஓட்டம் அரம்பித்து விடுகிறது.

விழிகள் திறந்திருந்தும் பார்க்காமல் அந்த வேகமெடுத்த காலடியில் நசுங்குவது சருகுகள் மட்டுமல்ல வண்ணத்துப் பூச்சி களும்தான் என்பதை உணர மறந்து விடுகின்றது மனம்.

தன் மகிழ்ச்சிக்காக, மன நிம்மதிக் காகத்தான், ஒன்றை நாடினோம் என்ப தையே மறந்து விட்டு, அந்த ஒன்றிற்காக தன் மகிழ்ச்சியையே ,தன் நிம்மதியையே, ஏன், எந்த நியாயத்தையும் இழக்கத் துணிந்து விடுகிறது மனம்.

தான் விரும்பும் ஒன்றை அடைவதில் காட்டக் கூடிய அந்த அவசரம், தன் விருப்பத்திற்கு ஏதாவது இடைஞ்சலாக வந்து விடுமோ என்ற அச்சம், 'தான்' என்ன செய்கிறோம் என்ற எண்ணம் வரவிடாமல் மூளையின் லாஜிக்கல் பகுதியை அப்படியே செயலிழக்க செய்து விடுகிறது.

அளவுக்கதிகமான ஆசையோ கோபமோ வந்து ஒன்றின் மீது addiction ஏற்படும்போது மூளையின் லாஜிக்கல் பகுதி block ஆகி எமோஷனல் பகுதி மட்டுமே வேலை செய்ய, உணர்ச்சி வேகத்தில் தன் இலக்கை மட்டுமே மனம் முன்னிறுத்தும்.

நீங்கள் ஒரு காரை ஓட்டிக்கொண்டி ருக்கிறீர்கள்... நிதானமான வேகத்தோடு, உடன் பயணிப்ப வர்களின் இருப்பு பற்றிய அக்கறையோடு, சுற்று முற்றும் கவனம் வைத்து அந்தக் காரை ஓட்டாமல், இலக்கை மட்டும் மனதில் இருத்தி, எப்போது தேவைப் பட்டாலும் நிறுத்திக் கொள்ளலாம் என்று உங்களுக்கு நீங்களே சமாதானம் சொல்லிக் கொண்டு, வேகமெடுத்து செல்லும் போது என்ன ஆகும்?!. நீங்கள் எப்போது சடன் பிரேக் போட்டாலும் அந்தக் கார் ஒரு குலுக்கலோடு தான் நிற்கும், அல்லது உடனே நிற்க முடியாமல் எதிலாவது இடித்து ஏதாவது பாதிப்பை ஏற்படுத்தி விடும். அது இருக்கையில் இருப்பவர்களையும் தேமே என்று ரோட்டில் பயணிப்பவர்ளையும் மட்டு மல்ல ஓட்டுனரான உங்களையும் தான் பாதிக்கும். என்றும் நிதானமான, பயணமும் தேடலும் தான் நிரந்தர நிம்மதியையும் மகிழ்ச்சியையும் தரும்.

நீங்கள் நமக்குள் இயங்கிக் கொண்டி ருக்கும் ஹோமியோஸ்டேஸிஸ் (homeostasis) பற்றியும் வேல்யு சிஸ்டம் (value system) பற்றியும் அறிந்திருக் கிறீர்களா. சுருக்கமாக சொன்னால் வேல்யூ சிஸ்டம் Accelerator என்றால் ஹோமியோஸ்டேஸிஸ் brake என்று எடுத்துக் கொள்ளலாம்.

இயந்திர கதியில் மாறிவரும் இந்த உலகிற்கேற்ப இயந்திரமாக மனிதன் மாறி விடக் கூடாது, அவன் தன் மனிதத்தை இழந்து விடக்கூடாது என்பதற்காக இயற்கை நமக்கு அளித்திருக்கும் வரம் தான் ஹோமியோஸ்டேஸிஸ்.

இது ஒவ்வொரு முறை மனிதன் தான் செய்து கொண்டிருப்பதில் இருந்து விலகி புதிதாக ஒரு மாற்றத்தை செயல் படுத்த முற்படும்போதெல்லாம் அவனுக்குள் பதற்றத் தையும் பயத்தையும் ஏற்படுத்தி மாற் றத்தை சுலபமாக ஏற்றுக் கொள்ள முடியாமல் செய்து, அவன் மாற நினைப்பது சரிதானா என்ற கேள்வியை அவனுக்குள் எழுப்பும்.

அந்தக் கேள்விக்கான பதிலை முற்றி லுமாக அலசி ஆராய்ந்து தகுந்த தகவல்களை அவன் தெரிந்து கொள்ளு ம்போது அவனின் வேல்யு சிஸ்டம் அப்டேட் ஆகும்போது அவன் மனமும் பதட்டம் நீங்கி மாற்றத்தை இலகுவாக ஏற்றுக் கொள்ள்ளும். இப்படி நமக்குள் இருக்கும் ஹோமியோஸ்டேஸிஸ் என்னும் பிரேக் எந்த ஒரு மாற்றத்தையும் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி சீராக கொண்டு செல்லும்.

ஆனால்.. இன்றைய கணினி யுகத்தில் அளவுக்கதிகமான தகவல்கள் மொபைல், டி.வி என்று நம்மிடம் வந்து விழுந்துக் கொண்டே இருக்கிறது. இதனால், Homeostasis என்னும் Brake செயலிழந்து போக, பழையன கழிதலும் புதியன புகுதலும் மட்டுமே சரி, மாற்றம் மட்டுமே முன்னேற்றம் என்று மனம் நினைக்கத் தொடங்கி விடுகிறது.

நீங்களும், புதிதாக எந்த ஒரு

பொருள் சந்தைக்கு வந்தவுடன் அது உங்களுக்கு தேவையா, அதன் முந்தைய மாடலில் ஏதேனும் குறை இருக்கிறதா என்ற அடிப்படை அலசலை கூட தவிர்த்து விட்டு, வரும் புது மாடலை வாங்க விரைகிறீர்கள்.

நீங்களே விரும்பி ஒரு பொருளைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள நினைத்து சிறிது காலம் தள்ள நினைத்தாலும், அந்த சிறிய கால அவகாசத்துக்குள்ளேயே அடுத்தடுத்த மாடல்கள் வந்து உங்களை சிந்திக்க விடாமல் ஏதேனும் ஒன்றை அவசரத்தில் தேர்வு செய்ய வைத்து விடுகிறது.

அதனால்தால் மாற்றங்கள் வரும் வேகத்தை விட அதிக வேகத்தில் மகிழ்ச்சி உங்கள் மனதை விட்டு வெளியேறி விடுகிறது.

இப்படி எதிலும் நிலை இல்லாமல் பரபரக்கும் மனம் உறவுகளின் உன்னதங்களிலும் நிலை கொள்ள முடியாமல், ஒவ்வொருவரையும் தனித் தீவாக தங்களுக்கென்ற ஆத்மார்த்த உறவுகள் இல்லாமல் தவிக்க செய்கிறது. அதனால் எதிலும் சகிப்புத் தன்மை அற்று 'வாட் நெக்ஸ்ட்' என பலரும் தனக்கான மாற்றத்தை எல்லாவற்றிலும் தேடுகிறார்கள்.

இதுவே தனக்கான இருப்பை நிலை நிறுத்திக் கொண்டு தான் போற்ற வேண்டிய அடித் தளத்தையே மாற்ற நினைக்காமல், தான் போற்ற வேண்டிய பாரம்பரியம் கெடாமல் தன் சூழலில் என்ன மாற்றத்தைக் கொண்டு வரலாம் What's Next in this என்னும் சுய தேடல், விழிப்புணர்ச்சியையும் வேதனையற்ற சாதனையையும் தரும். ■






# கல் சூடாக இருக்கிறது

## கவிதைத் தொகுப்பு

நூல் ஆசிரியர் – ஜிதேந்திரன்
வெளியீடு – சந்தியா பதிப்பகம் ,
சென்னை .
விலை – ரூ . 100 /
[ முதல் பதிப்பு – டிசம்பர் 2020 ]
பக்கங்கள் – 108

நவீன கவிதை என்றாலே புரியாமல் இருப்பது என்ற பொதுக் கருத்தை நீக்குவது போல எளிமையான வரிகளில் வலுவான கருத்துகளை மனத்தில் உருவாக்கும் பல நவீன கவிதைகளைவாசிக்கஅளித்துள்ளார்ஜிதேந்திரன் தனது “கல் சூடாக இருக்கிறது“ கவிதைத் தொகுப்பு மூலம். வாசிக்கையில் எளிதாகத் தோன்றினாலும் அநேகமாக தொகுப்பில் உள்ள கவிதைகள் அனைத்துமே புறத்தில் காணும் வரிகள் வாசிப்பவர்களின் மனத்தில் உள்ளுக்குள் வேறுபொருள் உணர்த்திச் செல்வனவாகவே உள்ளன. படைப்பாளி தமிழ்த்துறையில் உதவிப் பேராசிரியர் என்பதால் சொற்கள் அவருக்கு எளிதாக வசப்பட்டுள்ளன.

நகுலனின் கவிதைகளில் காணப்படும் உள்மனத் தேடல் ஜிதேந்திரனின் கவிதைகளிலும் அங்கங்கே தென்படுவது சிறப்பு. குறிப்பாக இந்தக் கவிதையை வாசிக்கையில் நகுலனின் சில கவிதை வரிகள் மனத்திற்குள் வந்து சென்றன. அந்த “நான்“ நானும் கூட; ஏன் நீங்களும் கூடத்தானே ?

நான் தனித்திருப்பதாகச் சொல்கி
றார்கள்
இல்லை
நானும்
எனக்குப் பிடித்த நானும்
இருக்கிறோம் !

இன்னொரு கவிதையின் வரிகளில்

எனக்கு மட்டும்தான் நாட்டு நடப்பு “அரசியல்“ தெரிகிறதா அல்லது வாசிக்கும் எல்லோருக்குமே அப்படித்தான் தெரிகிறதா என்று நீங்கள்தான் சொல்ல வேண்டும் .

**நூல் விமர்சனம்**



– சுப்ர.

முதலில்
ஆளுக்கொரு வாழை நடலாம் என்றார்கள்
பின்பு
எல்லோரும் சேர்ந்து ஒன்றை
கன்றை நட்டார்கள்
இனி
இலைக்குத்தான் வருவார்கள்
இப்போதைக்கு
மரம் எனக்குக் கிளை காட்ட.
நான் மரத்திற்கு முகம் காட்ட.

ஒரு மயிலையும், கோழியையும் வெளியே காட்டி உள்ளுக்குள் வாழ்க்கையின் பொருளை உணர்த்திச் செல்கிறார் மிக எளிதாக இன்னொரு கவிதையில்.

மயில் மயில் என்று கத்தினாய்.
எனக்கு அது பெரிய கோழி.
மறுமுறை கோழி கோழி என்றாய்.
எனக்கு அது சிறிய மயில்.
அவ்வளவுதான் வாழ்வு.

வாசிக்கையில் பகடியாகத் தோன்றி னாலும் கவிதைக்குள் ஒரு சித்தரை ஒளித்து வைத் துள்ளார் ஒரு கவிதையில் .

– காற்றடைத்த பைதானே நம் உடல்?
எங்கு சென்றாலும்
இந்த உடலும் கூடவே வருகிறது
கடுப்பாக இருக்கிறது .
உடலை வீட்டிலேயே போட்டுவிட்டு
நான் மட்டும் தனியாக
நடந்து சென்று
ஒரு கப் தேநீர் அருந்தி வர வேண்டும்!

தேநீரை இன்னொரு கவிதையில் மனிதர்களின் பழக்க வழக்கங்களுக்கு குறி யீடாக ஆக்கி விடுகிறார். பால் மட்டும்தான் புளிக்குமா என்ன? நமது எல்லா விருப்பங்களும் ஆசைகளும் புளித்துதானே போய் விடுகின்றன சமயங்களில். இல்லை, கிடைக்காமல் போன தால் நரிக்குப் புளித்தது போல நமக்கும் புளித்துப் போகிறதா ? இரண்டே வரிகள்தான்; சொல்லப் போனால் நாலே வார்த்தைகள்தான். ஆனால் அவை உணர்த்தும் விஷயத்தை எத்தனை கோப்பைகளிலும் நிரப்ப முடியாது.

ஏன் தேநீர் அருந்தவில்லை ?
புளித்துவிட்டது .

கூறியது கூறல் கவிதைக்கு அழகல்லதான்; ஆனால் ஒரு கவிதையில் வார்த்தைகள் மட்டும்தான் திருப்பித் திருப்பிச் சொல்லப் படுகின்றன .

ஆனால் சொல்லும் விஷயம் வேறு பட்டுக் கொண்டேயிருக்கின்றன. வாழ் வென்பது வெறும் நினைப்புகளால் கட்ட மைக்கப் பட்டதுதானோ என்ற சந்தேகம் எழுந்து விடுகின்றது வாசித்து முடிக்கையில்.

நானே நினைத்துக் கொள்கிறேன்
மகிழ்ச்சியாக இருக்கிறேனென்று .
நானே நினைத்துக் கொள்கிறேன்
தனிமையில் இருப்பதாக .
நானே நினைத்துக் கொள்கிறேன்
நண்பர்கள் இருப்பதாக .
நானே நினைத்துக் கொள்கிறேன்
வாழ்வு பெரும் அவலமென்று .
நான் நினைத்துக் கொண்டேயிருப்பேன் .

"இருத்தல்"- வாழ்வின் பொருளே அது தானே. அதைத்தான் சொல்லிச் செல்கின்ற னவோ கீழே உள்ள வரிகள் ?

அருகிலேயே
ஒரு கடல் இருக்கிறது .
கண்ணருகிலே
ஒரு மலை இருக்கிறது .
கையருகில்
ஒரு வெண்டாமரை இருக்கிறது .
ஆனாலும்
நானும் இங்குதான் இருக்கிறேன் .

தலைப்புக் கவிதையான “கல் சூடாக இருக்கிறது“ இரு பக்கங்களில் விரிந்த சற்றே நீள் கவிதை. இப்படி ஆரம்பிக்கிறது கவிதை -

யாருக்கு வாய்க்கும்
இப்படியொரு வீடு
எதிர்வீடு காலி
பின்வீடு காலி
இடப்பக்க வலப்பக்க வீடுகளும் காலி.
எங்கள் வீட்டில்
பேயிருந்தது.
பேய் வீட்டில்
நாங்கள் இருந்தோம்
நான் இருந்தேன்.

அதன் பின்னர் வரிசையாக பேய்களின் இருப்பை பல சம்பவங்களால் குறிப்பிடுகிறது கவிதை. ஆனால் இப்படி முடிகிறது-

இப்போது பேய்த்தொல்லை இல்லை .
எதிர் வீட்டிலும்
பின்வீட்டிலும்
ஆட்கள் வந்துவிட்டார்கள்!

கவிதை சொல்லும் பேய் உண்மையில் பேய்தானா என்ற சந்தேகத்தை எழுப்பி விடுகின்றன கவிதையின் கடைசி வரிகள். [பேய் மீது நம்பிக்கை உண்டு; இல்லை என்பதற்கெல்லாம் அப்பாற்பட்டு.]

இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம் தொகுப்பில் உள்ள கவிதைகள் குறித்து. எனினும் தொகுப்பை வாசிக்கப் போகும் உங்களுக்கும் கொஞ்சம் மிச்சம் வைக்க வேண்டியதிருக்கிறதே. மொத்தத்தில் நவீன கவிதைகளையும் எளிமையாக எழுத லாம் என்று உணர்த்தும் நல்ல தொகுப்பு.

## பாடம்

எப்படியோ அவளில்லாமல்
கழிகின்ற நாட்களினூடே
அவரவர் கடமைகள் அவரவர்
செய்துகொள்ளவேண்டிய நிர்பந்தத்தை
ஏற்படுத்தி சென்றுவிட்டப் பிரிவு
அவளின் இடத்தை அவளால் மட்டும்
நிரப்ப முடியும் என்ற பாடத்தைப்
புகட்டியே விடுகிறது

– மெய்யன் நடராஜ்

# கம்பன் வீட்டுக் கட்டுத் தறி



கவிஞர்.வே.பூங்குழலி பெருமாள்

'கம்பனென்ற பெரும்பெயரை நினைக்கும் போதே
கவிதையென்ற காரிகைதான் வருவாள் ஆங்கே'

என்று நாமக்கல் கவிஞர் போற்றிய பெருமைக்கு உரியவர் கம்பர். டிஎண்ணி எண்ணி திட்டம் போட்டு எழுதினானோ எண்ணாமல் எங்கிருந்தோ கொட்டினானோ என்று யாவரும் போற்றும் கம்ப காவியத்தைப் படைத்த கவிச்சக்கரவர்த்தியின் காலம் கி.பி.12 ஆம் நூற்றாண்டு. திருவழுந்தூர் என்றழைக்கப்படும் தேரழுந்தூரில் ஆதித்தன் என்பாருக்கு மகனாய்ப் பிறந்தவர் கம்பர் என்பர். கம்பனின் தவப்புதல்வன் அம்பிகாபதி. கல்வியில் பெரியவர் கம்பர். விருத்தம் பாடுவதில் வல்லவர் கம்பர்.

'பத்தாயிரம் கவிதை
முத்தாக அள்ளிவைத்த
சத்தான கம்பனுக்கு ஈடு
வித்தாக வில்லையென்று பாடு'

என்று கவியரசு கண்ணதாசனால் போற்றப்பட்டவர் கம்பர். கம்பரை ஆதரித்த வள்ளல் சடையப்பவள்ளல்.

சிலையெழுபது ,சடகோபர்அந்தாதி ,சரஸ்வதிஅந்தாதி, திருக்கைவழக்கம், கம்பராமாயணம் ,ஏரெழுபது, மும்மணிக்கோவை போன்ற முத்தான நூல்களை எழுதியவர் கம்பர்.

சரஸ்வதி தேவியின் அருள்பெற்றுக் கம்பரால் பாடப்பட்டதே கம்பராமாயணம்.

“கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்” என்பது முதுமொழி.

'வெற்றுச் சொல்லடுக்குகள் இன்றி - அரிய
விருந்தினை அளிப்பது கவிதை
கற்பார் நெஞ்சினில் வற்றாத ஊற்றாக
கலைக்கிடமாவதும் கவிதை'

என்பார் கவியரசு கண்ணதாசன்.

கவிபாட வல்லவரான கம்பர் வீட்டிற்குப் பலரும் அறிவுப் பசியாற்ற வந்து போவதுண்டு. ஒருமுறை அம்பல சோமாசி என்னும் புலவர் ஒருவர் தேரழுந்தூரில் கம்பர் வீட்டிற்குச் சென்றார்;. அப்போது, கம்பர் வீட்டின் அருகில் உள்ள ஒரு பணிப்பெண் பசுவின் சாணத்தை உருட்டித் திரட்டி வரட்டி தட்டிக்

கொண்டிருந்தாள்.

கவி;ச்சக்கரவர்த்தியைக் காணப் ,புவிச்சக்கரவர்த்திகளும், புலவர்களும் வந்து போவது உண்டு. வருபவர்கள் தமிழ்த்தேனைப் பருகுவதும் உண்டு.

அன்றும் அப்படித்தான் அம்பலசோமாசி என்னும் புலவர் கம்பர் வீட்டிற்கு வந்தார்.

பணிப்பெண்ணிடம் கவிச்சக்கரவர்த்தி கல்விக்கடல் கம்பன் வீடு எது? என்று கேட்டார்h.;

உடனே, அந்தப்பெண் இதோ, இந்த வீடுதான் ஐயா! ,என்று சொல்லிவிட்டு ,எங்கள் ஐயாவைப் பாhர்க்கப் பல புலவர்கள் வருவார்கள் .இப்போதுகூட உள்ளே புலவர்களுடன் தான் அளவளாவிக் கொண்டு இருக்கிறார். குணத்தில் உயர்ந்தவர், மனம் மகிழ எல்லாரிடமும் அன்பாகப் பழகுவார் அவரிடம் பேசினாலேயே இலக்கிய இன்பம் கிடைக்கும். நீங்களும் அவரைப் பார்க்கலாம் என்று சொன்னாள்.

புலவருக்குப் பணிப்பெண்ணின் பதில் நதி ஓட்டம் போல் இருந்தது .நாம் ஒரு கேள்விதான் கேட்டோம்.இவளோ பேச்சில் வல்லவளாய் அன்பை அள்ளி வீசுகிறாளே! என்று மகிழ்ந்த புலவர் கம்பர் வீட்டுப் பணிப்பெண்ணைப் பார்த்து,

அம்மா!, நீ கவிச்சக்கரவர்த்தியிடம் தமிழ் படித்திருக்கிறாயோ? உனக்குத் தமிழில் ஆர்வம் இருக்கிறதா? என்று கேட்டார்.

உடனே,அவள் ஐயையோ! அதற்கெல்லாம் எனக்கு நேரம் இல்லை ஐயா! .ஆனால்,தமிழ் அமிழ்தல்லவா? என்று சொன்னவள் நீங்கள் புலவர்தானே! என்று கேட்டாள்.

ஆமாம் அம்மா!ஏன் கேட்கிறாய்?

உங்கள் பெயர் என்ன?

அம்;மணீ என்பெயர் அம்பலசோமாசி என்றார்.

அப்படி என்றால் நான் கேட்பதற்குப் பதில் சொல்கிறீர்களா? என்று கேட்டாள்.

என்ன அம்மணி என்னிடம் என்ன கேட்கப் போகிறாய்?

உடனே,அவள் ஐயா! வட்டமாய்ச் சந்திரனைப் போல் இருக்கும்.அதன்மீது வன்னிக் கொடி தாவிப் படரும், அதுமட்டுமல்லாமல் தன்னைக் கொட்டுவார் கையில் நின்று கூத்தாடும்.சுட்டபின் அதனை எடுத்துச் சிவ சிவ என்பார்கள்.

இத்தகைய பொருள் எது? ஒரு நாளுக்குள் எனக்குப் பதில் சொல்லுங்கள் என்றாள்.

ஆனால், இதை அவள் வசனமாகக் கேட்கவில்லை. வெண்பாவில் கேட்டது தான் புலவருக்குப் பெருவியப்பாய் இருந்தது. அதாவது,

வட்டமதி போலிருக்கும் வன்னிக்கொடி தாவும்
கொட்டுவார் கையினின்று கூத்தாடும்--சுட்டால்
அரகரா என்னுமே அம்பல சோமாசி
ஒருநாள் விட்டேன்ஈது உரை.

என்று அவள் கேட்டதும் ஒன்றுமே புரியாமல் நின்று கொண்டு வியந்தார் புலவர் .அதற்குள் கம்பர் வீட்டுக்கு அழைப்பு வர உள்ளே சென்றார்.

கம்பருடன் பேசிக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை புலவருக்கு. இருந்தும் அந்தப் பாடலுக்கு உரிய பொருள் தெரியாமல் யோசனையுடனேயே கம்பரிடம் பேசினார்.

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

என்பதற்கேற்ப கம்பர் கவித்திறத்தோடு தன் உள்ளத்தையும் படித்ததை உணர்ந்து

பணிப்பெண் கூறிய பாடலைக் கூறி, இதற்குப் பொருள் என்ன என்று சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் என்றார்.

உடனே, கம்பா,; அவள் ஒரு வேடிக்கைப் பெண், விளையாட்டுக்காரி ,அவள் வாய் வளத்தை உன்னிடமும் காட்டிவிட்டாளா? என்று சொன்னார்.

உடனே புலவர் கம்பன் வீட்டுப் பணிப்பெண்ணின் புத்திசாலித்தனத்தை எண்ணி வியந்து கொண்டிருக்கையில் கம்பர் சொன்னார், அது வேறு ஒன்றுமில்லை. நீங்கள் வரும்போது அவள் என்ன செய்து கொண்டிருந்தாள்? என்றார்.

உடனே புலவர் சாணத்தைப் பிசைந்து உருட்டி வரட்டி தட்டிக் கொண்டிருந்தாள் என்றார்.

அதுதான் அந்தப் பொருள் என்றவர், வரட்டி வட்டமான நிலவைப் போல இருக்கும். வன்னி-(நெருப்பு)அது நெருப்பில் வேகும். தன்னைக் கொட்டுவார் கையில் இருந்து கூத்தாடும ;.வரட்டியைச் சுட்டபின் ‘திருநீறு’ ஆகும்.அதனை எடுத்து ‘சிவ சிவ’ என்று நெற்றியில் அன்பர்கள் அணிவார்கள் அல்லவா? அதைத்தான் அவள் உன்னிடம் கேட்டாள் என்றார்.

வியந்து போனார் புலவர். ‘கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்’ என்னும் முதுமொழியை நினைத்தார்.மகிழ்ச்சியுடன் எழுந்து வெளியில் சென்றார்.

பணிப்பெண் பாடிய வெண்பா, கம்பரிடம் படிக்காமல் வந்த பாட்டு.

கவிஞர்களில் பலவகை உண்டு ஒன்று பிறப்பால் கவிஞர்கள், மற்றவகை பயிற்சியினால் பாவலர்கள் ஆவாhகள். இதேபோல் சேர்ந்து இருப்பதால் கவிஞர்கள் ஆவார்கள்.

சித்தரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் என்பதுபோலப் பயிற்சி எடுத்துப் பாவலர்கள் ஆனவர்கள் உண்டு.

சிலர் பயிற்சி எடுக்காமலேயே கவிஞர் ஆவார்கள். எப்படித் தெரியுமா?

பூவுடன் சேர்ந்த நாரும் மணப்பது போல புலவருடன் இருந்த பணிப்பெண்ணுக்கும் இயல்பாகவே கவிதை வந்துவிட்டது.

இன்று பல புலவர்களும் தமிழ் அறிஞர்களும் தம் ஆசிரியர்களுக்குப் படி எடுத்துக் கொடுத்தே பைந்தமிழைச் சுவாசித்தவர்கள் ஆனார்கள் என்பதை நாம் அனைவருமே அறிவோம். அந்த வகையில் அந்தப் பணிப்பெண் பாடிய வெண்பாவை மீண்டும் ஒருமுறை சொல்லிக்கொண்டே வெளியில் போனார் புலவர்.

வட்டமதி போலிருக்கும் வன்னிக்கொடி தாவும்
கொட்டுவார் கையினின்று கூத்தாடும் - சுட்டால்
அரகரா என்னுமே அம்பல சோமாசி
ஒருநாள் விட்டேன்ஈது உரை.

**உம்பர் இராமகதை ஓங்கி உரைத்தன்றோ
வம்பர் கவிக்கூத்தர் வாயடைத்தார் - கம்பரெனும்
சொல்லேர் உழவரின் சுந்தரப் பாகேட்டால்
கல்லும்சொல் லாதோ கவி**

இராம.வேல்முருகன் வலங்கைமான்




# உத்தமி

ஆலம் விழுது பற்றி
ஆடும் அழகு பற்றி
நாடும் தென்றல் பற்றி
நாடும் நடப்புப் பற்றி
தேடும் தேன்மதுவே
கூடும் மனசெல்லாம்
கூடுகட்டும் குருவி
பாடுபடும் உழைப்பு
பாவை யவள் கண்பட்டதும்
பாடும் ஆசை அசைபோடுதே
ஓடும் அணிலும் ஓர் செய்திக்கு
நாடிக்கிடக்குதே நல்வார்த்தை அது கேட்க
போடி நீயுமென பொல்லாங்கு சொல்ல
நாடி துடிக்குது நல்லதல்ல அது யென்றே
கேடி யல்ல நான் கேவலமாய் நடந்திட
பாடிப் பரிசம் போடுதற்கு
பைந்தமிழை துணைக்கழைத்தேன்
விழுதுபற்றி வேகமாய் ஆடி - கவி
உழுதுழைப்பான் இவன் மடியில்
ஊரடங்க அமைதியானாள்
உத்தமி அவள்பெயரும் உத்தமியே

கவிஞர்பொற்பனைசுப்பிரமணியன்




## கவிஞர் ஈழபாரதி
பார்வையில்

## கவிஞர் ச.ஜெயலட்சுமி
எழுதிய கவிதைகள் தொகுப்பு

# சத்தமில்லாச் சந்தங்கள்

காதல் உயிர்களின் நிலைத் தன்மை, காதல் இல்லாமல் வாழ்தல் என்பது சாத்தியமற்றது. காதல் என்பது ஒரு பட்டாம்பூச்சி பறப்பதைப் போன்று உணர்வு கொண்டது. அதன் வண்ணங்கள் நம் எண்ணங்களில் ஆயிரம் சிறகுகள் விரிக்கும். வனாந்திரத்தின் முடிவற்ற எல்லையை கடந்து செல்லும் ஆற்றல் மிக்கது.

பூக்களின் மகரந்தம் பரப்பும் கால்கள் கடவுளின் துகளை அர்ச்சனை செய்யும் மகரந்த சேர்க்கை.

காதல் வண்ணாத்திப் பூச்சிக்கே இவ்வளவு அழகென்றால் மனித வாழ் விலும் அதன் சிறகுகள் வானத்தை எட்டும் வல்லமை கொண்டது.

அந்த காதலை கவிதை முழுவதிலும் மணம் பரப்புகிறது ச.ஜெயலட்சுமியின் சத்தமில்லாச் சந்தங்கள்.

கண்கள் பேசும் மொழியை போல், காதலின் வாய் மொழி அவ்வளவு எளிதாக அனைவருக்கும் வாய்த்துவிடுவதில்லை.

மௌனம் அழகானது தான். ஆனாலும் காதலில் பேசாத வார்த்தைகள் மௌனத்தில் மௌனித்துவிடும்.

ஒருவருமில்லா
நிசப்தங்களின்
வீதிகளில் தான்
பயணிக்கிறோம் தினம்
தினம்
ஆனாலும்
நீ வரும்
வேளை மட்டும்
விரிவதே இல்லை
எந்தன் மௌனக்
குடைகள்!

நிதம் வதம்
செய்யும் நின்
மௌனத்தை விட
பெரிதொன்று மல்ல
என்னின் மரணம்

காதல் மரணத்தை வென்றது என்பார்கள். கவிஞரின் கவிதைகளிலும் மரணத்தை வென்றது தான்.

மரணத்தின்
நாட் கிழித்து
உந்தன்
ஒற்றை
ஒலி கீற்றின்
மடியில் கிடத்துவேன்

என்னைக் கண்டே
ஈரம் காய்கிறாய்
உலர்ந்து கிடக்கிறது
உனக்கும் எனக்குமான
கவிதைகள்.

பெரும்பாலானகாதலின்பிறப்பிடம் இந்த மொட்டைமாடி தான். யாரும் இல்லா தனிமையில் வெறிச்சோடிக் கிடக்கும் அந்த மொட்டை மாடியில்தான்இன்னும் இருக்கிறது நாம் பேசித்தீர்த்த காதல் கவிதைகள். காதல் ஆசையின் தூண்டல் தான். அணுக்களின் அறிவியல் தான். ஆதாமும் ஏவாளும் மீட்டிய ராகங்களில் பிறந்திருக்கக்கூடும் காதலின் இசை.

காதல் தாண்டி கவிதையில் என்ன இருக்கிறது. காதலைப்பாடி விட்டு கவிஞர் கடந்திருக்கலாம். ஆனால் சமூகம் நோக்கிய கேள்விகளை கவிதைகளாக கடும் சினம் கொண்டு பாரதியின் வழியில் நின்று உரத்த குரலில் பதிவு செய்துள்ளார்.

காமத்தின் மயக்கத்தில் சிறு குழந்தைகளையும் சீரழிக்கும்பாலியல் வன்கொடுமைகளைக் கண்டு தனது காத்திரமான கவிதை வரிகளால் கேள்வி எழுப்புகிறார். நீளும் விரல்களை நெருப்பு கொண்டு எரிக்க வேண்டும் என்கிறார்.

ஆடை குறைப்பென்றாய்
அங்கம் மூடென்றாய்
அற்பப் பதரே நீ
அரும்பிலே என்ன கண்டாய்...?

மனிதம் மரணித்துப் போவதால் பூமி எங்கும் மரண ஓலம். சாதி மதங்களுக்கு மரணமில்லையா! என்று சம கால கொரோனா குறித்தும் கவிதைகளில் சாடுகிறார்.

அன்பின் அடித்தளமான தாய் தந்தை கருவில் சுமந்து தாலாட்டி சீராட்டி வளர்க்கும் பெற்றோர்களின் மாண்புகளை கவிதைகளில் போற்றுகிறார் கவிஞர்.

துளி நீரும்
விழி சொல்லா
வலி தாங்கி
ஒளி தந்த
உளியவர்
அப்பா..!

இன்னும் வலி தேடிச் செல்லாத வாசிக்க மறந்த புத்தகம் அப்பா. மிக ஆழமான வரிகளை உருவகம் படுத்தியுள்ளார் கவிஞர். நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும் அப்பாவின் தோள்கள் சுமக்கின்ற சுமைகளை அந்த வலிகளை உணர்ந்தவராக கவிஞரின் கவிதைகள் கனக்கின்றன.

கவிஞரின் முதல் தொகுப்பு என்றாலும் வார்த்தைகளில் வளம் இருக்கின்றது. கவிதைகளில் செழுமை இருக்கின்றது. பிரான்ஸ் தமிழ்நெஞ்சம் பதிப்பாக அழகான வடிவமைப்பில் வெளி வந்திருக்கிறது கவிஞர் ச. ஜெயலட்சுமியின் சத்தமில்லா சங்கங்கள்.

கவிஞரின் கவிதைகள் எதிர்காலங்களில் சிறந்த பெண் கவிஞர்களில் ஒருவராக மிளிரும் வாய்ப்புள்ளது. அனைவரும் வாங்கிபடியுங்கள் ,கவிதை எழுதுபவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

வாழ்க வளர்க தமிழும் கவிதையும் .

நூல் அளவு 140x210செ.மீ
பக்கங்கள் 148
விலை 140 / - + (அஞ்சல் செலவு)
இந்திய ரூபாய்
நூல் தேவைக்கான தொடர்புகளுக்கு :

editor@tamilnenjam.com
jayac4948@gmail.com



# ஒரேநோக்கத் தீர்ப்பு

-ராம்க்ருஷ்

சேகர், உன் நண்பனிடம் நீ சொன்னால் கேட்பானடா, நீ சொல்லிப் பாரடா என்று மூன்றாவது முறையாகக் கெஞ்சினாள் அவன் தாய் சிவகாமி.

என்னம்மா சொல்ல வேண்டும் என்கிறாய்?

எனது பிரண்டு பார்வதியோட பெண்ணை அவன் காதலிக்கிறானாம், அவளும் அவனை விரும்புகிறாளாம்.

இதில் என்னம்மா தப்பு, இரண்டு பேருமே சாப்ட்வேரில் பணிபுரிகிறார்கள், இருவருமே மிக நல்லவர்கள். சாதிகூட ஒன்று தானே, பின்னே என்ன கவலை அவர்களுக்கு

அந்தப் பெண் எனக்கும் மகளைப் போன்றவள், சந்திரா என்று பெயர். அவளுடைய அப்பாவின் தங்கை பையனும் சாப்ட்வேர் இன்ஜினியர் தான். முறை விட்டுப் போகக் கூடாது என அவளுடைய அப்பா பார்வதியிடம் கண்டிப்பு காட்டுகிறாராம். மகளிடம் அவள் காதலை மறக்கச் சொல்லி அறிவுரை கூறச் சொல்கிறாராம். பார்வதிக்கு இருதலைக் கொள்ளி எறும்பின் நிலை. அவள் என்னிடம் வந்து அழுதாள். சிவகாமி நீ தான் இதற்கு உதவி செய்யணும். உன் பையனும் சரவணனும் பிரண்டு என்பதால் உன் பையனை அவனிடம் சொல்லி அவனைப் புரிந்து கொள்ளச் செய்யணும். சந்திராவின் அத்தை பையனோடு அவள் திருமணம் முடிக்க அவன் விட்டுத் தர வேண்டுமாம். முடியுமா எனக் கெஞ்சுகிறாளடா.

கணவனிடம் ஒரு மனைவியால் இந்தப் பிரச்சினையை மகளுக்கு சாதகமாகத் தீர்க்க முடியாதா? என்னம்மா நீ.

பார்வதியின் கணவர் ஒரு முன்கோபி. அவர் வைத்ததே சட்டம் என்ற ஆணாதிக்கம் கொண்டவர், கொஞ்சம் முரடர். என் சொந்தம் என்பதால் தடுக்கிறாயா? விட மாட்டேன் எனக் கத்துகிறாராம்.

அத்தை பையனும் சந்திராவை விரும்புகிறானா என்று கேட்டாயா?

கேட்டேன். அவன் தன் பெற்றோர் சொல்வதைக் கேட்கக் கூடியவன் என்றும், அவனுடைய பெற்றோர்களுக்கு சந்திராவின் அப்பா சொல்வதே வேதவாக்காம்.

சரி இன்று சரவணனோடு பேசிப் பார்க்கிறேன். சொன்னவன் சிந்தனையில் ஆழ்ந்தேன்.

சரவணனும் நானும் குழந்தைப் பருவத்திலிருந்தே நண்பர்கள். கல்லூரியிலும் நானும் அவனும் என்ஜினியரிங்கில் கம்யூட்டர் சயின்ஸ் எடுத்துப் படிப்பதிலும், அதிர்ஷ்டவசமாக ஒரே வகுப்பில் படித்ததிலும் இணை பிரியவேயில்லை. படித்து முடித்ததும் வேலைக்குப் போகும்போது தான் கம்பெனிகள் மாறின என்றாலும் அதுவும் ஒரே ஊரில், சென்னையிலேயே கிடைத்தது அதிர்ஷ்டமே. அவன் என்னிடம் எந்த விஷயத்தையும் மறைக்க மாட்டான், நானும் அதுபோலவே தான். சந்திராவின் காதலைப் பற்றி என்னிடம் அவன் பலமுறை சொல்லியிருக்கிறான். அவளின்றி

நானில்லை என்று புலம்பியிருக்கிறான். அவளும் இவனை இவன் அளவு நேசிக்கிறாள் என்பதையும் நான் அறிவேன். இப்படியிருக்கும் நிலையில் அவனிடம் நான் எப்படி இதுபற்றி பேசமுடியும்?

மாலை 5 மணிக்கு நான் சரவணனுக்கு போன் செய்து 6 மணிக்கு நாங்கள் எப்போதும் சந்திக்கும் ஒரு ரெஸ்ட்டாரண்டுக்கு வரச் சொன்னேன்.

ரெஸ்ட்டாரண்டில் நாங்கள் சந்தித்த போது அவன் கேட்டான்,

என்னடா? ஏதாவது அவசரமா?

அதெல்லாம் ஒன்றுமில்லை. உன்னிடம் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்கலாமேயென்று தான்..

நீசந்திராவைகாதலிக்கிறாயல்லவா?

இது என்னடா கேள்வி, எங்கள் காதல் தான் உனக்குத் தெரியுமே. ஏன் கேட்கிறாய்?

இல்லை, அந்தக் காதலை விட்டுக் கொடு என்றால் விட்டுக் கொடுத்து விடுவாயா?

என்னடா?எதற்குவிட்டுக்கொடுக்க வேண்டுமாம்? ஏன் நீ இப்படியெல்லாம் பேசுகிறாய்? என்னைப் பற்றி உனக்குத் தெரியாதா? என்ற சரவணன் ஆழ்ந்த சிந்தனையில் சற்று நேரம் பேசவில்லை. நானும் மௌனமானேன். அவன் கனவுலகில் சஞ்சரிப்பான் போலும்.

சந்திராவை சந்தித்தது, அவள்மீது அளவில்லாக் காதல் கொண்டது, அவளும் சரவணன்மீது எல்லையில்லாக் காதலானது. ஈருடலும் ஓருயிருமாய் வாழ்வது. திருமணத்திற்கு ஏங்குவது என பலவும் சரவணனின் கனவலைகளில் வந்து வந்து போயின. இடையில் ஒரு நாள் சந்திரா சொன்னாள், அவளுடைய அப்பா, தன் தங்கை பையனோடு தான் என் திருமணம் என்று, நான் தெளிவாகச் சொல்லி விட்டாராம்., வேண்டாம், நான் ஒருவரைக் காதலிக்கிறேன் என்று. நான் சொன்னேன். அன்று முதல் என்னிடம் அவர் பேசுவதேயில்லை. அம்மாவிடம் தான் ஏதோ சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறார் என்றெல்லாம் சொன்னாள்.

சந்திரா அப்போ என் காதலை மறந்து விடுவாயா என ஏக்கத்தோடு சரவணன் கேட்க

ஒருக்காலும் இல்லை. என் உயிர் இருக்கும்வரை நம் காதல் நிரந்தரமானது. வேறு ஒருவரைத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்றாள் அவள்.

சிந்தனை நிற்பதாயில்லாததால், நான் அவன் தோள் தட்டிக் கூப்பிட்டேன், சரவணா, என்னாயிற்று உனக்கு,

சேகர், என் சந்திரா எனக்கில்லை என்றானால் நான் தரையில் துடிக்கும் மீனாவேனே. என் காதலின் வீரியம் உனக்குத் தெரிய வாய்ப்பில்லை. நாங்கள் திருமணம் தான் செய்து கொள்ளவில்லை, டேட்டிங் தான் போகவில்லை, ஆனால் நாங்கள் மனதளவில் குடும்பமே நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பது மட்டும் உண்மை. இந்த விஷயத்தில் என்னை நீ புரிந்து கொள்.

பெண்ணின் பெற்றோர் ஆசியில்லாமல் திருமணம் செய்வது தப்பில்லையா? அவளுடைய அப்பா சாபமிடுவாரே, அந்த அத்தை பையனும் உங்களைக் கரித்துக் கொட்டுவானே. அதனால்தான் நான் உன்னைத் தடுக்கலாம் என்று நினைத்தேன்.

இல்லை நண்பா, நான் என் காதலை யாருக்காகவும் விட்டுக் கொடுக்க மாட்டேன். என் காதல் சாதாரண நிலைகள் கடந்தது. புனிதமானது. அதை விடமுடியாது.

சரி இதைப் பற்றி பிறகு பேசுவோம் என்ற நான் அங்கிருந்து எழுந்தேன்.

அப்போது எங்களுக்கு வலதுபுற மேசையிலிருந்த ஒரு இளைஞனும் விருட்டென்று எழுந்துப் போனான்.

சரவணா, அதோ போகிறானே அவன் தான் அத்தை பையனா யிருப்பானோ?

அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ இனி இப்படி அட்வைஸ் செய்வதை விட்டுவிடு. நம் நட்பின் பேரால் கேட்கிறேன்.

இருவரும் அங்கிருந்து புறப்பட்டோம்.

இரவு சரவணனுக்கு ஆறுதலாக இருப்பதற்காக அவனோடு அவனுடைய அறையில் தங்கினேன் எம் அம்மாவிடமும் அதைச் சொல்லிவிட்டேன். அவர்கள் நினைத்துக் கொள்வார்கள் நான் வெற்றியோடு தான் வருவேனென்று.

சரவணன் நான் அவனுக்கு அட்வைஸ் செய்ய வந்தது பற்றியே புலம்பிக் கொண்டிருந்தான். அவனை ஆசுவாசப்

# பகலவனைக் கண்ட நாணமோப் பைங்கிளியே

( அந்தாதி )

பகலவனைக் கண்ட
நாணமோப் பைங்கிளியே
பக்கத்தில் வந்திட
தயக்கமோப் பூங்குயிலே
சொக்க வைக்கிறது
சுந்தரியுன் பேரழகே
சிக்கிக் கொள்கிறது
சுந்தரனெனது நெஞ்சமே...

நெஞ்சமே உன்னை
நித்தம் நினைக்கிறதே
பஞ்சாய் இதயம்
காற்றில் பறக்கிறதே
கெஞ்சிடும் மனம்
நெருங்கி வருகிறதே
கொஞ்சிட நீயும்
அனுமதி தருவாயே...

தருவாயே முத்தத்தை
எனது கன்னத்திலே
வருவாயே தினமும்
எனது கனவினிலே
வளர் பிறையாய்
ஒளி வீசுபவளே
வாழ்க்கைத் துணையாய்
வந்திடு தேவதையே...

தேவதையே உந்தன்
மனதில் இடமளித்தாலே
தேனீயாய் நாளுமுன்னை
சுற்றி வருவேனே
தென்றல் காற்றாய்
மேனியைத் தழுவிடுவேனே
என்றென்றும் எந்தன்
உயிராயுன்னைச் சுமப்பேனே...

சுமப்பேனே கவியுன்னை
காலம் முழுவதுமே
சுமங்கலி பட்டமும்
உனக்குத் தந்திடுவேனே
சுவைகள் குறையாமல்
நாட்களை நகர்த்திடுவேனே
சுமைகளுன்னை நெருங்காமல்
இறுதிவரைக் காத்திடுவேனே...

**பாக்யபாரதி,**
தகடூர், தமிழ்நாடு.

படுத்தி, சரி நான் வேறு வழிகளிருக்கிறதா எனப் பார்க்கிறேன். நீ கவலைப்படாதே என அவனிடம் சொன்னேன்.

காலையில் எழுந்ததும் காலைக் கடன்கள் முடித்தவன் அவனோடு மெஸ் சுக்குச் சென்று டிபன் சாப்பிட்டு விட்டுத் தான் வீட்டிற்குச் சென்றேன். அன்று ஞாயிறு, அதனால் வீடு பரபரவென்றிருக்கும்.

அம்மாவிடம் சரவணன் உறுதியா யிருப்பதை எப்படிச் சொல்வது என்று பலமுறை ரிகர்சல் செய்தும் அது சரியாக வரவில்லை.

உள்ளே நுழைந்ததுமே அம்மா என்னைப் பார்த்து ஓடி வந்தார்கள். முகம் முழுதும் சிரிப்பு.

என்னம்மா, இவ்வளவு மகிழ்ச்சியா யிருக்கிறாயே என்றேன்.

சந்திராவின் பிரச்சினைகள் ஓவர். அதனால் தான்.

எப்படி, அவளே அத்தைபையனைக் கல்யாணம் கட்டிக் கொள்கிறேன் என்று சொல்லி விட்டாளா?

போடா, அதெல்லாம் இல்லை, நேற்றிரவுஅந்தஅத்தைபையன்தண்ணியைப் போட்டுக் கொண்டு சந்திரா வீட்டிற்கு வந்து அவளுடைய அப்பாவை கண்டபடி மனம் கூசும்படி திட்டினானாம்., அவரைப் பிடித்து லேசாகத் தள்ளிவிட்டானாம்.

பிறகு

பிறகென்ன, விழுந்தவர் எழும்போது போதி மரத்தடி புத்தர் போல் ஞானோதயம் வந்ததாம். இந்தக் குடிகாரன் வேண்டாம், சந்திராசொல்லும்சரவணனையேஅவளுக்குத் திருமணம் செய்யலாம் என முடிவெடுத்து உடனே அதை தன் மனைவியிடமும், மகளிடமும் சொல்லி விட்டாராம். அவர்கள் மகிழ்ச்சியை வெளிக்காட்டாமல் உள்ளுக்குள்ளேயே சிரித்தார்களாம். எனக்கு இப்போது தான் அவளுடைய அம்மா பார்வதி இந்தச் செய்தியைச் சொல்லி, உன் பையனிடம் சரவணனிடம் இதுபற்றி பேச வேண்டாம்,எல்லாம் சரியாகிவிட்டது என்று சொல் என்றாள். ஆமாம் நீ ஏதாவது பேசி அவன் காதலை வேண்டாமென்றானா?

அவன்காதல்உண்மைக்காதலம்மா, அவனாவது காதலை விடுவதாவது.

நான் பேசியதுமே, சேகர் நீ இதுபற்றி மட்டும் பேசாதே என்ற என்னைத் தடுத்து விட்டானே.

ஆமாம், உண்மையிலேயே சந்திரா வின் அத்தை பையன் குடிகாரன் தானாம்மா?

பேசிக் கொண்டிருக்கும் போதே அங்கே சரவணனின் தலை தெரிந்தது.

சேகர், நீ நினைப்பது போல் சந்திராவின் அத்தை பையன் ரத்தீஷ் குடிகாரனில்லை. பத்திரை மாற்றுத் தங்கம் அவன்.

என்னடா இப்படிச் சொல்கிறாய்?

ஆமாம். நீ காலையில் இங்கிருந்து புறப்பட்டதும், ரத்தீஷ் என்னைத் தேடி வந்தான்.

சரவணன் சார், இனி உங்கள் காதலுக்கு தடையில்லை. சந்திராவுக்கு தகுதியான காதலர் நீங்களே

ஏனிப்படிச் சொல்கிறீர்கள் ரத்தீஷ், உங்களைத் தானே உங்கள் மாமா சந்திராவுக்கு நிச்சயிக்க நினைக்கிறார் என்று கேள்விப்பட்டேனே.

நேற்று நீங்கள் ரெஸ்ட்டாரண்டில் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டேன். அப்போது தான் உங்கள் காதலின் தீவிரம் தெரிந்தது. உங்கள் ஆருயிர் நண்பரின் நல்லெண்ணமும் புரிந்தது. நானும் என் பங்காக நேற்றிரவு குடிகாரன் உருவில் மாமாவிடம் சென்று சொல்லக் கூடாத வார்த்தைகளை அவர்மீது எறிந்தேன். அவரை லேசாக ஷோபாவில் தள்ளியும் விட்டேன். மாமாவுக்கு ஞானோதயம் பிறந்து விட்டது. என் பணி முடிந்த மகிழ்வில் நானும் அங்கிருந்து அகன்றேன்.

என்ன இப்படிச் செய்து விட்டீர்களே, உங்கள் பெற்றோர்களிடம் உங்கள் பெயர் கெடுமே. நான் இதையும் பெற்றோர்களிடம் சொல்லிவிட்டே செய்தேன். என் பெற்றோர் தங்கமானவர்கள். ஒரு உண்மைக் காதலுக்கு உதவிய மகிழ்ச்சி கிடைத்ததே.

அப்போது சந்திராவும் அவளுடைய அம்மாவும் இந்தப் பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டே அங்கே வந்தார்கள். அவர்களும் ரத்தீஷின் உதவிக்கு நன்றி கூறினார்கள்.

உண்மைக் காதலின் வெற்றி அங்கே கும்மாளமிட்டது சிரிப்பொலியாக. ■

---

# ஹைக்கூ

1.
குளிரூட்டப்பட்ட அறையில்
குளிர் காய்ந்தான்
உயர் அதிகாரியின் அனல்பேச்சு!

2.
ஓடாத வாகனத்தில்
வேகமாக ஓடியது
சூடான பக்கோடா!

3.
உலகம் முழுவதற்கும்
ஒரே மொழி
குழந்தையின் சிரிப்பும் அழுகையும்!

4.
இருப்பவற்றையும்இல்லாததுபோல
காட்ட வைத்தது
அரசு கொடுக்கும் இலவசம்!

5.
தேனீக்கள் மிரண்டு ஓடியது
பாட்டிலில் அடைக்கப்பட்ட
சர்க்கரை பாகு!

6.
சாந்தி சாந்தி என்று
சொல்லி அமைதியானார்
தன் காதலியின் பெயர்!

**பா.சக்திவேல்**, கோயம்புத்தூர்

## ப.தாணப்பன்
பார்வையில்

# வள்ளிசேர்மலிங்கம்
எழுதிய குறுநாவல்

# அழகுநாச்சியார்




இயல்பானவர்களுக்கு மட்டும் மற்றும் நீங்களும் கிடைப்பீர்கள் போன்ற நூல்களின் ஆசிரியர் சக்திவேலாயுதம் இப்பெருங்கதையில் வரும் கதாபாத்திரங்கள் அனைத்துமே மனதோடு உறவாடுவதும், மனதினில் நிற்பதும் ஒரு வகை பேரானந்தம் என்று வாழ்த்துரை வழங்கியிருக்கின்றார்.

இக்கதையில் வரும் சாரதா - வள்ளியம்மை மற்றும் துரைராசாவின் கதாபாத்திரங்கள் விட்டுக் கொடுத்தலினால் பெரும் பகையை வெற்றி கொள்ளக் கற்றுக்கொடுக்கின்றனஎன்றுதமிழ்நெஞ்சம் அமின் மகிழ்ந்துரை தந்திருக்கின்றார்.

கதையில்வரும்கதாபாத்திரங்களின் பெயர்கள் எங்கேயோ பார்த்தோ கேட்டோ சூடிய பெயர்கள் அல்ல. தன் வீட்டு முற்றத்தை ஒரு காலத்தில் நிறைவு செய்தவர்கள் என்று தன்னுரை தந்து நம்மை கதைக்குள் இழுத்துச் செல்கிறார்.

மொத்தம் பன்னிரெண்டு அத்தியாயங்களைக் கொண்டு அமைக்கப் பெற்றிருக்கிறது இக்குறுநாவல். அனைத்து அத்தி யாயங்களுக்கும் சரியா தலைப்பும், அவ்வத்தி யாயத்தைச் சொல்லும் குறும்படமும் நம்மை கதையினூடே பிரயாணிக்க வைக்கிறது.

ஒரு வீட்டில் தாய் பெரிய கருப்பி மற்றும் மகன் துரைராசு மருமகள் அழகுநாச்சியார் என அறிமுகம் செய்து அத்தை யார்.? மருமகளின் குணம் என்ன.? மகனின் குணம் என்ன என்று ஒரு சில வரிகளிலேயே அறிமுகம் செய்து கதையை நகர்த்துகின்றார்.

பெரிய கருப்பி மற்றும் துரைராசுவுக்குமான உறவு அந்த பாசம் அதற்கு கட்டுப்படும் அழகு நாச்சியாரின் குணம் என நேர்மறைச் சிந்தனையோடு கதை புனையப்பட்டுள்ளது.சூழலேஎதிர்மறையாக இக்கதையினில் அமைந்திருக்கிறது. எதிர்மறை நாயகன் மற்றும் நாயகி இல்லாத ஒரு நேர்மறைக் கதை.

அழகு நாச்சியார் பெற்றெடுக்கும் குழந்தைகள் அதில் இரண்டாவதாக பிறந்த பெண்குழந்தை வள்ளியம்மை அவள் மேல் குடும்பம் கொள்ளும் பாசம் மற்றும் அதற்கான காரணம். அது கண்டு பொறாமையுற் அண்ணன் செல்வம் அவனது முடிவு மாற்றமென இயல்பாய் கதை நகர்கிறது.

தண்ணீர் பிடிக்கப் போகும் குழாயில் ஏற்படும் சின்ன சண்டை அதற்கு காரணமான வள்ளியம்மையின் மனநிலை பின்பு அவள் அந்த தோழியான சாரதாவிற்கு செய்யும் சிறு உதவி வள்ளியம்மையை ஒரு படி உயரத்தில் நம் மனதில் குடி கொள்ள வைக்கிறது. இதுதான் கதையின் திருப்பு முனை.

செல்வத்திற்குதிருமணமாகிஏற்படும் நிலை அக்குழந்தையை வள்ளியம்மை தம் குழந்தையாக எண்ணி தாலாட்டுப் பாடுவதாக தாலாட்டு ப்பாடலுடன் நிறைவு செய்திருக்கின்றார் கதையினை.

அம்மா பெரிய கருப்பிக்கும் வள்ளியம்மைக்கும் கொடுத்திருக்கும் உருவகமும் கதா பாத்திரத் தனமையும் நம் நெஞ்சை விட்டு அகல மறுக்கிறது. நல்ல பிணைப்பு அது.

கதாசிரியர் சொன்ன மாதிரி

நாம எப்படி இருக்க வேணடும் என்பதை விட நாம் எப்படி இருந்தோம் எனக்காட்டியிருக்கிறது இக்குறுநாவல்.

தொலைக்காட்சி நெடுந்தொடர் எதிர்மறைப்பாத்திரத்தில்நம்மையறியாமல் மூழ்கி அதன் லேசான பாதிப்பில் உலாாவரும் நமக்கு இக்குறுநாவலின் நேரமறை கதாபாத்திரங்கள் நம்மை மீண்டெழ அழைக்கின்றன. வாசிப்பு எனும் கரம் பற்றிக் கொண்டு மீண்டெழுந்து இயல்பு நிலைக்குத் திரும்புவோம்.

அழகுநாச்சியார்
வள்ளிசேர்மலிங்கம்
தமிழ்நெஞ்சம்பதிப்பகம்
விலை ரூ100 பக்கங்கள் 80

தொடர்புகளுக்கு :

editor@tamilnenjam.com
writervallishermalingam@gmail.com



தாமிரபரணி இலக்கிய மாமன்றம் சார்பில் (14.02.2021) இனிதே வெளியிடப்பட்டது அதே நாளில் தஞ்சைத் தமிழ் மன்றம் நூல் வெளிட்டுவிழாவிலும் வெளியீடு கண்டது.

# வங்கிக்கடன்

காலைக்கடன் முடிக்கும் முன்னே
வாங்கிய கடனை அடைக்கச்சொல்லி
வீட்டு வாசலில் வந்து நிற்கிறார்
வங்கி அதிகாரி!

அவர் வாயிலிருந்து
வரும் வார்த்தைகள்
மிகக்கம்பீரமாகவும்
மரியாதையற்றதாகவும்
கேட்கிறது கொடுத்த கடனை!

மரியாதையற்ற வார்த்தைகள்
என் காதுகள் சகித்துக்கொள்ளும்;
அக்கம்பக்கம் காதுகள் சகிக்காது
கண் மூக்கு வாய் வைத்தல்லவா ஏசும்!

கூசுகிறது உடம்பு
உப்பு போட்டு சாப்பிடுவதால்!
கோபம் கொப்பளிக்கிறது
மற்றவர்களை
மரியாதையாகவே நடத்துவதால்!
என்ன பயன் வாங்கிய கடனை
திருப்பிச்செலுத்த வக்கில்லை!

இரண்டு மூன்று மாதத்திற்குள்
கட்டுகிறேன் என்று கெஞ்சி நின்றாலும்
இதையே எத்தனைமுறை சொல்வாயென
மிஞ்சுகின்றன வார்த்தைகள்!

கொஞ்சமாவது கட்டினால்தான்
வட்டிக்காவது ஆகுமாம்
இல்லாது போனால் துறைசார்ந்த
நடவடிக்கை எடுக்கப்படுமாம்!

சோற்றுப்பருக்கைகளை கண்டிடாத
எங்கள் வீட்டு வட்டிகள்
எங்கிருந்து குட்டிபோடுமென
தெரியவில்லை அசலுக்கான வட்டியை!

ஏழைகளை மதிக்கத்தெரியாத
உங்களிடம் பேசி இனி
ஆகப்போவோதொன்றுமில்லை
அழிந்துபோவதைத்தவிர..!

எல்லாம் பேப்பர்தான் பேசும்
எனச்சொல்லும் உங்கள் ராஜ்யத்தின்
கசானாவில் இருக்கும்
கணக்கேடுகளில் எழுதி வையுங்கள்
என் பெயருக்கு அருகே
வரவு என்பதற்கு பதிலாக
“தற்கொலை” என்று!

\- மகிழை.சிவகார்த்தி

# கற்பனை உலகம்

சர்வம் தாமோதரன்

நான் எனது கேமராவை சார்ஜர் லிருந்து எடுத்து அதன் பையில் வைத்தேன், ஒரு ஜோடி கூடுதல் பேட்டரிகளை எடுத்துக் கொண்டேன், ஏனென்றால் "வேற ஒரு உலகத்தில் தன்னிலை மறந்து புகைப்படம் எடுக்கும் போது சார்ஜ் இல்லாம போகும் போது தான் சுயநினைவுக்கே வருவோம்".

சந்திரன் தன் வேலையை செய்ய வானத்தில் உதயமாகியது; நானும் சந்திரனு டன் சேர்ந்து பயணத்தை ஆரம்பித்தேன்.

சந்திரன் பயணம் செய்வது போல ; நானும் அதே செய்தேன் ;

"யாரும் நெருங்க முடியாத தூரம்"
"யாரும் போகாத ஒரு இடம்"
'உள்ளுக்குள் வெப்பம் '
'வெளியே குளுமை'

ஒரு கணத்தில் யோசித்தேன் சந்திர னுக்கு இதே கோட்பாடு தானோ என்று !

எனக்கு இயற்கையாகவே - இயற்கை பற்றிய ஒரு தேடுதல்;

ஒரு கனவில் தேடுவது போல; இணையதளத்திலும் தேடினேன் அப்படி ஒரு இடத்தை.

கனவில் தேடுவதற்காக ! இப்படி ஒரு இடத்தை கற்பனை செய்தேன்.

"நாம் என்ன நினைக்கிறோமோ!
அதுதானே கனவில் வருகிறது என்ன வாசகர்களே"

இணையதளத்துக்கு கீவேடு மாதிரி; கனவுக்கு கீவேடு "கற்பனை"

சந்திரன் என் தலைக்கு மேல் இருந்த போது நான் அந்த இடத்தை அடைந்தேன். ஆனால் அங்கே குளிர்ந்த சூழ்நிலை .

இது ஒரு ரம்மியமான 'கற்பனை'. என்னை சுற்றி ரோஜாவனம் ;

என் மனநிலை மாதிரி ரோஜா பூக்களை சுற்றி வண்டுகள் மகிழ்ச்சியாக ஆனந்தத்தில் துள்ளி குதித்தது.

திடீரென்றுகாற்றுவந்துவண்டுகளிட மிருந்து பூக்களை காப்பாற்றியது இந்த காட்சியை கேமராவில் படத்தை பிடித்தேன்.

அந்த நேரத்தில் நான் கேமராவைப் பார்க்கும்போது அவளைப் பார்த்தேன்.

காற்றோடு போனது.., வண்டு மட்டும் இல்லை நானும் தான்!

ஓ.. ஓ.. இதுதான் விதியா ! இல்லை விதியின் சதியா !

முன்னொரு நேரத்தில் என்னிடம் நேரம் இல்லை - அவள் என்னிடம் இருந்தாள்; இப்போதோ என்னிடம் நேரம் இருக்கு! ஆனால் என் வாழ்க்கையில் அவள் இல்லை.

இப்போது அவள் எனக்கு முன்னால் இருந்ததால், நேரம் இனி இல்லை என்பது போல.

காதல்.
இதுதான் காதல் என்று நினைத்தேன்.
அவள் சிரித்தபடி,
என்னைப் பார்த்து அவளும்;
அவளை பார்த்து நானும்;
தொலைந்த போன
என் கண்களை பார்த்ததும்
தந்து விட்டாய்..! கண்களை
தந்து விட்டு இதயத்தை
பறித்து விட்டாய்...!
ரோஜா மொட்டுகளில் வண்டுகள்

சிக்கிக் கொள்ளுவது போல நானும் சிக்கி கொண்டேன்.

இந்த விசித்திரமான தொடர்பில் சிக்கிக்கொண்டது பற்றி என் காதில் கிசுகிசுத்தாள்.

நான் மட்டும் தான் சிக்கி கொண்டேன் என்று தவறாக நினைத்து விட்டேன்.

அவளைப் பற்றிய எண்ணங்கள் யாவும் தெய்வீகமானது,

சல.. சல,, என்ற இலையிலிருந்து வந்த ஓசை அவளை அழைத்தது போலவே இருந்தது அவளுடைய விசாலமான கரிய கண்களை அவ்வனத்தில் மேல் பரப்பினாள்.

அவள் பார்த்த அந்த கணம் ரோஜா பூக்கள் கூட பொறமைக் கொண்டன அவள் அழகை கண்டு ! அதை கேமராவில் புகைப்படம் பிடித்தேன்.

அவள் ஒவ்வொரு செய்கையும் நிறைய படங்களை கிளிக் செய்துக் கொண்டிருந்தேன்.

புகைப்படங்கள் பிறந்துவிட்டன..!

பேட்டரிகள் இறந்துவிட்டன..!

புகைப்படத்தை எடுத்துக் கொண்டே இருந்தேன்.

கேமராவில் தப்பித்த படங்கள் எல்லாம் என் இதயம் படம் பிடித்தது.

என் இதயத்தில் ஒவ்வொரு கிளிக்கி லும் என் இதய துடிப்பு இருந்தது.

சிகரெட் துண்டு கடைசி வரை வந்து விரலிடையில் சுடுவது மாதிரி அந்த பிரகாசமான குளிர் கூட என்னை சுட்டது. நிகழ்காலத்துக்கு வந்தேன்.

அவள் இல்லாத இந்த நிகழ்காலம்; இறந்த காலம் போல இருந்தது. அவள் இருக்கிற அந்த இறந்த காலம் ; நிகழ்காலம் போல இருக்குது.

என்றும் நீங்கா நினைவுடன் ஆழ்ந்த அந்த நினைவுகளோடே நித்திரை வரை என் நித்திரைகளிலும் கூட திரிந்து கொண்டே திரிந்தது அவளை பற்றிய ‘கற்பனை’

‘அது தான் என் ‘கற்பனை உலகம்’. அவள் தான் என் “கற்பனை”.

## அரும்புமீசை ஆணழகன்!



அரும்புமீசை ஆணழகன்! ஆசை பொங்க
அழைக்கின்ற கண்ணழகன்! ஏங்க வைக்கும்
உருவத்தில் கட்டழகன்! எளியோர்க் கெல்லாம்
உதவுகின்ற உள்ளழகன்! தெருவில் போனால்
திரும்பவைக்கும் நடையழகன்! தீமை என்றால்
திருத்திவிடும் அறிவழகன்! கண்ணால் பேசிக்
கருத்தாக உள்நுழைந்தான்! கன்னி நானோ
கவிதொடுத்துப் பாடுகின்றேன்! காதல் கொண்டே!!

**பாவலர் அருணா செல்வம்**

பெண்மையைப் போற்றுவோம்



# கவிச் செம்மல் .

**பி.ஆரோக்கிய செல்வி** ஆசிரியை,
செயலாளர் ,
இளந்தளிர் கடலூர் அமைப்பு .கடலூர் .

959728 2359

அறிமுகம்

மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா என்பதற்கிணங்க, பெண்கள் தினத்தைப் போற்றும் வகையில்...

பாரதத் தாய் ஈன்றெடுத்த பைந்தமிழ் நாட்டின் சீர்மிகு கடலூர் மாவட்டத்தில் பகையில்லா உறவுகளும், புகையில்லா இயற்கை எழிலும் கொஞ்சி மகிழ்ந்திடும் கொழை சாவடிக்குப்பம் எனும் கிராமத்தில், சேற்றில் முளைத்த செந்தாமரையாய் ஏர் முனைப் பிடித்து விவசாயத்தை உயிரெனக் கொண்ட பிலிப்பு - பாப்பம்மாள் தம்பதியர் 12 ஆண்டுகளுக்குப் பிறகு குறிஞ்சி மலராய் பிறந்த பி.ஆரோக்கிய செல்வி எனும் ஆசிரியை, கவிஞர், எழுத்தாளர், பட்டிமன்றபேச்சாளர், இயற்கை ஆர்வலர், பெண் போராளி, தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளர் என பன்முகம் கொண்டபெண்எனும்பேராற்றலை அறிமுகப்படுத்துவதில் தமிழ்நெஞ்சம் மகிழ்கிறது!



தமிழ் இலக்கிய தொடர்பால் கிடைக்கப் பெற்றவர் தான் இளந்தளிர் ஆரோக்கியசெல்வி. அதென்ன இளந்தளிர் என்று தானே நினைக்கிறீர்கள்? அதுப் பற்றி அவரிடம் கேட்டபோது, அவர் கூறிய பதில் நம்மை வியப்பில் ஆழ்த்தியது என்று கூறினால் அது மிகையாகாது

"இளந்தளிர் கடலூர்" என்கிற அமைப் பினை ஏற்படுத்தி அவ்வமைப்பின் செயலா ளராக செயல்பட்டு வருகிறார்.இவ்வமைப் பின் நோக்கமானது, பள்ளிகளில் மாண வர் களிடையே சுற்று சூழல் பாது காத்தல், இயற்கையைப் பேணுதல் போன்ற சிந்தனைகளை தூண்டக்கூடிய விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி களை ஏற்பாடு செய்து, மாணவர்களை பங்கேற்க செய்து அன்றைய நாளில் அப் பள்ளி வளாகத்தில் மரக் கன்றுகள் நட்டு, அப்பள்ளிகளின் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரிய பெருமக்கள் உதவிக் கொண்டு பாதுகாத்து வருகின்றனர்.

பல்வேறு அமைப்புகள் மரக்கன்றுகள் நடும் பணியினை மேற்கொண்டாலும்இவ்வமைப்பின் சிறப்பம்சம் என்னவென்றால், தேர்வு செய்யப்பட்ட பள்ளி கல்லூரிகளில் இயற்கையின் மீது ஆர்வம் கொண்ட மாணவர்களை தேர்வு செய்து ஒவ்வொரு மாணவ ரிடமும் மரக்கன்றுடன் ஒப்பந்த பத்திரம் ஒன்றும் வழங்கப் படுகிறது. அவ் ஒப்பந்தப் பத்திரத்தில் தங்களால் நடப்பட்ட மரக்கன்றுகளை முறையாக பரா மரித்து வளர்த்தெடுப்போம் என மாணவரும்,6அடிக்குமேல்வளர்த்து விட்ட பின் நேரில் வந்து பாராட்டி பரிசளிப்போம் என இளந்தளிர் அமைப்பினரும் கையொப்பமிட்டு வழங்கப் படுவதே அவ் ஒப்பந்த பத்திரம் என்பதை அறிந்து பாராட்டி மகிழ்ந்தோம்

இதுவரை இளந்தளிர் கடலூர் அமைப்பின் மூலம் 800க்கும் மேற்பட்ட மரக் கன்றுகள் 12 பள்ளிகளிலும், 2 கல்லூரிகளிலும் முறையாக பராமரிக்கப் பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது

பள்ளிகளில் மரக்கன்றுகள் நட்டு வளர்க்கும் எண்ணம் எப்படி வந்தது என்று நாம் கேட்டபோது, மாணவர்கள் தான் எதிர்காலத்தை உருவாக்கக் கூடிய மாபெரும் சக்தி. அவர்களுடைய உள்ளத்தில் எதிர்கால சந்ததிகளுக்கான நல்லக் காற்றையும், சுத்தமான நீரையும் பெற்று ஆரோக்கியமான உடல் சுகத்துடன் வாழ மரக்கன்றுகளை வளர்க்க வேண்டும்



தமிழக கிறிஸ்தவ எழுத்தாளர் ஒன்றிப்பு சங்கத்தின் சார்பில் 2017ல் அருட்கலைமாமணி விருது வழங்கப் பட்ட .நிகழ்வில்

என்கிற சிந்தனையை மாணவர்களின் மனதில் வித்தாக்கினால், அவர்கள் அதை விருட்சமாக்கி நாட்டிற்கும் வீட்டிற்கும் நலம் பயப்பார்கள் என்கிறார் ஆசிரியை ஆரோக்கியசெல்வி.

அவர் தம் சொந்த வாழ்க்கைப் பற்றி கூறுகையில், விவசாயக் குடும்பம் பிலிப்பு பாப்பம்மாள் தம்பதியருக்கு மகளாய் பிறந்து தான் இந்த அளவிற்கு வாழ்க்கையில் பன்முகமாய் சிறந்திட காரணமாய் தன் தாய் தந்தையரின் வளர்ப்பு அதன் பிறகு கணவர் ஜான் பீட்டர் மற்றும் ஷெர்லி ப்ரீத்தா, ஹெலன் ஜென்சி என்னும் இரண்டு மகள்களும் தன் முன்னேற்றத்திற்கு பக்க பலமாய் உறுதுணை செய்கிறார்கள் என்கிறார் ஆசிரியை.

இப்படியாகதன்குடும்பத்திலும்சமூகத்திலும் அக்கறையுடனும் பொறுப்புணர்வுடனும் விளங்கும் ஆசிரியை ஆரோக்கியசெல்வி பெண்



மாண்புமிகு தமிழ் பண்ணாட்டு வளர்ச்சித்துறை அமைச்சர் மா. பாண்டியன் அவர்களிடமிருந்து பாரதி விருது பெறும் தருணம்.

குழந்தைகள் நலன், பெண்களின் முன்னேற்றம் குறித்து தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், பெண்களுக்கான விழிப்புணர்வினை ஏற்படுத்தக் கூடிய வகையில் மேடைக் கூட்டங் களில் சொற்பொழிவாற்றுதல் பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர்கள், பெற்றோர்களால் புறக்கணிக்கப்பட்ட குழந்தை களைத் தேடிச் சென்று இயன்ற உதவிகளை செய்து வருகிறார்.

அது மட்டுமல்லாது நாட்டுப் பற்றினை வளர்க்கக் கூடிய வகையிலும், சமுதாய சீர்திருத்தங்களை ஏற்படுத்தும்



கொரோனா நிவாரணப் பணிகளில்...





கடலூர் கிருஷ்ணசாமி கல்லூரியில் மரக்கன்றுகள் நடப்பட்டது .

வகையிலும் கவிதைகள், கதைகள் எழுது வது, மாணவர்களிடையே போட்டி கள் |நடத்தி பரிசுகள் வழங்குவது என பல் வேறு பணிகளை செய்து வருகிறார். நமது நாட்டில் கொண்டாடப்படும். கலாச் சாரங்களை வெளிப்படுத்தக் கூடிய வகை யிலான நிகழ்ச்சிகளை தொகுத்து தொலைக் காட்சி நிகழ்ச்சிகளுக்கு கொடுத்தல் போன்ற வற்றையும் செய்து வருகிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக கொரோனா பேரிடரில் இளந்தளிர் கடலூர் அமைப்பின் மூலம் பல்வேறு உதவிகளை பல தரப்பட்ட மக்களுக்கு செய்துள்ளார் என்பதை அறிந்து பெருமிதம் அடைந்தோம்.

இவ்வாறாக கல்விப் பணி, சமூகப் பணி, இலக்கிய பணியென சோர்வறியாது உலகில் சுழன்று வந்துக் கொண்டிருக்கும் ஆசிரியை ஆரோக்கிய செல்வி அருட்கலை மாமணி, தொண்டறச் செம்மல், பாரதி விருது, கவிச் சிகரம், கவித்தென்றல், இலக்கிய கவிச் செம்மல், இலக்கிய செல்வர், நட்சத்திர விருது, நட்சத்திர கவிப் பெருமகள், Best Motivator award, சமூகச்சேவகி செம்மல் விருது, ஆசிரியச் செம்மல் விருது, பாட்டுடைத் தலைவன் பாரதி விருது, அன்னை தெரசா விருது, அருமை ஆசான் விருது மற்றும் கொரோனாப் பேரிடரில் செய்திட்ட பணிகளை பல்வேறு நாடுகளிலினின்று 100க்கும் மேற்பட்ட சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்,



இத்தனை செயல்பாடுகளை சாந்த மாகவும் அமைதியாகவும் செய்து வருகின்ற நமது பன்முக பண்பாளர் ஆரோக்கிய செல்வி, பெண்கள் தினத்தைப் பற்றிய செய்தியாக, பெண்கள் தான் இப்பிரபஞ்சத்தின் உயிர் நாடி. பெண்களால் அனைத்தையும் சாதிக்க முடியும். பெண்கள் தினத்தன்று மட்டுமன்றி தினம் தினம் போற்றப்பட வேண்டியவர்கள் பெண்கள் என்கிறார்.

அடுத்து தன்னுடைய எதிர்கால கனவுகள் பற்றி கூறுகையில் தன் பெற்றோர்கள் பிலிப்பு, பாப்பம்மாள் நினைவாக ஆதரவற்றோர் இல்லம் மற்றும் அறக்கட்டளை ஒன்றை நிறுவி ஆதரவற்ற பெற்றோர்களுக்கு உதவ வேண்டும். அனைத்துப் பள்ளிகளிலும் மரக்கன்றுகள் நட்டு பசுமைப் புரட்சியினை ஏற்படுத்த வேண்டும் என தன் லட்சியக் கனவுகளை அடுக்கிக் கொண்டே சென்ற நமது ஆசிரியை ஆரோக்கிய செல்வியினை பணி சிறக்க வாழ்த்தி விடைப் பெற்றோம்.

நல்லாசிரியை பி.ஆரோக்கிய செல்வி மென்மேலும் பல நற்பணிகள் செய்துச் சிறந்திட தமிழ்நெஞ்சம் வாழ்த்தி மகிழ்கிறது.

**- தமிழமின்**

# உலகம் உனக்கு சொர்க்கமாகும்

ஓர் ஊரில் ஆயிரம் கண்ணாடிகள் இருக்கிற அறை ஒன்று இருந்தது. அதற்குள் சென்று ஒரு சிறுமி விளையாடினாள்.

தன்னைச் சுற்றி ஆயிரம் குழந்தைகளின் மலர்ந்த முகத்தைக் கண்டு மகிழ்ந்தாள். அவள் கை தட்டியவுடன், ஆயிரம் பிம்பங்களும் கை தட்டின. உலகிலேயே மகிழ்ச்சியான இடம் இதுதான்! என்று எண்ணி, அடிக்கடி அங்கே சென்று விளையாடினாள்.

அதே இடத்துக்கு ஒருநாள் மனநிலை சரியில்லாத ஒருவன் வந்தான். தன்னைச் சுற்றி ஆயிரம் கோபமான மனிதர்களைக் கண்டான்.

அச்சம் கொண்ட அவன், அந்த மனிதர்களை அடிக்க கை ஓங்கியவுடன், ஆயிரம் பிம்பங்களும் அவனை அடிக்க கை ஓங்கின. உலகிலேயே மோசமான இடம் இதுதான்! எனக் கூறி, அங்கிருந்து வெளியேறினான்.

இந்த சமூகம்தான் ஆயிரம் கண்ணாடிகள் இருக்கிற அறை.

நாம் எதை வெளிப்படுத்துகிறமோ அதையே சமூகம் பிரதிபலிக்கிறது.

உன் மனதைக் குழந்தையைப் போல் வைத்திரு.

உலகம் உனக்கு சொர்க்கமாகும்

**நாப்பின்னை இரஜகோபால்**





# பெண்

கருவறை சுமக்கும் தெய்வம்
காதலால் எரியும் தீபம்
உருவெழில் தன்னை மாற்றி
உயிரினை வளர்க்கும் மேகம்
வருமதி யாகப் பாவில்
வடிக்கிற உவமை பின்னே
திருமதி யாக இல்லம்
திகழ்கிற பூவின் மென்மை

அடுப்படி சுவைகள் தன்னில்
ஆறுடன் ஏழாய் நிற்பாள்
விடுப்புகள் இலாது ழைத்து
வீணையின் நாணாய் நிற்பாள்
துடுப்பெனக் கணவ னோடுத்
தூயவாழ்க் கைக டந்தும்
அடுக்கிய சுமைம றைக்க
அன்பெனும் திரையும் செய்வாள்

பெண்ணிலா வாழ்வில் என்றும்
பேறுகள் இல்லை காணீர்
பெண்ணிலா உலகில் எங்கும்
பெருஞ்சுகம் இல்லை நாளும்
பெண்ணிலா போதும் தோட்டப்
பெருமலர் பூப்ப தில்லைப்
பெண்ணிலாத் தனிமை பற்றி
பேசவே ஒன்று மில்லை

ஏடி வரதராசன்

# முடிவு

**- அனுராஜ்**

எதேச்சையாக கண்ணில் பட்ட அந்தக் காட்சி அனிதாவை திடுக்கிடச் செய்தது.

கிடாரிஸ்ட் அருண் சகஜமாக ஒரு பொண்ணுடன் மிக நெருக்கமாய்.. அன்யோன்யமாய்..

''சே.. இவனை நல்லவன்னு நெனச்சேனே.. உருகி உருகி காதலிச்சு.. எல்லாமே இவன் தான்னு நெனச்சு.. குடும்பத்தை உதறிட்டு வந்து இவனோட வாழ்க்கை நடத்தினதுக்கு.. எனக்கு வேண்டியது தான்..'' என மனதிற்குள் அங்கலாய்த்தாள்.

அருணும், அனிதாவும் வெஸ்டர்ன் மியூசிக் என்ற இசைக் குழுவின் பிரபலங்கள். அனிதாவின் குரலுக்கு மயங்காதவர்கள் எவருமில்லை..அதே போன்று அருணின் கிடார் இசைக்கு ஆடாத தலைகளே இல்லை.

கல்யாண ரிஷப்சன், கோவில் திரு விழாக்கள், சங்க ஆண்டு விழாக்கள் என பல இடங்களில் வெஸ்டர்ன் மியூசிக்கின் பங்களிப்பு இருக்கும். அங்கெல்லாம் அருணும், அனிதாவும் தனித்து தெரிவார்கள். இருவரும் இல்லையென்றால் வெஸ்டர்னே வேஸ்ட் தான் என்ற வார்த்தைகள் எல்லாம் இவர்களது காதுபடவே கேட்டிருக்கிறார்கள்.

இருவரது தொழில் நெருக்கம்.. வாழ்க்கையிலும் ஒன்று சேர்த்து வைக்கும் நிலைக்கு வளர்ந்து விட, இருவரும் ஒரே வீட்டில் குடியிருக்கும் அளவிற்கு நெருங்கியிருந்தார்கள்.

அப்படியிருக்க.. இதோ இன்று குருப்பில் புதிதாக இணைந்து நான்கைந்து கச்சேரிகள் மட்டுமே பாடியிருக்கும் பாடகி கீதாவோடு அருண் இவ்வளவு நெருக்கமாய்..சே.. ஆண்கள் எல்லோரும் அப்படித்தானோ..!

மலருக்கு மலர் தாவும் வண்டுகளாய் ஆண்களின் மனம் ஏன் பெண்களை நுகரப் போய்விடுகிறது.ஒரேவீட்டில்வசித்தாலும் தாலி கட்டாமல் வாழ்பவள் தானே..என இளக்காரமாக நினைக்கிறானா..!

உள்ளுக்குள் மனம் வெதும்பி வேதனையில் புழுங்கினாள்.

இல்லை.. இதை இப்படியே வளர விடக் கூடாது. இதற்கு ஏதேனும் முடிவு கட்ட வேண்டும். என்ன செய்வது..? பரபரவென மனது அலைந்தது.

துரோகத்தின் பரிசாய் அருணுக்கு மரணத்தை வழங்கி விடலாமா..என ஒரு கணம் யோசித்தாள்.

சே..தவறு.. பொசுக்கென்று இறந்து போய் விட்டால் தன் தவறை எவ்வாறு உணர்வான்..?!

பேசாமல்.. நாம் ஒரு கடிதத்தை எழுதி வைத்து விட்டு தற்கொலை செய்து கொள்ளலாமா.. "எனது சாவிற்கு காரணம் அருண் தான்.. எனது வாழ்வினை சீரழித்து நடுத்தெருவில் நிறுத்தி விட்டான்.. இவனைப் போன்றவர்கள் சமுதாயத்தில் வாழ்வது தவறு.. காவல் துறை இவனுக்கு தகுந்த தண்டனையை வழங்க வேண்டும்..இத்யாதி.. இத்யாதி.. என எழுதி வைத்து விட்டு ஒரு

முழக் கயிற்றிலோ, விசத்தையோ குடித்து விடலாமா..!

ஒரு வேளை அருண் தப்பித்து விட்டால், நாம் இறந்து பயனென்ன..?!

என்ன செய்வது..? ஒன்றும் புரிய வில்லை..!

உலகில் இவனைப் போன்றவர்கள் வாழவே கூடாது..! இவன் தனது தவறினை உணர்ந்து உணர்ந்து வருந்த வேண்டும்..! என்ன செய்யலாம்..! என்ன செய்யலாம்..! சிந்தித்தாள்..சிந்தித்தாள்..சிந்தித்துக் கொண்டே இருந்தாள்.

“ஏம்மா..இங்கே ஒரு பேஷண்டை பார்த்தீங்களா..! நீல நிற சாரி கட்டி யிருந்தாளே..”

“இந்தப் பக்கமா போறதைப் பார்த் தேன் சிஸ்டர்” என்றாள் அந்த வயதான பெண்மணி.

கீழ்ப்பாக்கம் மனநல மருத்து வமனையிலிருந்து தப்பி ஓடி விட்ட அனிதாவை நீங்களும் கூட சந்திக்க வாய்ப்பிருக்கிறது..!

“என்ன செய்யலாம்..? என்ன செய்யலாம்..?” என்ற குரலோடு சென்னை நகரத் தெருக்களிலோ, பீச், பார்க்கிலோ எவரேனும் சுற்றித் திரிந்தால் அது நிச்சயமாய் அனிதாவாக இருக்க வாய்ப்பிருக்கிறது.

■

## தமிழ்வழிக் கல்வி

நெஞ்சம் வருந்திட்ட தோழர்களே – இனி
நேரம் நமதென்று பார்ப்போம் – தமிழ்
நேர்வழி கல்வியில் சேர்ப்போம் – இனி
பஞ்சப் பராரியாய் ஆங்கிலக்கல்வியில்
பாழ்படும் போக்கினை மாய்ப்போம் – நல்ல
பள்ளித் தமிழ்க்கல்வி சேர்ப்போம்.

கஞ்சிக்கலைந்திடும் ஏழையர்கள் – கூட
கான்வென்ட்டு பள்ளிக்கு – வந்து
தங்கள் காசு பணங்களை – தந்து
பிள்ளைக் கற்றிட வேண்டியே
சொத்து சுகங்களைக் காற்றில்
இறைப்பதை பாரும் – இதை
மாற்றி அமைத்திட வாரும்.

மேடைமுழங்கிடும் வேந்தரெல்லாம் – கூட
மெச்சிடுவார் தமிழ் என்று – அது
மெத்தப் புலுகென்று நம்பு – அந்த
மாடிமனை வாழும் மக்கள் தலைவர்கள்
வாடிடுவார் தமிழ் என்று – அது
வஞ்சப்புகழ்ச்சியின் அன்பு.

இராமதாசு காந்தி

## நீங்காத தென்றல் நீதானா...

பொங்கிடும் உள்ளம் என்றும் உன்னால்
ஏங்கித் தவித்து எனைக் கொல்லும்
தேங்கி நிற்கும் காதல் வேகம்
ஓங்கி ஓங்கி மேல் செல்லும்

நெஞ்சம் நிறைந்த அன்பின் எண்ணம்
கொஞ்சும் நாளும் என் மார்பில்
மிஞ்சும் ஆசை உன்னைத் தொட்டு
அஞ்சிப் பேச அங்கம் கூசும்

உன்னை நினைத்து காயும் நிலவாய்
என்னை மறந்து எங்கோ திரிந்தேன்
கண்ணே உந்தன் நாமம் என்னுள்
கனவில் தோன்றி மறைவத னாலோ

தாங்கிடும் மனமோ என்னிடம் இல்லை
வாங்கி நாடும் உந்தன் அன்பால்
பாங்குடன் பழகும் எந்தன் உயிரே
நீங்காத் தென்றல் என்றும் நீதான்

– ராஜ்பாரதி




கவிஞர் பாலமுனை ஃபாறூக்கின் ஒன்பதாவது நூலாகவும், நாலாவது காவியமாகவும் வெளிவந்திருக்கும் 'மீளப் பறக்கும் நங்கணங்கள்' ஒரு நவீன காவியமாக மிடுக்குடன் பயணிக்க ஆரம்பித்துள்ளது.

இதைப் பற்றி சொல்வதானால் பிள்ளைகளைப் பெற்று வளர்த்து ஆளாக்கும் பெரும்பாலான முதிய பெற்றோரின் மனோநிலையை நன்கு புரிந்து கொண்ட நூலாசிரியர், அவர்களின் உணர்வுகளுடன் சங்கமித்து காவியமாக உருவாக்கி, வாழ்ந்து கொண்டிருக்கும் ஒட்டுமொத்த பெற்றோருக்கும் சமர்ப்பணம் செய்திருப்பதோடு, இளம் தலைமுறைக்கும் மனோவியல் ரீதியாக பாடமும் நடத்தியிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். இவர் அதற்காக எடுத்துக் கொண்ட கரு உண்மையிலேயே பாராட்டுக்குரியது.

அகமது மாஸ்டரின் கதையூடாக, கிராமங்களை நகரமாக்கும் பணியில் காடுகளை அழிப்பதையும் ,அதனால் இயற்கை தன் வனப்பை இழப்பதையும் தொட்டுக் காட்டியிருப்பது எல்லோருமே சிந்திக்க வேண்டிய ஒரு விடயம்.'பச்சைப் பசேலென இருந்த காடுகள் பசுமை இழந்து உயிரை விட்டன' எனும் வரிகள் இயற்கையை நேசிப்பவர்களின் உயிரையும் உருக்கும் என்பது திண்ணம்.

பிள்ளைகள் என்னதான் பாசமாக இருந்து பொறுப்பாகக் கவனித்துக் கொண்டாலும், பொருளாதார பிரச்சினைகளாலோ அன்றி வாழ்க்கைச் சிக்கலைக் குறைப்பதாக நினைத்தோ தமக்குள் பாசத்தைப் பங்கு போடுவதில் நான் நீ எனப் போட்டியிட்டு, கடைசியில் தாய் தந்தையை பிரித்து வைத்து பிணிகளை அவர்களுடன் சேர்த்து வைத்து விடுகிறார்கள்.

அவரின் இந்த வரிகள் அதற்கு சான்று பகர்கின்றன.

'கூட்டுக் குடும்பமாய் இருந்த மக்கள் தனித்தனித் தீவாய்ப் பிரிந்து போனதால், உறவு நிலைகள் சீர்குலைந்திட்டதால், மரியாதைப் பண்பு மதிப்பு என்பன குறைந்து விட்டதால், பிரியத்தோடு இருந்த உறவுகள் பிரிக்கப் படுவதால் மன இறுக்கம், விரக்தி என்று பிணிகள் கூடும்'

இக்காவியத்தில் இடம்பெற்றிருப்பது போன்றே, இன்னும் பல்லாயிரம் அகமது மாஸ்டர்களும், ஹபீபாக்களும் இன்றும் நம் மத்தியில், மனவேதனையுடன் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதும் வேதனைக்குரியதே! இந்நூல் மூலம் அவர்களின் மனவேதனை களையப்படுமானால், அதுவே நம் நூலாசிரியருக்கு கிடைக்கும் மாபெரும் வெற்றியாகும்.

இன்று சமூகத்தில் பெரும்பாலான குடும்ப உறவுகளுக்குள், புற்றுநோயாக புரையோடிப் போயிருக்கும் இந்த பிரச்சினையை, நாடி பிடித்தறிந்த நூலாசிரியர் பாலமுனை ஃபாறூக் அவர்கள் அதற்கு உளவியல் ரீதியில் வைத்தியமும் சொல்லியிருப்பது மிகச் சிறப்பு!

இலக்கிய செயற்பாடுகளுடன் தம்மை ஐம்பது வருடங்களுக்கும் மேலாகப் பிணைத்துக் கொண்ட பாலமுனை ஃபாறூக் அவர்களின் இந்தக் காவியம் பல விருதுகளைப் பெறும் என்பதில் ஐயமில்லை. 'மீளப் பறக்கும் நங்கணங்கள்' வாசகரின் மனங்களைக் கொள்ளை கொண்டு, நீண்ட தூரம் பறக்கும்.

**– வஃபீரா வஃபி**



## ஊருக்கு உபதேசம் !

ஏமாற்றும் மந்திர தந்திரம் சொல்லி
பொய் குருக்கள் காயம் மறைத்து
போலி வேடம் பூண்டு மெய்யில்
மையல் கொள்வா ரென்று ஆடுபாம்பே!
உபதேசம் சொல்வார் ஊரைக் கொள்ளை
அடிப்பார் ! துறந்தவன் எனப் பிதற்றுவார்
வெயில்பட்ட மஞ்சள் மாதர் அழகை
விருப்பி மேவும் பித்தரென ஆடுபாம்பே !
எள்ளில் எண்ணெய் என உயிரோடுக்
கலந்து நிற்கும் ஆதியைக் கடையில்
விலையாக்கி வாழும் அரசியல் மூடரெனச்
சிந்தைத் தெளித்து நின்று ஆடுபாம்பே !
தூணைச் சிறுதுரும் பெனச் சொல்வார்
ஆழி முழுவதும் குடித்தேத் தீர்ப்பார்
பகுத்தறிந்துத் தெளிந்து நீயும் ஆடுபாம்பே !

- செல்வம் பெரியசாமி

## காலனுக்குக் காலனாகு...

ஆனையினை வீழ்த்துதற்கு எறும்பு போதும்!
அரங்கத்தூண் சாய்ப்பதற்குத் துரும்பு போதும் !
கூனல்களை நிமிர்த்துதற்குப் பிரம்பு போதும்!
குழிபள்ளம் நிரப்புதற்கு முரம்பு போதும்!
ஏனங்கள் நிரம்புதற்குக் கருணை போதும்!
எளிமையினால் நிரம்புதற்கு வெறுமை போதும்!
மானங்கள் நிமிர்வதற்கு மட்டும் இந்த
மகாதமனி நரம்புகூடு நிரம்ப வேண்டும் !

இறைமுகத்தைக் காண்பதற்கு ஈரம் போதும்!
ஈரத்தைக் காண்பதற்கு நேயம் போதும்!
மறைமுகத்தைக் காண்பதற்கு ஆழம் போதும்!
மனத்தாழ அனுபவமே ஆளப் போதும்!
துறைமுகத்து நங்கூரத் துணையே போதும்!
தொடர்ந்திருக்க தன்னம்பிக் கையே போதும்!
நிறைந்திருக்கத் தன்மானம் மட்டும் போதும்!
நிமிர்ந்திருக்கும் வாழ்க்கையினை அதுதான் பேசும்!

வெறும்மூச்சு வாங்குவது வாழ்க்கை யல்ல!
உலைத்துருத்திஒன்றுபோதும் அதனைச் செய்ய!
திறன்மிகுந்த சேரசோழ பாண்டி யத்தைத்
திரும்பபெறும்திண்மையாளன் !திசைமு றிப்போன்!
சுரந்துவரும் சூரியன்நீ!தன்மா னத்தின்
சுருள்கத்திச் சூத்திரத்தின் ஆற்ற லாளன்!
கரந்துவரும் பகைமுடிக்கவுன் நினைப்பே போதும்!
காலனுக்குக் காலனாகி வாழுந்து காட்டு!

– கவிக்கோ துரை வசந்தராசன்

# தண்ணீரும் பயன்பாட்டாளர்களும்



– கோ.லீலா

நீர் நிலைகளின் மூன்று முக்கிய பயன்பாடுகள் அழகியல் சார்ந்தது, சூழலியல் சார்ந்தது மற்றும் இதர பயன்பாடுகள் அழகியல் சார்ந்த பயன்பாடுகள் உங்கள் பார்வைக்கும் மனரீதியான கொண்டாட்டங்களுக்கும் செவிகளை தரக்கூடியதாக இருக்கும்.

சூழலியல் சார்ந்த பயன்பாடு நிலத்தடி நீரை அதிகப்படுத்துதல் வெள்ளத்தை கட்டுப்படுத்துதல் வனவிலங்குகளுக்கு ஆதாரமாக இருத்தல் மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப தகவமைப்பு செய்துக் கொள்ளுதல் ஆகும்.

இதர பயன்பாடுகள்,குடிநீர் மற்றும் தினசரி பயன்பாடுகளுக்கு உரியது மீன் வளர்ப்பு,விவசாயம். மற்றும் தொழிற்சாலைகள் மதம் சார்ந்த செயற்பாடுகள் மற்றும் மனமகிழ் செயற்பாடுகளுக்கு பயன்படுவது.

இப்படி பல பயன்பாட்டிற்கு உதவும் தண்ணீரின் ஒரே ஆதாரம் மழைதான். இந்த மழையின் அளவு மேற்பரப்பு நீராகவும் நிலத்தடி நீராகவும் இருவேறு நிலைகளை அடைகின்றன.

இதில் மேற்பரப்பு நீர் என்பது ஆறு குளம் ஏரி குட்டை மற்றும் அணைகளில் தேங்கும் நீர் ஆகும்.

இதை விடுத்து நிலத்தடி நீர் என்பது பூமிக்கு அடியில் செல்லும் நீராகும். இதை கிணறு, ஆழ்துளை கிணறு, ஊற்று மூலம் மனிதர்கள் நாள் தோறும் சுரண்டிக் கொண்டே உள்ளனர்.

நீர் பற்றாக்குறை

இயற்கையில் கிடைக்கும் நீர்வளம் குறைதல்,

இயற்கை சீரழிவுகள்,

வேகமான நகர்புற வளர்ச்சி

மக்கள் தொகை பெருக்கம் ஆகியவற்றால் நீர் பற்றாக்குறை ஏற்படுகிறது. நீர் பற்றாக்குறை தொடர்கின்ற காலத்தில், நீரை பயன்படுத்துவோர் யார் யாரென பகுத்துப் பார்த்து, அவர்களின் நிலை,அதை சரி செய்யவேண்டிய முறைகள் யாவற்றையும் பார்ப்போம்.

- பெண்கள்
- விவசாயிகள்
- தொழிலதிபர்கள்
- தொழிற் பண்பட்டவர்

(மருத்துவர் பொறியாளர் வழக்கறிஞர்கள் மற்றும் தணிக்கையாளர்கள்)

- சிறுதொழில் முனைவோர்

- மாணவர்கள்.
- பொதுமக்கள்.
- ஆசிரமங்கள்.

## பெண்கள்

பொதுவாக கூலிப்பணிகளிலும் கூட ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமான கூலி கொடுக்கப்படுவதில்லை. இப்படி ஒரு சமமின்மை ஏற்கனவே சமூகத்தில் இருக்கிறது.அதோடு தண்ணீர் என்று வரும்பொழுது அந்த சமமின்மை தொடர்கிறது என்பது வருத்தம் தரும் செய்தி.

ஒரு வீட்டில் குடிநீர் சமையல்,துவைத்தல்,குளித்தல் மற்ற வீட்டு தேவைகளுக்கான தண்ணீரையும் குடும்ப உறுப்பினர்களுக்கான தண்ணீரையும் கொண்டுவந்து சேர்த்தல் என்பது ஒரு பெண்ணுக்கு மட்டுமேயான கடமையாக கருதப்படுகிறது. இதை படிக்கும் பொழுது சில ஆண்கள் நாங்களும்தான் தண்ணீர் சேகரித்து வருகிறோம் என்று சொல்லக் கூடும்.எனினும் பெண்களின் பங்கு 99% உள்ளது குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளிலும்,வளர்ந்துவரும் நாடுகள் என்று சொல்லக்கூடிய பல நாடுகளிலும் பெண்களுக்கு தண்ணீர் கொண்டுவரும் பொறுப்பு சுமத்தப்பட்டிருக்கிறது. குறிப்பாக இந்தியா,ஆப்பிரிக்கா,பொலிவியா மற்றும் கென்யா போன்ற நாடுகளில் பெண்கள் பல கிலோ மீட்டர் தூரம் வெற்று காலுடன் நடந்து சென்று குடம் குடமாக அல்லது கண்டைனர் கண்டைனராக தண்ணீர் சுமந்து வரும் காட்சிகள் நாள்தோறும் இயல்பாக நடக்கிறது. இந்தியாவை பொறுத்தவரை ராஜஸ்தானிய பெண்கள் பல மைல் தூரம் நடந்து தலையிலே அடுக்கடுக்காக குடங்களில் தண்ணீர் சுமந்து வரும் காட்சி நடைபெறுகிறது.

They want their heads for thinking not for carrying water.என அடிக்கடி

சொல்வதுண்டு. கிட்டத்தட்ட 266 மில்லியன் மணி நேரத்தை தண்ணீரைச் சேகரிப்பதற்காக செலவிடுகிறார்கள். சுமார் 633 மில்லியன் மக்கள் தூய்மையான நீரற்ற நாளை எதிர்கொள்கிறார்கள். பொது இடங்களில் திறந்தவெளி கழிப் பிடங்கள் இருப்பதன் மூலம் மழைக்காலங்களில் கழிவுகள் பாதுகாப்பற்ற நதிகளிலும் குளங்களிலும் கிணறுகளிலும் குட்டைகளிலும் கலந்து விடும் அபாயம் இருக்கிறது. இந்த நீரை தான் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பயன்படுத்துகிறார்கள். இந்த நீரிலேயே உணவையும் சமைக்கிறார்கள் இந்த மாசுபட்ட நீர்கூட போதுமான அளவில் பெண்களுக்கு கிடைப்பதில்லை.

மனித வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் நீர் மிக முக்கியமானது. உயிரியல் மற்றும் வேதியல் ரீதியாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் டயரியா, குடல் தொற்று நோய், தோல் நோய்கள் போன்றவற்றை வராமல் தடுக்கும். குழந்தைகளின் வளர்ச்சிக்கும் உடலில் உள்ள கழிவுகளை வெளியேற்றவும் போதுமான நீர் அவசியமாகிறது.

இந்தியா,பொலிவியா மற்றும் கென்யா நாடுகளில் கர்ப்பிணி பெண்கள் சிறு குழந்தைகள் பருவப் பெண்கள் இளம் மங்கைகள் என அனைத்து வயது பெண்களும் தண்ணீரை தூக்கிச்செல்லும் கடினமான வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

போதுமான தண்ணீர் வசதியற்ற இடங்களில் வசிக்கும் பெண்கள் எப்படி இருக்கிறார்கள் என்று பார்க்கும்போது, பருவமடைந்த பல பெண்கள் பள்ளிக்குச் செல்வதை நிறுத்திவிடுகிறார்கள் ஏனென்றால் தங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்வதற்கு தேவையான அளவிற்கு தண்ணீரோ, கழிப்பிட வசதிகளோ இல்லை என்பதே இதற்கு முக்கிய காரணம்.

Drop for a Drop என இதைச் சொல்ல வேண்டும்.

இதைப்போலவே ஒரு கர்ப்பிணி பெண்ணிற்கு தேவையான அளவு தண்ணீரும்,சத்தான உணவும்,ஓய்வும் கிடைக்க வேண்டும் மாறாக ஒரு நாளைக்கு இருபதிலிருந்து ஐம்பது லிட்டர் தண்ணீர் வரை நெடுந்தூரம் நடந்து சென்று சுமந்து வர வேண்டிய சூழல் உள்ளது. அந்த தண்ணீரும் சுகாதாரமற்ற தண்ணீர். தண்ணீரை உட்கொள்ளும் போது தாய்க்கும், சேய்க்கும் பல நோய்களும்,பாதுகாப்பற்ற வாழ்வியலும், உடல் நல குறைப்பாடுகளும் ஏற்படுகிறது.

ஆப்பிரிக்காவில்,ஒரு நாளைக்கு 16 மில்லியன் மணி நேரத்தை தண்ணீர் சேகரிப்புக்காக செலவழிக்கிறார்கள். ஆண்கள் 6 மில்லியன் மணிநேரமும், குழந்தைகள் 4 மில்லியன் மணி நேரமும் இதற்காக செலவிடுவதாக ஆய்வறிக்கை ஒன்று கூறுகிறது.

தண்ணீர் பிடிக்க செல்லும் பெண் குழந்தைகளை 30 நிமிடத்திற்கு பதிலாக 15 நிமிடம் மட்டும் தண்ணீர் சேகரித்தால் போதுமென்றால், பள்ளியில் 12% வருகை அதிகரித்து விடுவதாகவும் சொல்லப்படுகிறது. இதைப் படிக்கும் போது இதெல்லாம் உண்மையா? அப்படி எந்த குழந்தையையும் பார்க்கவில்லையே என்று தோன்றும்.ஆனால் நீங்கள் எண்ணுவது உண்மையில்லை, மாறாக நம்மைச் சுற்றி நாம் கவனிப்பதே இல்லை எனபதே உண்மை.

மேலும் அதீத தாகம் எடுத்தால் மட்டுமே பெண் தண்ணீர் அருந்துகிறாள், எனும் முகத்திலறையும் உண்மை ஒருபுறம்...

பெண்கள் தண்ணீர் சேகரிக்கும் பணியிலிருந்து விடுபடும் போது



தன் குடும்பம்,தன் கல்வி, சுய முன்னேற்றம்,சிறு தொழில் அல்லது அதிகார பொறுப்பிற்கு செல்லும் வாய்ப்புகள் மிகுதியாகவே உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.இதற்கான தீர்வை கட்டுரையின் இறுதியில் காணலாம்.

பெண் மட்டுமின்றி சாதிய பாகுபாடு,ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடுகளின் மூலமும் நீர் சமமாக பகிர்ந்தளிக்கப்படவில்லை என்பதே வலி தரும் உண்மை. இதற்கு சான்றாக குற்றாலத்தில் குளிக்க தலித்துகளுக்கு உரிமை மறுக்கப்பட்ட நிகழ்வு முதல், உயர் சாதியினருக்கு என தனி குளம் அமைத்துக் கொள்ளுதல் வரை இந்த ஏற்றத் தாழ்வுகள் புரியும்,பணம் படைத்தோர் காசுக்கு தண்ணீரை வாங்கி விடுகின்றனர்,பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு மாசடைந்த நீர் குறைந்த அளவில்தான் கிடைக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

## விவசாயிகள்.



இந்தியாவின் 70 சதவீத தண்ணீர் விவசாயத்திற்குதான் பயன்படுகிறது. இந் நிலையில் தண்ணீர் எப்படி விவசாயத்தால் மாசுப்படுகிறது என்று பார்ப்போம்

விவசாயத்தில பயன்படுத்தும் ரசாயனம் தண்ணீர் வழியாக பரவி அருகில் உள்ள நீர்நிலைகளில் கலப்பதுடன்,பூமி செறிவூட்டலாகும் போது ரசாயனமும் பூமிக்குள் சென்று விடுகிறது. முந்நூறு, அல்லது அறுநூறு அடிக்கு கீழேயிருந்து தண்ணீர் எடுத்தால் அது விஷமாகி விடுகிறது.

அந்த தண்ணிரில் பயிராகும் அனைத்தும் விஷமாகி விடுகிறது, அதை உண்ணும் ஆடு, மாடு அனைத்திற்கும் விஷம் பரவுகிறது. மாடு தரும் பாலை ஒரு கர்ப்பிணி பெண் அருந்தும் போது அவருக்குள்ளும் அந்த விஷம் செல்கிறது.

இந்த பெண் தன் குழந்தைக்கு ஊட்டும் தாய்ப்பாலும் விஷமாகி விடுகிறது. ஒரு தாய் தன் குழந்தைக்கு ஊட்டும் முதல் உணவே விஷமாகினால், இதை விட மோசமான நிலை வேறென்ன இருக்க முடியும். இது ஒரு புறமென்றால்...

பூமிக்கு உரம் இடுவதால், பூமியின் உப்புத் தன்மை கூடி விடுகிறது,உப்பை தின்றவன் தண்ணீர் குடிப்பான் என்பது போல் நிலத்திற்கு தேவையான தண்ணீர் ஐந்து பங்கு அதிகமாகி விடுகிறது.இதனால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது.

இந்த வான்வெளியில் 78% நைட்ரஜன் உள்ளது,ஆனால் வெறும் 46% சதவீதம் நைட்ரஜன் மட்டுமே உள்ள யூரியா மூட்டையை ரூபாய் 300 க்கும் மேல் கொடுத்து வாங்குகின்ற அறியாமையை என்ன சொல்வது.நம் முப்பாட்டன்கள் எப்படி இந்த நைட்ரஜன் தேவையை எதிர் கொண்டார்கள். அவரை,துவரைகளை ஊடு பயிராக,அல்லது சுழற்சி முறை பயிராக இட்டு, அறுவடைக்குப் பின் வேறினை மடக்கி உழுவார்கள். அவரை, துவரைக்கு காற்று மண்டலத்தில் உள்ள நைட்ரஜனை வேரின் முடிச்சுகளில் நிலை நிறுத்தும் தன்மைக் கொண்டவை. இத்தகைய பராம்பரிய அறிவை நாம் பயன்படுத்த தவறி விட்டோம் என்பதே உண்மை.

நீரும்,சோறும் மாசடைந்து ஒரு நாட்டின் வருங்கால சந்ததியினரை உடல்

ரீதியாகவும் மற்றும் உள ரீதியாகவும் பாதிப்படைய செய்துள்ளோம் என்பது மறுக்கமுடியாத உண்மை.

தண்ணீர் மாசு மற்றும் பற்றாக்குறையை சரி செய்வது பற்றி பின் காண்போம்.

## தொழிலதிபர்கள்.

சமூகத்தின் முன்னேற்றம் என்பது தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் உள்ளதாக எண்ணுகிறோம். அப்படி வளர்ந்து விட்ட தொழிற்சாலைகளுக்கு சில கட்டுபாடுகளும்,சூழலியல்சான்றிதழும், கழிவுப் பொருட்களை சுத்திகரிப்பு செய்து பின் வெளியிட அனுமதியென பல்வேறு கட்டுபாடுகள் இருந்தாலும், தொழிலதிபர்களின் அலட்சியத்தால்,அனைத்து கழிவுகளும் சுத்திகரிக்கப்படாமல் நீர்நிலைகளில் விடப்படுகிறது.

இதன் மூலம் மிக விஷத்தன்மை வாய்ந்த பொருட்கள் தண்ணீரில் கலந்து தண்ணீரை மாசடைய செய்வதோடு நீர் வாழினங்களை மடிய செய்கின்றன.

எடுத்துக்காட்டாக நொய்யலாற்றை சொல்லலாம்.

ஆறுகளைப் போலவே, கடலிலும் எண்ணற்ற கழிவுகளை கொட்டு கின்றனர், குறிப்பாக E-waste அதிகம் கொட்டப்படுகிறது. கடலின் சூழல் கெடும் போது, மற்ற எல்லா சூழலும் கெட்டுவிடும், கடலைக் குறித்த தட்டையான பார்வையே பலரிடம் இருப்பதால், இத்தகைய நிலை இன்னும் போதிய கவனம் பெறவில்லை.

தொழிற்சாலைகளின் சுத்திகரிக்கப்படாத கழிவுகளை நீரில் விடுவதால், அக்கழிவுகளில் உள்ள பொருட்களால் மனிதர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் ஏராளம். நேரடியாக தண்ணீரை உட்கொள்ளுதல் மற்றும் குளிக்கப் பயன்படுத்துதல் மூலமும், அத்தண்ணீரில்வாழும்மீன், நண்டு போன்றவற்றை உட்கொள்வதாலும் பல நோய் கள் வருகின்றன.



தோல் நோய், புற்றுநோய், நரம்பு மண்டல பாதிப்புகள் என பல்வேறு நோய்கள் வர காரணமாக உள்ளது.

குறிப்பாக தோல் பதனிடும் தொழிற்சாலை பகுதி களில் உள்ள தண்ணீர் ஆரஞ்ச் வண்ணத்தில் இருக்கும், தண்ணீரில் அதிக அளவு குரோமியம் இருந்தால் தண்ணீர் இவ்வண்ணத்தில் இருக்கும், இதனால் நுரையீரல் புற்றுநோய், மற்றும் பல் சம்பந்தமான நோய்கள் வரும்.

மனிதர்களை மட்டுமின்றி, மண்ணையும் மலடாக்கும் தன்மைக் கொண்டவை தொழிற்சாலை மாசுகள்.

கழிவுகள் மட்டுமல்லாது, தொழிற்சாலையில் உற்பத்தியாகும் பொருட்களுக்காக செலவிடப்படும்

நீரும் அதிகம் என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.எனினும் வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் என்று வரும் போது நான் சொல்லும் வாசகம் ஒன்று நினைவுக்கு வருகிறது.

Development Vs Environment - No
Development and Environment - No
Develop the Environment - yes

என்பதுதான் அந்த வாசகம்.

தொழிலதிபர்கள் பலர் முறையான சுற்றுச்சுழல் பாதுகாப்பிற்கான மாசுக் கட்டுப்பாட்டினை செய்வதில்லை என்பதே உண்மை.

- தொழிற் பண்பட்டவர்

(மருத்துவர்,பொறியாளர், வழக்கறிஞர்கள் மற்றும் தணிக்கையாளர்கள்)

## மருத்துவர்கள்.

என்னப்பா இது ஊருக்கே மருந்து தர்றவங்க, தண்ணிய என்ன செய்யப் போறாங்கன்னு தானே கேட்கிறீங்க... இதோ கேளுங்க.

ஊரில இருக்குற அத்தனை பேரும் புள்ளைய டாக்டருக்கு படிக்க வைக்கணுமின்னு ஆசைப்படுறாங்க ஆனா யார் ஊசிப் போட்டுப்பா? சரி அத விடுங்க விசயத்துக்கு வருவோம்.

பழைய காலத்தில் ஊசிப் போட்டு திரும்ப தண்ணீரில் கழுவி மீண்டும் ஊசிய மட்டும் மாத்தி சிரிஞ்ச பயன்படுத்துவாங்க,அந்த தண்ணீரைப் பூமியில் தான் ஊற்றுவார்கள்,அதே போல் டெட்டால் போட்டு கை கழுவும் தண்ணீரும் பூமிக்குதான் போகும்,அப்படி பூமிக்கு போகும் தண்ணீரில் இருக்கும் வேதியியல் பொருட்கள் பூமியில் தங்கிடும்.

அது மட்டுமில்லை,பெரிய பெரிய அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு பின்னால் போய் பார்த்தீங்கன்னா மலை மலையா சலைன் பாட்டில் குவிஞ்சிருக்கும், கிட்டத்தட்ட 200-300 மீட்டர் நீளத்திற்கு மூணு மீட்டர் உயரத்திற்கு எல்லாம் ஒரு குவியல் இருக்கும், இதனால் என்ன பிரச்சினை என்றுதானே கேட்கிறீர்கள்.

இந்த பாட்டில்கள் எல்லாம் ப்ளாஸ்டிக் என்று சொல்லக்கூடிய நெகிழிப் புட்டிகள்,இதன் மீது பெய்யும் மழை பூமியை சென்று சேராது,அதனால் நிலத்தடி நீர் செறிவூட்டல் தடைப்படுவதோடு,அப்பகுதி மண்ணின் வளமும் பாதிக்கப்படும். மேலும்,மழைநீர் இதன் மேல் தேங்கி கிடப்பதால் பல சுகதார கேடுகளுக்கும் காரணமாகி விடுகின்றது.

நெசவுத் தொழில் எனும் போதே நினைவிற்கு வருவது நொய்யலாறு, சாயப்பட்டறைகளின் கழிவால் இன்று ஒரு ஆறே உருமாறிக்கிடக்கிறது. அதில் விழும் வரத்து நீரின் தன்மையும் கெட்டு விடுகிறது.அப்படி என்னதான் உற்பத்தி செய்கிறார்கள்.அத்தகைய உற்பத்தியின் மூலம் நாட்டின் வறுமை ஒழிந்து விட்டதா?

பின்னலாடை தொழிற்சாலைகளை ஏன் வெளிநாடுகளில் நிறுவிக் கொள்ளாமல் நம்மிடம் கொடுத்தார்கள்,எதையும் தொலைநோக்கு பார்வையுடன் காணத் தவறி விடும் நம் அரசியல் கட்டமைப்பு தான் இதற்கு காரணம்.தமிழ்நாடு மட்டுமின்றி இன்னும் பல்வேறு பகுதிகளில் நீர்நிலைகளின் மரணம் நிகழ்ந்த வண்ணம் இருக்கிறது.

பொறியாளர்கள்.

மின்னணு பொறியாளர்கள் E-WASTE எனும் மி-குப்பைகளை உருவாக்கி விடுகிறார்கல்,அதை மறுசுழற்சி செய்வது அரிதான காரியம்.இந்த குப்பைகளை கடலில் கொட்டிவிடுகிறார்கள். கடல்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுவதோடு,அக்குப்பைகளில் உள்ள விலையுர்ந்த சில கனிமங்களை பிரித்தெடுக்க தனி நபர்கள் செய்யும் முயற்சியாலும் சுற்றுச் சூழல் மாசடைகிறது.

- சமூகப் பொறியாளர்கள்.(சிவில்)

தண்ணீரை காப்பதிலும்,அதை அழிப்பதிலும் இவர்கள் சமபங்கு வகிக்கின்றனர்,ஆறு,குளம்,ஏரி,வாய்க்கால்,கண்மாய்,போன்றவற்றை ஒரு புறம் பராமரித்தாலும், நிலத்தில் அதிக கட்டிட வேலைகளை மேற்கொள்வதும் இவர்களே.சிமிண்ட் கலவை போடும் போது (BOTH BY MACHINARIES(INCLUDING RMC) AND MANUAL) குறைந்த்து 25-40 சதுர அடி நிலம் சிமிண்ட் மற்றும் ஜல்லிகளால் ஆக்கிரமிக்கப் படுவதோடு,கலவை கலந்த தண்ணீர்,சிந்தும் கலவையென பூமியின் மேற்புறம் சிமிண்ட் கலவைக் கொண்டு பூசப்பட்டது போல் ஆகிவிடும். இதனால் சிமிண்டின் பகுதி பூமியின் உள்ளிறங்க வாய்ப்பாகி விடுவதால் நிலத்தடி நீர் மாசடைவதோடு. மேற்புறம் நாளடைவில் கெட்டித்தன்மை பெறுவதால், மழைக்காலங்களில் நிலத்தடி நீர் செறிவூட்டல் தடைப்படுகிறது.

நிலத்தின் பெரும் பகுதிகளில் கட்டிடங்களை கட்டுவதன் மூலம், மரம்,செடி,கொடிகளை அழிப்பதும், இன்னும் வனம் ஒட்டிய பகுதிகளில் வனத்தை சூறையாடும் போக்கும் காணப்படுகிறது இதனால், காலநிலை மாற்றம் ஏற்படுவதோடு,பூமியின் வெப்பம் அதிகரிக்கிறது.

அதே போல், அணை, சிற்றணை போன்ற கட்டமைப்புகள் செய்யும் போதும் வெட்டப்படும் மரங்களின் சிறு சிறு கிளைகள் அங்கேயே விடப்படுவதால் நாளடைவில் தேங்கும் தண்ணீரில் அழுகி மீத்தேன் வாயுக்களை உருவாக்கி விடுகிறது. இதன் மூலம் பூமி வெப்ப மயமாக்கப்படுகிறது. இதை அருந்ததி ராய் அவர்கள் வெகு விரிவாக தன் புத்தகமொன்றில் எழுதியுள்ளார்கள்.

இப்படி துறைவாரியாக சொல்லிக்கொண்டே போகலாம்.

- சிறுதொழில் முனைவோர்

சிறு தொழில் செய்வோர்களும் விதி விலக்கல்ல,தான் செய்யும் உற்பத்தி பொருளின் கழிவுகளை அருகில் இருக்கும் நீர் நிலைகளில் விட்டுவிடுவார்கள். குறிப்பாக இறைச்சி கடைகள் வைத்திருப்போர் இறைச்சியின் கழிவுகளை ஆற்றில் அல்லது அருகில் செல்லும் வாய்க்காலில் கொட்டிவிடுகின்றனர். இதன் மூலம் நீர் மாசடைவதுடன், பல் வேறு சுகாதார கேடுகளும் விளைகின்றன.

- மாணவர்கள்.

நீர்நிலைகளைப் பற்றிய விரிவான விழிப்புணர்வு இவர்களுக்கு மிகத் தேவை ஏனெனில்,வருங்காலத்தில் இவர்கள் தான் நாம் செய்கிற தவறுகளால் வரும் விளைவுகளை சந்திக்கப் போகிறவர்கள். இவர்களால் நீர்நிலைகளுக்கு பெரும் பாதிப்பு இல்லை. என்றாலும் நீர்நிலைகளை பராமரிக்கவும்,நீரை விரயம் செய்யாமலிருக்கவும் இவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்,பல் துலக்கும் போது,சவரம் செய்யும் போது,குளிக்கும் போது குழாய்களை திறந்து விட்டு எத்தனை நேரமானாலும் இவர்களின் வேலை முடிந்தப் பின்னரே குழாயை மூடும்

பழக்கம் கொண்டவர்களாக பலர் இருக்கின்றனர். பெற்றோர்கள் சில நீர் சிக்கன வழிமுறைகளை கடைப்பிடிப்பதன் மூலம்,அதைப் பார்க்கும் குழந்தைகளும் கடைபிடிப்பர்.

என் மகள் இன்றும் கூட இரு தம்ளரில் தண்ணீரை தேவையான போது பிடித்து வைத்துக்கொண்டு பல்துலக்கும் வழக்கம் உடையவர்.தேவைப்பட்டால் மீண்டும் தண்ணீரை குழாயிலிருந்து சேகரித்துக்கொண்டு குழாயை மூடிவிடுவார். உணவு பொருட்களை வீணடிப்பதன் மூலம் தண்ணீர் எப்படி வீணாகிறது என்பதையும் நாம் தான் சொல்லித் தர வேண்டும்.

- பொதுமக்கள்.

நீர்நிலைகளை ஆக்கிரமித்து வீடுகள் கட்டுவது,பின் வீட்டு கழிவுகளை அருகில் உள்ள நீர்நிலைகளில் விடுவது என இவர்கள் நீர்நிலைகளை அழிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றனர்.
பல ஊர்களில் பணியாற்றி இருக்கிறேன்,எல்லா ஊர்களிலும் ஒன்று போல் ஊரின் உள் ஓடும் ஆறு அல்லது வாய்க்கால்கள் ஊர் பொது சாக்கடையாக மாறியிருப்பதை காணலாம்.அதோடு நீர்நிலைகளை ஆக்ரமித்து வீடு கட்டுதல்,அவர்களின் தொழிற்சார்ந்த கட்டிடங்களை கட்டுவது,தன்னுடைய வயல்,அல்லது தோப்புகளை நீர்நிலைகளை அழித்து உருவாகுதல் என பல்வேறு செயல்பாடுகள் நீர்நிலைகளை அழிக்கவும்,மாசடையவும் செய்கின்றன.

- ஆசிரமங்கள்

ஆ பெரிய சிரமங்கள் தருகின்றன இத்தகைய ஆசிரமங்கள். நீர் நிலைகளை ஆக்கிரமிப்பு செய்தல்,காடுகளை அழித்தல் என பல்வேறு செயல்களுடன்,வழிப்பாடு என்ற பெயரில் பெரும் கூச்சல்,வெளிச்சம் என உருவாக்கி கானுயிர்களை காட்டிலிருந்து துரத்துதல் என பல்வேறு அடாத செயல்கள் செய்கின்றன இத்தகைய ஆசிரமங்கள்.

## தீர்வுகள்.

- பெண்கள் மட்டுமின்றி ஆண்களும் சேர்ந்து தூய்மையான தண்ணீரை பெறுவதற்கான வழிவகைகளை காண வேண்டும்,விழிப்புணர்வு பெற வேண்டும்.தன் தேவைக்கான குரலைக் கொடுக்க வேண்டும்.பெண்கள் தன் வேலை பளுவை பகிர்ந்துக் கொள்ள வேண்டும்,பெண்கள் தண்ணீர் தனக்கான உரிமை என்பதை உணர வேண்டும்.தண்ணீரைக் குறித்த கல்வியறிவு பெற வேண்டும்.

- விவசாயிகள் இயற்கை வேளாண்மை, அங்கத வேளாண்மை, குறைந்த அளவு தண்ணீரை பயன்படுத்தி விவசாயம் செய்தல்,இரசாயன உரங் களை தவிர்த்தல், அரசு அளிக்கும் பயிற்சி முகாம்களில் கலந்து கொள்ளுதல், அதை யாவருக்கும் சொல்லி தருதல் வேண்டும்.தண்ணீர் திருட்டை முற்றிலுமாக தவிர்த்தல் வேண்டும். நீர்நிலைகளை உடைத்தல், ஆக்கிரமித்தல் போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

- தொழிலதிபர்கள், சுற்றுச்சூழல் சட்டங்களை மதித்தல், மதிக்காதவர் கள் மீது அரசு கடும் நடவடிக்கை எடுத்தல்,உள் நாட்டு வளங்களை பாதிக்காமல் தொழில் செய்ய உறுதிமொழியினை அரசு பெறுதல்.

• தொழிற் பண்பட்டவர்.

விழிப்புணர்வு பெறுதல், வளர்ச்சியும், சுற்றுச்சூழல் இரண்டும் சமமாக இருக்க வேண்டுமென்றாலும், சுற்றுச்சூழலின் வளர்ச்சியை கருத்தில் கொள்ளுதல். நீர்வள ஆதார துறை பொறியாளர்கள், ஒவ்வொரு பாசன காலத்திற்கு முன்னும் water budgeting செய்தல், அதை முறையாக அட்டவணையிட்டு செயல்படுத்துதல் போன்றவற்றை இன்னும் நேர்த்தியாக செய்தல் வேண்டும்.

மருத்துவர்கள் மற்ற தொழிற் பண்பட்டவர்கள், கழிவு நீரை சுத்திகரிக்க பொறியாளர்களை அணுகி அதற்கான அமைப்பினை செய்துக் கொள்ள வேண்டும் தவறும் பட்சத்தில், தண்டனை, தண்டம் கட்டுதல் போன்றவற்றை அரசு நடைமுறைக்கு கொண்டு வருதல் வேண்டும்.

• மாணவர்கள்.

தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தும் வழிகளை பின்பற்றுதல் வேண்டும், உணவுகளை வீணடிப்பதை தவிர்க்க வேண்டும், காகிதங்களை வீண் செய்யக்கூடாது. மாணவர்கள் குழுக்களாக இணைந்து உள்ளூரில் உள்ள நீர்நிலைகளை தூர்வாருதல், மேம்படுத்துதல் போன்றவற்றில் ஆர்வமுடன் செயல்பட வேண்டும்.

• பொதுமக்கள்.

அரசே அனைத்தையும் செய்ய வேண்டுமென எண்ணாமல், சுய விழிப் புணர்வுடன் செயல்பட வேண்டும். கழிவுகளை நீர்நிலைகளில் கொட்டுவதை தவிர்த்தல், செடிகளுக்கு மாலையில் தண்ணீர் ஊற்றுதல் என சில சின்னஞ்சிறு தீர்வுகளையும். சில தீர்க்க முடியாத சிக்கல்களை அரசின் அல்லது அரசு சார்ந்த துறைகளின் நேரடி கவனிப்புக்கு கொண்டு செல்லுதல் போன்றவற்றையும் செய்ய வேண்டும்.

• ஆசிரமம்

பணப்பலம்,ஏனைய மற்ற பலங்களை காட்டி நீர்நிலைகளை ஆக்கிரமித்தல், காடுகளை அழித்தல் போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.இவர்கள் அதை மீறும் பட்சத்தில்,சட்டம் பராபட்சமின்றி நடுநிலையோடு செயல்பட வேண்டும்.

பொதுவாக கடைப்பிடிக்கப்பட வேண்டியது:

மழைநீர் சேகரிப்பு குறித்து அனைவருக்கும் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்.அனைத்து கட்டிடங்களிலும் மழை நீர் சேகரிப்பு தொட்டி அமைத்தலை கட்டாயப்படுத்த வேண்டும்.தவறியவர்களுக்கு அவர்களுக்கான தொழில் அல்லது வாகன உரிமத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## சின்னஞ் சிறு தீர்வுகள்.

1. உணவை வீண் செய்யாதீர்கள்.வீணாகும் உணவு பொருட்களின் வழியே மறை நீரை வீண் செய்கிறோம்.
2. உணவகங்களுக்கு சென்று உண்ணும் போது, ஒவ்வொரு உணவிற்கும் ஒவ்வொரு தட்டை பயன்படுத்தாதீர்கள். உணவு பரிமாறுபவரிடம் பொறுமையாக அவருக்கு புரியும் வண்ணம் சொல்லுங்கள். ஏனென்றால், பிரபலமான உணவகத்தில் தட்டுகளை மட்டும் கழுவ ஒரு நாளைக்கு பயன்படும்

தண்ணீரைக் கொண்டு ஒரு பகுதிக்கே ஒரு நாளைக்கான தண்ணீராக பயன்படும்.

3. விழாக்களில் தண்ணீர் பாட்டில் வைக்காதீர்கள். குடித்தது போக மீதம் வைக்கப்படும் தண்ணீர் வீணாகிவிடும்.
4. பள்ளியிலிருந்து குழந்தைகள், மற்றும் வெளியில் சென்று வீடு திரும்பும் அனைவரின் தண்ணீர் பாட்டிலிலும் உள்ள தண்ணீரை சேகரித்து செடிகளுக்கு ஊற்றுங்கள்.
5. பல் சுத்தம் செய்யும் போது, சவரம் செய்யும் போதும் குழாயினை முழுவதும் திறந்து வைக்காதீர்கள்.தேவைப்படும் போது மட்டும் திறந்து கொள்ளுங்கள்.
6. தண்ணீர் எங்கு வீணாகி கொண்டிருந்தாலும், உடனடியாக அதை நிறுத்த ஏற்பாடு செய்யுங்கள்.
7. துணிகளை இயந்திரத்தில் துவைப்பதாக இருப்பின், இயந்திரத்தின் முழு கொள்ளவிற்கு துணிகளை போட்டு துவையுங்கள். வெளியில் செல்ல வேண்டுமென்பதற்காக குறைந்த அளவு துணியை துவைக்காதீர்கள்.




8. முடிந்த அளவு மின்சாரத்தை குறைவாக பயன்படுத்துங்கள்,ஏனெனில் மின்சார சிக்கனம் மறைமுகமாக தண்ணீர் சிக்கனம் ஆகும்.
9. Car pooling என்ற முறையை பயன்படுத்துங்கள். அதாவது ஒரு நபருக்காக ஒரு காரை பயன்படுத்தாதீர்கள். முடிந்தவரை ஒரே அலுவலகம், பள்ளி என செல்பவர்கள், ஒரே காரில் செல்லலாம் ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொருவரின் காரினை சுழற்சி முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம் இதன் மூலம் வாகனம் வெளியிடும் புகையை நம்மால் முடிந்த வரை கட்டுப்படுத்தலாம்.
10. பிறந்தநாள் பரிசாக மரக்கன்றுகளை பரிசளியுங்கள், சிறப்பாக பராமரிப்பவர்களுக்கு ஊக்கப்படுத்தும் விதமாக பாராட்டு, மற்றும் ஊக்கப் பரிசுகள் வழங்கலாம்.
11. கல்லூரிகளில் ஒவ்வொரு மாணவ, மாணவியருக்கும் ஒரு மரக்கன்றுகளை பரிசளித்து, அவர்களின் படிப்பு முடியும் வரை பராமரித்து,வெளி செல்லும்போது உள் வரும் புது மாணவர்களுக்கு ஒப்படைக்கலாம். இதன் மூலம் மரங்களில் காதல் கதைகளை செதுக்கி, பின்னொரு நாளில் பார்க்கும் போது சோகமோ, மகிழ்வோ கொள்வதை விட,நான் வளர்த்த மரமென்ற பெருமையுடன் பின்னொரு நாளில் நம் குடும்ப உறுப்பினர்களிடம் பெருமையுடன் கூறலாம்.
12. உங்கள் வீட்டில் ஒழுகிக் கொண்டிருக்கும் குழாய்களை உடனுக்குடன் சரி செய்யுங்கள்.
13. கழிவறைகளில் half flush முறையை பயன்படுத்தும் வகையாக பொத்தான்களில் வித்தியாசம் வையுங்கள். ஏனெனில் ஒரு நாளைக்கு 5-12 லிட்டர் தண்ணீர் இதற்கே செலவாகிறது.
14. தோட்டங்களுக்கு மாலை அல்லது பின் மாலை பொழுதுகளில் நீருற்றுங்கள்.
15. மூடாக்கு எனும் முறை, அதாவது செடிகளிலிருந்து விழும் இலை, தழைகளை

அங்கேயே விட்டுவிடுங்கள், வெங்காயத் தோல், மிஞ்சிய இன்னும் பிற தண்ணீரை நிறுத்தி வைக்கும் பொருட்களை கொண்டு மூடாக்கு போட்டு தோட்டங்களை பராமரிப்பதன் மூலம் தண்ணீர் செலவு குறையும்.

16. சமையலறையிலிருந்து வெளிவரும் தண்ணீரைப் போன்ற கழிவு நீரினை தோட்டங்களுக்கு விடுங்கள், அதில் நைட்ரஜன் அதிகமாக இருக்கும்.
17. தண்ணீர் அதிகமாக தேவைப்படும்பணப் பயிர்களை தவிர்த்து, தண்ணீர் குறைவாக தேவைப்படும் சிறுதானிய வகைகளை பயிரிடலாம்.
18. சுற்றுலா செல்லும்பொழுது பிளாஸ்டிக் பைகளை ஆங்காங்கே போடாதீர்கள், அதை உண்ணும் வனவிலங்குகள் உயிரிழக்கும், வனவிலங்குகள் இருந்தால் தான் காடும், நீரும் இருக்கும். கண்ணாடி பாட்டில்களை உடைத்துப் போடாதீர்கள், அது கானுயிர்களின் உடலில் காயங்களை ஏற்படுத்தும்.
19. எல்லாவற்றுக்கும் மேலாக குழந்தைகளுக்கு நீரின் அவசியத்தையும், அதனை பாதுக்காக்கும் முறைப்பற்றியும் சொல்லிக் கொடுங்கள்.
20. நம்மால் இதையெல்லாம் செய்ய முடியுமா என யோசிக்காமல், முடியும் என நம்புங்கள். நெகிழிகளை தவிர்த்து விடுங்கள். ■

# வேர்களைத் தேடி




- இது என்னம்மா பேரு
சின்னச்சாமின்னு ...
பசங்கல்லாம்
கேலி பண்றாங்க'

- 'அது உங்க தாத்தா பேருப்பா
ஆசை ஆசையா
உங்கப்பாதான்
உனக்கு வெச்சாரு.'

- 'அண்ணனுக்கு
வெச்சிருக்கலாமே ...
எனக்கெதுக்கு
வைக்கணும் ....?'

- 'தாத்தாவோட ஜாடை
உனக்குத்தானிருக்கு...
இந்த அழகுச் சிரிப்பு
ஒண்ணு போதுமே...?'

- பிறகு இவன்
கேள்வி கேட்கவில்லை...
வேர்களைத் தேடிக்
கண்டடைந்த ஆனந்தம்..!'

நூல் விமர்சனம்

**கவிஞர் மருத்துவர். செல்லம் ரகு**

இலங்கை வரவான

# இவள் கிறுக்கி

கவிதை தொகுப்பு...

**கவிஞர் நிரோஜினி பரமேசுவரன்**




என் வாசிப்பனுபவத்தில்.....

எழுத்தாளனால் இச்சமூகத்திற்கு ஒரு நல்ல சிந்தனையை விதைக்க முடியும். விதைத்த சிந்தனையால், ஒரு நல்ல புதினத்தைத் தர முடியும். ஒரு நல்ல புதினத்தால், சமூகத்தைச் சீர்திருத்த ஒரு சிறுதடையையாவது விலக்க முடியும். அந்த வகையில் தொப்புள்கொடி உறவுகளாய் விளங்கும் எம் இலங்கைத் தமிழ் மக்களில் ஒரு இளந்தளிராகிய, புது வரவாகிய, வளர் படைப்பாளியாகிய, எனக்கு இனிய உறவாகிய, மற்றும் என் அன்பு மகளாகிய நிரோஜினி பரமேஸ்வரனின் முதல் கவிதை தொகுப்புமான *இவள் கிறுக்கி*யை (தலைப்பே அது தான்) வாசிக்கையில் இத்தொகுப்புமொரு விருட்சமாய் சமூகத் தின் மனதில் தாக்கத்தை நிச்சயம் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை துளிர் விடுகிறது. பெயரே அது தான் என என்னும் போது, தன்னடக்கத்தின் எல்லைகளைப் பற்றி அவர் கவலைப்படுவதாகத் தெரிய வில்லை.

கவிதைபுனைபவர்கள்,தமிழ்செவ்வியல் இலக்கியத்தில் தன் வாழ்க்கை சார்ந்து, தனக்குப் பரிச்சயமான, தன்னோடு தொடர்புடைய, தன் சூழ்நிலை சார்ந்த பதிவுகளாகவே அவர்களின் முதல் தொகுப்பு அமையும். அது போலத்தான் அன்பு மகள் கிறுக்கி ஆதிராவின் (இது அவரின் புனைப்பெயர்) கவிதைகளும் தன் நிலம் சார்ந்த, தன் சூழல் சார்ந்த மக்களின் அவலங்களை பேசும் கவிதைகளாகவும், தன் மனம் பாதித்த சமுதாயத்தின் ஏற்ற இறக்கங்களை பேசுபவைகளாகவும் உள்ளன.

இந்நூல் இலங்கையிலிருந்து வந்த நூலாதலால் அதில் எம் மக்களின் விழித் துளிகளின் ஈரமும் படர்ந்தே இருக்கிறது.

தெரியாத புன்னகையில்
அறியாத சுவை இருக்கும் - என்
நிலையான சோகத்திலும்
குலையாத சிரிப்பிருக்கும்.

என தமிழருக்கே உரித்தான இடுக்கண் வருங்கால் நகும் பண்பினை இங்கு கோடிட்டுக் காட்டுகிறார். இத்தொகுப்பில் அன்பு மகளின் பற்பல கவிதைகளிலும் தன்னம்பிக்கை தான் மிளிர்கிறது. நெருப்பிலிட்டுப் பொசுக்கினாலும் மீண்டும் உயிர்த்தெழும் சாகாவரம் பெற்றவர்கள் போல், நம் தமிழ் இன மக்கள் வாழ்வும், அங்கு சிறிது சிறிதாக உயிர்த்தெழுந்து கொண்டு தான் இருக்கிறது. அவர்களின் பண்பாடும் கட்டமைக்கப்பட்டுக்கொண்டு தான் இருக்கிறது என்பதற்கு இந்த இளம்படைப்பாளிகளே ஆகச்சிறந்த உவமை.

நகரும் நாட்களில்
மறைந்த என் கனவுகள்
மிளிரும் ஒரு நாள்
வெற்றி எனும் ஒளிவாங்கி...

சொற்களின் ஊடாக சித்திரம்

வரைபவன் கவிஞன். தன் கைகளுக்கு எட்டாததைக்கூட முயன்று முன்னேறிவெற்றி பெற்று ஒரு ஒளிமயமான வாழ்க்கையை தக்கவைத்துக் கொள்வதில் அவனுக்கு நிகர் அவனே. மான, அவமானங்கள், கிண்டல் மற்றும் கேலிகள் என இச்சமூகம் எது கொண்டு தாக்கிடினும், பொறுமையாய், மிகத் திறமையாய் எதிர்கொண்டு அதனை வென்று தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என உணர்த்தும் அதேவேளையில், அதற்கு மாறாக பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் தன் முன்னேற்றத்திற்கு தடைக்கற்களாய் இருந்தவர்களுக்கு நன்றி சொல்லும் நற்பண்பையும் இங்கு பதிவு செய்கிறார் கவிஞர் ஆதிரா.

வென்றிடும் நாளன்று
கொன்றிடும் பல
ஏளன நாக்குகளை
சுற்றி நின்று
நன்றி சொல்வேன் நான் !

என்கிறார். பசி எனும் கவிதையில் ஒரு ஏழையின் வாழ்வில், வசதி என்ற படிகளை கடக்க முடியாமலேயே அவன் வாழ்க்கை முடிகிறது. முதலாளித் துவத்தின் கோரப் பிடியில் உணவுக்காக உழைத்தே உயிர் மாய வேண்டியுள்ளது. பணத்தால் கொழுத்தவர்களின் குணம் ஏழையின் பசி அறியுமா என ஆதங்கப்படுகிறார்.

பொதுவாக பெண் கவிஞர்கள் எழுதும் கவிதைகள் யாவும் வாழ்வியல், இல்லறம், அன்பு, பண்பு சார்ந்தே புனையப் பட்டிருக்கும் என்பது என் கூற்று. இங்கு கிறுக்கி ஆதிரா அவர்களின் கவிதையும் அகம் சார்ந்தும், தன் சூழல்களின் வலிகள் சார்ந்தும் பேசுகிறது எனில் அது மிகையாகாது.

உயிரோவியம் எனும் கவிதையில்...

முறைகேடான சில
ஓவிய வரைதல்களினால்
சிதறிப்போன
பல சித்திரங்கள்
கதறியபடி, உயிர் உருக
குப்பைகளில்... !

எனமுறைசாராவாழ்வில்நிகழும்அவலங்களை, அதனால் ஏற்படும் விளைவுகளை, அவை விருட்சமாய் வளர்ந்து வாழ்வில் அவமானச் சின்னங்களாய் வாழ்நாள் முழுவதும் படும் அவஸ்தைகளை, தன் உள்ளக் குமுறல்களாய் வெளிப்படுத்த இக் கவிஞர் தவறவில்லை.

காட்டுவாழ் தென்னையிலும்
நாட்டு வாடை வீசிடுதே !
நாட்டு வாழ் மனிதத்தில்
ஏட்டிலும் அதனை காணலையே !
சிரிப்பாய் சிலர் பார்வை
இழிவாய் சிலர் பார்வை
தேடினும் கிடைக்கவில்லை
பக்குவமாய் ஒரு பார்வை !

இந்த மனிதம் எங்கே செல்கிறது? எதை நோக்கிப் போகிறது? என எண்ணுகையில், மரங்களில் காணும் இயற்கை தன்மை கூட இந்த மனித இனத்தில் காணவில்லை. அண்டையரும், அயலாரும், நம் முன்னேற்றத்தில் தடைக்கல்லாய் இருக்கிறார்களே தவிர பக்குவமாய், ஆறுதலாய், உறுதுணையாய், சிறந்த தூண்டுகோலாய் யாரும் இருப்பதில்லை. என இச்சமூகத்தின் மேல் தனக்கு உள்ள பார்வையின் நுட்பத்தை வெட்ட வெளிச்சமாக்குகிறார்.

நாம் இந்த இயற்கையிலிருந்து தானே வந்தோம்! பஞ்ச பூதங்கள் தானே நம் உடல் ! அப்படியிருக்க நமைக் காக்க வேண்டிய பொறுப்பு இந்த இயற்கைக்குத் தானே இருக்கிறது ? பிறகு ஏன் இந்த மழையின்மை, சுட்டெரிக்கும் வெப்பம், பஞ்சம், பசி, பட்டினி, பிணி என கேள்வி மேல் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகிறார் கவிஞர் ஆதிரா. இதன் மூலம் இயற்கையை அரவணைத்துச் சென்றால் இன்பமாக வாழலாம் அன்றி இயற்கையை அழித்து செயற்கையான நாகரீகத்தில் திளைத்தால் கிடைப்பது வெறும் அழிவு மட்டுமே என்பதை *இயற்கையிட்ட சாபம்* என்ற கவிதையின் மூலம் நமக்கு உணர்த்த விரும்புகிறார்.

இன்னும் வஞ்சனை, புதினமாய் நாகரீகம், பொய்மை, கல்லறைக் குமுறல் போன்ற கவிதைகளில் ஆதிரா அவர்தம் சமூக நோக்கு பரந்து விரிந்து நம்மை

வியக்க வைக்கிறது.

நூலின் தலைப்பில் *இவள் கிறுக்கி* என்று பெயரிட்டு விட்டு உள்ளே அனைத்து கவிதைகளையும் நெஞ்சில் ஓவியமாய் பதித்து விட்டுச் செல்கிறார்.

ஒருவருக்கு கவிதை மனம் வாய்ப்ப தென்பதுமிகவும்அரிதானசெயல்.வாழ்வின் நெருக்குதல்களிலிருந்து ஒரு மனிதன் தன்னை மீட்டுக்கொள்ளவே ஒவ்வொரு கணமும் போராட வேண்டிய சூழ்நிலை இன்றளவும் தொடர்கிறது. இத்தகைய சூழ்நிலையில் ஒரு மனிதனுக்கு கவிதை மனம் வாய்ப்பதென்பது மிகச் சிறப்பான விசயம். கவிஞராகும் ஒருவர் போக்கு, மீண்டும் தன்னை ஒரு குழந்தையாக்கி, ஞானியாகி, சமூகத்தின் மேல் அக்கறை உடையவனாக்கி, காலக் கண்ணாடி வழியே உலகின் முப்பரிமாணத்தை நுட்பமாக காட்டும் ஒரு பிம்பமாக மாறும் செயலாகவே இருக்கிறது. சமூகத்தின் அவலங்களை கண்டு வெகுண்டு கேள்வி கேட்பவராக நின்றுவிடாமல், காலத்தைக் கைகொண்டு எழுதுபவனின் வரிகள் காலம் கடந்தும் பேசப்படுகின்றன. எதிர்வரும் காலங்களில், அன்புக்கவிஞர் ஆதிராவின் தொகுப்புகளும் இவ்வாறு பேசப்பட வேண்டும் என்பதே என் ஆவல்.

தமிழ் - தமிழை நேசிப்பவர்களுக்கு அந்த இன்பத்தமிழ் அமுதூட்டி சாகாவரம் பெற்று தருகிறது. இன்னும் நாடு, மலை, கடல் கடந்து சுற்றங்களை சுகிக்கச் செய்கிறது. அந்தவகையில் கடல் கடந்து வந்தசுற்றமானகவிஞர்ஆதிராஅவர்களின் இந்த கவிதைத் தொகுப்பு உலகமெங்கும் பேசப்படட்டும். மேலும் மேலும் பல தொகுப்புகளின் மூலம் ஒரு மிகச் சிறந்த கவி என கொண்டாடப்படட்டும் என்று வாழ்த்துகிறேன்.

விலை : 150/-
பக்கங்கள் : 48
நூல் கிடைக்குமிடம் : யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தக சாலை
மின்னஞ்சல் : aashinyp@gmile.com
தொடர்பு கொள்ள : +94-07671 46597

## தடம் பதிக்கும்
# தன்முனைக் கவிதைகள்

உன் சிறைக்குள்தான்
இருக்கிறது சுதந்திரம்
என்னை வெளியேற்றி
பிரபஞ்சத்தில் அடைத்துவிடாதே
**- ஆரூர் தமிழ்நாடன்**

ஆச்சர்ய குறிகளை
அனுப்புகிறது வானம்
வினாக் குறிகளைப்
பிடித்தபடி விரல்கள்
**- கவிக்கோ துரைவசந்தராசன்**

நான் உறங்கப் போகிறேன்
எழுப்பி விடாதீர்கள்
கனவில் வருவதாக
அவள் சொன்னாள்
**- தட்சணாமூர்த்தி**

இருக்கும் அறிவை
சரியாகப் பயன்படுத்து
ஒருவேளை நாளை
தீர்ந்து போகலாம்
**- இராம வேல்முருகன்**

அம்மாவை வீதியில் தள்ளியவன்
பாலூட்டி வளர்த்த மகன்
ஒருவேளை வைத்த உணவு
கூடவே வருகிறது தெருநாய்..
**- ஐ.தர்மசிங்**

ஒவ்வொரு தோல்விகளுக்கானக்
காரணங்களைத் தேடு
தானாக முளைத்துவிடும்
வெற்றிக்கான வழி
**- அனீஷ் நிர்மல்**

பாடல்களைப் பாடும்
கண்ணிழந்தவன் கைகளில்
விளக்கென ஒளிரும்
என் கவிதைகள்
**- ஆர். ஜவஹர் பிரேம்குமார்**

சுள்ளிகள் வைத்திருப்போர்
தீமூட்ட என்னோடு வாருங்கள்
புல்லாங்குழல் இசைப்பவர்கள் மட்டும்
சற்றுத் தள்ளியே நில்லுங்கள்

**- கா.ந.கல்யாணசுந்தரம்**



# என்னை மறந்தேனோ...

விழிகளும் பேசும் விலகிடா துள்ளம்
மொழியிலாப் பாக்களை மோகமாய்த் தீண்டும்
வழிதொறும் உன்றன் வருகையை யெண்ணிப்
பழகத் துடித்திடும் பார்த்து .

பார்த்ததும் கண்கள் பசலைக்கு மாமருந்தாம்
ஈர்க்கும் விழியீர்ப்பில் இன்பங்கள் ஒன்றாகித்
தீர்க்கும் மனத்தினது தீராத மோகமுள்ளாய்ச்
சேர்க்கும் புவியீர்ப்பைச் சென்று .

சென்றவிடம் தேடிச் செருப்பாகத் தேய்கின்றேன்
முன்னாலும் பின்னாலும் மூடுபனி மூடிடவும்
தன்னால் தெரிகின்ற தாரகையைப் பற்றிட
என்னை மறந்தேனோ எண் .

கனவினில் காதல் கருத்தினில் யானும்
நனவாக மாறிடும் நாளினை நோக்கி
மனத்தினில் என்னவன் மாலையைச் சூட்ட
நினைவெல்லாம் ஏங்கும் நிலை .

ஊடலும் காதலில் உன்னதம் வாழ்வினில்
கூடலில் இன்பம் குறைவிலா உண்மையைத்
தேடலில் நாமும் தெளிவோம் புணர்தலில்
நாடலை நீக்கிடா நட்பு .

## தன்முனைக் கவிதைகள்

கைப்பேசியில்
தட்டச்சு செய்தேன்
அவனது இதயப்பையின்
தமனிகள் ஒளிர்கின்றன

- சாரதா க. சந்தோஷ்

வரிசையாய் நிற்கும்
துடுப்பில்லாப் படகுகள்
கடக்கும் வழி தேடி
கரையில் நான்

- அன்புச்செல்வி சுப்புராஜு

## - சரஸ்வதி பாஸ்கரன்

பண்பைப் புகட்டும் பரிசுத்தக் காதலால்
வண்ணமிகு வாழ்வும் வளமாகு முள்ளத்தில்
எண்ணம் சிறந்தோங்க. ஏற்றமாய் இல்லறம்
திண்ணமாய்ச் சீராகும் தீர்வு .

கற்பின் இலக்கணம் காலத்தால் மாறாது
பொற்புடைய நல்லறங்கள் பொன்போல போற்றுவோம்
நற்குடும்பம் என்றென்றும் நன்னெறிக்குச் சான்றாகும்
சுற்றங்கள் வாழ்த்த சுகம் .

சுகமாக இல்லறங்கள் சூழ்நிலையால் மாறா
இகத்தினில் எல்லோரும் இன்முகமாய் ஏற்பர்
அகத்தினில் அன்பை அடையாளம் கொண்டு
நிகரின்றி வாழ்வராம் நீடு .

தூய்மையான வாழ்வுதான் தூண்டும் நெறிமுறையை
வாய்மையான. பேச்சுதான் வாழ்க்கையை நன்முறையில்
தாய்மையான நெஞ்சத்தால் தாவி நிலைப்படுத்தும்
பாய்விரித்தும் பண்படுவாய்ப் பார் .

நினைவின் அலைகளில் நீங்காத் துயரம்
மனையின் மதிப்பை மறவா தறிய
எனையேநான் சான்றாய் எடுத்தே உரைத்தேன்
வினையால் விலகா விருப்பு .



### தன்முனைக் கவிதைகள்

எனக்குள் ஒடுங்க
என் நிழல் தேடுகிறது
உச்சி வெயிலையும்
நண் பகலையும்
- இளவல் ஹரிஹரன்

சிறகுகள் செய்துவிட்டேன்
வானம் விரிந்துகிடக்கிறது
பறக்கத் தெரியவில்லை
சொல்லிக்கொடு... தும்பியே !
- ஜென்ஸி



# தஞ்சைத் தமிழ் மன்றம்
# ஆண்டு விழா 14.02.2021

தஞ்சைத் தமிழ் மன்றத்தின் இரண்டாம் ஆண்டு விழா பிப்ரவரி மாதம் 14ஆம் நாள் வலங்கைமானில் வடக்கு வீதி யில் உள்ள தென்றல் அரங்கில் நடைபெற்றது. நிகழ்வுக்குத் தஞ்சை த் தமிழ் மன்றத்தலைவர் கவிமாமணி பாலு கோவிந்தராசன் அவர்கள் தலைமை வகிக்க, செயலாளர் பாவலர்மணி இராம வேல்முருகன் அவர்கள் வரவேற்புரை நல்க விழா தொடங்கியது.

முன்னதாக திருமதி சாந்தி வேல்முருகன் திருமதி கண்ணம்மாள் உள்ளிட்டோர் ஒருபுறமும் திரு சிவா ஜி ஏவிஎஸ் சுந்தரராசன் உள்ளிட்டோர் மறுபுறமும் குத்துவிளக்கேற்ற, ஏவிஎஸ் திருபுவனேஸ்வரன் ஏவிஎஸ் தேவநாதன் இருவரும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினர்.

ஆண்டாங்கோயில் ஏவிஎஸ் சுந்தரராசன் குழுவினரின் தமிழிசைப் பாடல்களைத் தொடர்ந்து செல்வி சிவானி செல்வி நித்யஸ்ரீ குழுவினரின் பரதநாட்டியம் நடைபெற்றது.

கவிஞர் கம்பதாசனின் தங்கை மகள் திருமதி சாந்தி இராமலிங்கம் மற்றும் இராமலிங்கம் இருவரும் கம்பதாசன் விருதாளர்களான கவிஞர்கள் புதுவை நெய்தல் நாடன் , புதுவை இராம காந்தி பட்டுக்கோட்டை அன்புவல்லி தங்கவேலர் ஆகியோருக்கு வழங்கினர்.

வலங்கைமான் விஏ சண்முகசுந்தரனார் விருதை வேதாரண்யம் வி ஜி பாலசுப்பிரமணியம் ஆண்டாங்கோயில் ஏவிஎஸ் சுந்தரராசன் ஆகியோருக்கு விஏஎஸ் முருகானந்தம் வழங்கினார்.

ஆர்.கார்த்திக்ராஜ், பி.முத்துக்குமார் வி.கலைவாணன், தி.க.தமிழன்பன் ஆகியோரின் தவிலிசைக் கச்சேரி நடைபெற்றது.

அதன் பின்னர் கீழ்க்காணும் நூல்கள் வெளியிடப்பட்டன.

1. பொற்கை விருத்தம்
- பொற்கைப்பாண்டியன்
வெளியிட்டவர் :
முனைவர் இரா உதயசங்கர்
பெற்றுக் கொண்டவர் :
திரு ஜெனிபர் பவுல்ராஜ்



2. அரியணை
- வெற்றிப்பேரொளி
வெளியிட்டவர் :
திருமதிஜெ.பத்மாவதி
பெற்றுக் கொண்டவர் :
செல்வி ப பா.மலர்க்கொடி




அன்னைத் தமிழ்மொழியை ஆர்த்தெழும் தென்மொழியை
இன்னுயிர் என்றே இயம்பு

3. மகிழ்வின் மந்திரச்சாவி
- திருமிகு பாலு கோவிந்தராசன்
வெளியிட்டவர் :
திருமிகு கருங்கல் கி கண்ணன்
பெற்றுக் கொண்டவர் :
திருமிகு சிந்தைவாசன்



4. பொன்மணிதாசன் கவிதைகள் பாகம்
- பொன்மணிதாசன்
வெளியிட்டவர் :
திருமிகு இராம வேல்முருகன்
பெற்றுக் கொண்டவர் :
திருமிகு செல்வா ஆறுமுகம்




5. எண்மங்கலக் கொத்து
- இராம வேல்முருகன் ( தொகு… ர்)
வெளியிட்டவர் :
திருமிகு சிவா. ஜி
பெற்றுக் கொண்டவர் :
திருமதி சரசுவதி பாஸ்கரன்



6. எழுக தமிழா
- இராம வேல்முருகன்
வெளியிட்டவர் :
திருமிகு சேக்கிழார் அப்பாசாமி
பெற்றுக் கொண்டவர் :
திருமிகு சுப முருகானந்தம்




7. தொலைந்துபோன கவிதை
- இராம வேல்முருகன்
வெளியிட்டவர் :
திருமதி ஜெ.சாந்தி
பெற்றுக் கொண்டவர் :
திருமதி சரசுவதி பாஸ்கரன்



8. இப்படித்தான் விடியும்
- காரைக்குடி கிருஷ்ணா
வெளியிட்டவர் :
திரு. ச.மணிவண்ணன்
பெற்றுக் கொண்டவர் :
திரு இரா.முத்துசாமி



9. ஒலிக்கட்டும் பறை
- காரைக்குடி கிருஷ்ணா
வெளியிட்டவர் :
திருமிகு பொற்கைப் பாண்டியன்
பெற்றுக் கொண்டவர் :
திருமதி இராணி ரமணாதேவி



10. பாரதி பாதையில் பாஞ்சாலி சபதம்
-
வெளியிட்டவர் :
திருமிகு சேக்கிழார் அப்பாசாமி
பெற்றுக் கொண்டவர் :
திருமதி அன்புவல்லி தங்கவேல்



11. வாடாமலர்கள்
- நிறைமதி நீலமேகம்
வெளியிட்டவர் :
இராம வேல்முருகன்
பெற்றுக் கொண்டவர் :
பாலு கோவிந்தராசன்



12. காலத்தென்றல்
- இந்திராணி தங்கவேல்
வெளியிட்டவர் :
திருமிகு கோ நீலமேகம்
பெற்றுக் கொண்டவர் :
திருமதி இலட்சுமி சந்திரன்



13. உணர்வுப்பூக்கள்
- வா.சண்முகம்
வெளியிட்டவர் :
இராம வேல்முருகன்
பெற்றுக் கொண்டவர் :
மரு ச.வசந்த்



14. நிலவைத் தாலாட்டும் இரவுப்பாடகன்
- ஜென்சி செல்வராஜ்
வெளியிட்டவர் :
முனைவர் உதய சங்கர்
பெற்றுக் கொண்டவர் :
திருமிகு ஏவிஎஸ் தேவநாதன்



நெஞ்சத் துணிவேந்தி நேர்மை வழிகாணும்
அஞ்சா மனமே அழகு

15.வள்ளுவர் வழி கவிதைகள்
- கண்ணன் நடராஜன்
வெளியிட்டவர் :
திருமிகு சேக்கிழார் அப்பாசாமி
பெற்றுக் கொண்டவர் :
திருமிகு பாலு கோவிந்தராசன்



16. மகரந்த நினைவுகள்
- செல்வி பிரகாஷ்
வெளியிட்டவர் :
திருமிகு செல்வா ஆறுமுகம்
பெற்றுக் கொண்டவர் :
திருமிகு வி பிரகாஷ்



17. மனதோடு மழைக்காலம்
- தென்பரை தமிழ்ப்பிரியன்
வெளியிட்டவர் :
திருமிகு. சிவா.ஜி
பெற்றுக் கொண்டவர் :
திருமிகு பாலு கோவிந்தராஜன்



18. அழகு நாச்சியார்
- வள்ளி சேர்மலிங்கம்
வெளியிட்டவர் :
திருமிகு வா சண்முகம்
பெற்றுக் கொண்டவர் :
திருமிகு பொன்மணிதாசன்



19. சத்தமில்லாச் சந்தங்கள்
- ச ஜெயலட்சுமி
வெளியிட்டவர் :
திருமதி தென்றல்கவி
பெற்றுக் கொண்டவர் :
திருமிகு ஏடி வரதராசன்



20. குயிலின் ஒற்றையடிப்பாதை
- மு.இரசியா பேகம்
வெளியிட்டவர் :
திருமிகு இராம வேல்முருகன்
பெற்றுக் கொண்டவர் :
திருமதி சரசுவதி பாஸ்கரன்



21.நிறைமாத நிலவு
- முனைவர் தமிழ்ச்செல்வி
வெளியிட்டவர் :
திருமிகு இராம வேல்முருகன்
பெற்றுக் கொண்டவர் :
திருமிகு சிவாஜி




22. வைகறை நிலவு
- வைகறையான்
வெளியிட்டவர் :
திருமிகு செல்வா ஆறுமுகம்
பெற்றுக் கொண்டவர் :
திருமிகு பொன்மணிதாசன்



23. யாதுமாகியே
- க.மணிவண்ணன்
வெளியிட்டவர் :
மரு . பொன்இராஜ்குமார்
பெற்றுக் கொண்டவர் :
மரு.ச வசந்த்



24. தமிழ்நெஞ்சம் புகழாரம்
- ஏ டி வரதராசன்
வெளியிட்டவர் :
திருமதி அன்புவல்லிதங்கவேலர்
பெற்றுக் கொண்டவர் :
திருமிகு சேக்கிழார் அப்பாசாமி



25. கவிதைக்கழகு இலக்கணம்
- இராம வேல்முருகன்
வெளியிட்டவர் :
திருமிகு சேக்கிழார் அப்பாசாமி
பெற்றுக் கொண்டவர் :
திருமிகு பொற்கைப்பாண்டியன்



26. கருப்பு
- முத்து விஜயன்
வெளியிட்டவர் :
திருமதி முத்துவிஜயன்
பெற்றுக் கொண்டவர் :
திருமிகு இராம வேல்முருகன்




தமிழ்நெஞ்சம் வாழி தரணிபுகழ் சூழும்
நிமிர்நெஞ்சம் வாழி நிலைத்து

27.magic key of happiness
- திருமிகு பாலு கோவிந்தராசன்
வெளியிட்டவர் :
திருமிகு கருங்கல் கி கண்ணன்
பெற்றுக் கொண்டவர் :
திருமிகு சிந்தைவாசன்



மதிய உணவுக்குப் பிறகு எண்மங்கலக் கவியரங்கம் நடைபெற்றது. கவி வித்தகர் பொற்கைப்பாண்டியன் மதுரை, கவிமாமணி வெற்றிப் பேரொளி தஞ்சை, கவிஞர் ஏவிஎஸ் தேவநாதன் சென்னை, கவிமாமணி பாலு கோவிந்தராஜன் குடந்தை, பாவலர் மணி இராம வேல்முருகன் வலங்கைமான், பாவலர்மணி கோ.சிவப்பிரகாசம் புதுவை, பாவலர் கண்ணதாச முருகன், கவிஞர் இராணி லட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்னர் பாவலர் சரசுவதி பாஸ்கரன் அவர்கள் தலைமையில் எங்கெங்கு காணினும் சக்தியடா என்ற தலைப்பில் மகளிர் கவியரங்கம் நடைபெற்றது

பாவலர் நிறைமதி நீலமேகம்,
பாவலர் மாலதி திரு
கவிஞர் இந்திராணி தங்கவேல்
கவிஞர் தமிழ்ச்செல்வி
கவிஞர் மு இரசியாபேகம்
கவிஞர் கவிதா அசோகன்
கவிஞர் தென்றல் கவி
கவிஞர் எம் ஆர் ஜெயந்தி
கவிஞர் குடந்தை இராஜலட்சுமி
ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக
சென்னை கண்ணதாசன் பேரவை
நிறுவனர் சிந்தைவாசன்
தமிழ்ப்பட்டறை நிறுவனர் சேக்கிழார் அப்பாசாமி
நிலாமுற்றச் செயல்தலைவர்
தஞ்சைத்தரணியன்
மயிலாடுதுறை தமிழ்ச்சங்க நிறுவனர்
ஜெனிபர் பவுல்ராஜ்
திரைப்பட இயக்குநர் பாவலர்மணி
கோ சிவப்பிரகாசம்
திரைப்படப் பாடலாசிரியர் சி புண்ணியா
அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் முனைவர் முருகன் முனைவர் உதய சங்கர் முனைவர் அகஸ்டின் ஞான ராஜ்
உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அதன் பிறகு சிறப்பு விருந்தினர் மருத்துவர் ஜெய இராஜமூர்த்தி அவர்கள் சிறப்புரை ஆற்றி கவிஞர்களுக்கும் விருதாளர்களுக்கும் விருதுகளை வழங்க பொருளாளர் வா சண்முகம் நன்றி கூறினார்.

தஞ்சை மீனாட்சி மருத்துவமனை மற்றும் மதுரை மீனாட்சிமிசன் மருத்துவமனை இரண்டிலிருந்தும் வருகை தந்த மருத்துவக் குழுக்கள் விழாவுக்கு வந்தவர்களுக்கு மருத்துவப் பாதுகாப்பும் மருத்துவப் பரிசோதனையும் செய்தனர். இரத்த தானமும் நடைபெற்றது.

கீழ்க்காணும் விருதுகள் விழாவில் வழங்கப்பட்டன.

## விருதுப்பட்டியல்

தமிழ்ப்பணிச் செம்மல் விருது

திருமிகு ஜெய.இராஜமூர்த்தி
திருமிகு சிந்தைவாசன்
திருமிகு சேக்கிழார் அப்பாசாமி
திருமிகு ஜெனிபர் பவுல்ராஜ்
திருமிகு கு தமிழரசு
முனைவர் க முருகன்
முனைவர் இரா உதயசங்கர்

எழில்கொஞ்சும் பாக்கள் இனித்திருக்கும் நெஞ்சில்
விழிதேடும் பூவாய் விரிந்து

கல்விச் செம்மல் விருது
திருமிகு செல்வம் சிதம்பரம்
திருமிகு சிவராமகிருஷ்ணன்

கவிச்செம்மல்
அரங்க முருகையன்

ஆய்வறிஞர் செம்மல்
உரு அசோகன்
ஏ.எழில்வசந்தன்

கவித்தென்றல் விருது
திருமிகு சி புண்ணியா
திருமிகு சிவா ஜி

முழவிசை வேந்தர்
திருமிகு பி எஸ் வி வெங்கடேசன்
குத்தாலம்
இருமுகமுழவிசைமணி
திருமிகு க மணி

சேவைச்செம்மல்
மரு ச வசந்த்
மரு பொன் இராஜ்குமார்
திருமிகு க சேதுராமன்
திருமிகு ஜாகிர் உசேன்

தவிலிசை மணி விருது
செல்வன் ர கார்த்திக்ராஜ்
செல்வன் பா முத்துக்குமார்



செல்வன் வே கலைவாணன்
செல்வன் தி க தமிழன்பன்

நாட்டியமணி
செல்வி சி பி ஷிவானி
செல்வி ஆ நித்யஸ்ரீ

இளம்கலைமணி விருது
செல்வன் செ சு விஜயசாரதி
செல்வன் ந சியாம்சுந்தர்

சமூகக் காவலர் விருது
லோட்டி நிறுவனம் சென்னை
மீனாட்சி மிசன் மருத்துவமனை மதுரை
மீனாட்சி மருத்துவமனை தஞ்சாவூர்

கலை வித்தகர் விருது
திருமிகு முத்து விஜயன்

ஒளி ஓவியர் விருது
திருமிகு செந்தில் குமார்
திருமிகு முத்துச்சாமி

எண்மங்கலச் சிகரம் விருது
கவிஞர்கள்
பொற்கையார்
துரைவசந்தராசன்
வெற்றிப்பேரொளி
பாலு கோவிந்தராசன்
இராம வேல்முருகன்
கண்ணதாசமுருகன்
சிவப்பிரகாசம்
பத்மினி கேசவ்குமார்

கவிக்குயில் விருது
கவிஞர்கள்
பாவலர் சரசுவதி பாஸ்கரன்
பாவலர் நிறைமதி நீலமேகம்
பாவலர் மாலதி திரு
கவிஞர் இந்திராணி தங்கவேல்
கவிஞர் தமிழ்ச்செல்வி
கவிஞர் மு இரசியாபேகம்
கவிஞர் கவிதா அசோகன்
கவிஞர் தென்றல் கவி
கவிஞர் எம் ஆர் ஜெயந்தி
கவிஞர் குடந்தை இராஜலட்சுமி



தஞ்சை தமிழ்மன்றம் நடத்திய இரண்டாம் ஆண்டுவிழாவில் தமிழ்நெஞ்சம் இதழின் ஐம்பது ஆண்டுகால தமிழ் சேவையைப் பாராட்டி. ஐம்பது வெண்பாவிலும் அமின் அவர்களின் தமிழ் ஆர்வத்தைப் பாராட்டி இருபது வெண்பாக்களிலும் பாடிய ஒரு அழகான புகழாரம் தனி நூலாக்கப்பட்டு அந்நூலை அன்புவல்லி தங்கவேலன் அவர்கள் வெளியிட தமிழ்ப் பட்டறை நிர்வாகி திரு சேக்கிழார் அப்பாசாமி பெற்றுக்கொண்டார் மேலும் நூலாசிரியரும் வெண்பா வேந்தருமான ஏடி வரதராசன் அவர்களுக்கு பெருந்தகைகள் மற்றும் சபையோர்கள் முன் வெண்பா கொண்டல் விருதும் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

வரதராசன் அவர்களின் தமிழாற்றல் மேன்மேலும் வளர தமிழ்நெஞ்சம் ஆரிசியர் குழுவின் சார்பாக வாழ்த்துகிறோம்.

வெண்பால் மனத்தோனே; வேர்வரையில் செந்தமிழால்
வெண்பா புனையும் விரலோனே; - என்பால்
உறைந்தோனே; நட்பில் உயர்ந்தோனே; நெஞ்சில்
நிறைந்தோனே பண்ணொடுவாழ் நீடு



















சசிகலா திருமால்

# நம்பிக்கையே பலம்...

பலம் கொண்ட மட்டும்
முட்டி மோதி
மண்ணைத் துளைத்து துளிர்க்கும்
சிறு விதைக்கும்
நம்பிக்கையே ஆணிவேர்...
பாறையில் இடுக்கில் விழும் எச்சத்தில்
ஆலமரமே வரும் பட்சத்தில்
உன் நம்பிக்கையை வெல்ல
நிச்சயமாக இவ்வுலகில் யாருமில்லை...

உறுப்பு சில குறைந்தாலும்
உடனிருக்கும் நம்பிக்கை..
நம்பியவரை எந்நாளும்
கைவிடாது நம்பிக்கை...
எண்ணங்களைத் திட்டமிட்டு
நம்பிக்கையை விதைத்திடு..
வெற்றி பயிருக்கு
வலிகளை உரமாக்கு...
வெற்றியை உனதாக்கு...



பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com
மார்ச் 2021



**வேதம் படிக்கும்போதும்**
**விலகாத உன் நினைவை**
**பிரார்த்தனைக்குள் திணித்து**
**புனிதப் படுத்துவதைத் தவிர**
**வேறொன்றும் செய்யத் தெரியாத**
**பெரும் பாவி நான்...!!!**

*– கிறிஸ்டினா அருள்மொழி*